5

# பாடு அனுபவிக்கும் தேவ பிள்ளைகள் என்ற வகையில் நடந்து கொள்ளுதல் (பாகம் 2)

## (3:1-22)

*கீழ்ப்படிதல் பற்றிய கலந்துரையாடல் பேதுருவை, விசுவாசிகள் குடிமை அதிகாரிகளுக்கு மதிப்பையும் கீழ்ப்படிதலையும் காண்பிக்கும்படியும், அடிமைகள் தங்கள் எஜமனார்களை மதித்து கீழ்ப்படியும்படியும் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளும்படி வழிநடத்தியிருந்தது. அடிமைகளின் துன்பங்கள் அவரை, கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிச் சிந்திக்கும்படி வழிநடத்தியிருந்தது, ஆனால் 3ம் அதிகாரத்தில் அவர் கீழ்ப்படிதல் என்ற பாடக்கருத்திற்குத் திரும்பினார், இந்த வேளையில் அது மனைவியர் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பதாக இருந்தது. அடிமைகளுக்கும் மனைவியருக்கும் அவர் கொடுத்த புத்திமதிகள் வீட்டு வட்டாரத்தில் இருந்தன, ஆனால் மனைவியர் தங்கள் கணவர்களுடன் கொண்டுள்ள உறவுமுறையானது, அடிமைகள் தங்கள் எஜமானர்களுடன் கொண்டுள்ள உறவுமுறைபோன்று இருத்தல் மிகவும் அரிதாகும். உணர்வுப்பூர்வப் பிணைப்புகளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மறுபடியும் மறுபடியும் செய்யப்படும் சமூக நிகழ்வுகளும், கணவன்/மனைவி உறவுமுறையின் சிக்கலை அதிகப்படுத்துகின்றன.*

### மனைவியர் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் *(3:1-6)*

**[1]அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து. [2]போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள்.
[3]மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், [4]அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. [5]இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த**

***பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். [6]அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.***

*__வசனம் 1. அந்தப்படி__ அதாவது, எல்லாக் கிறிஸ்தவர்களும் அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், மற்றும் அடிமைகள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்றபடியே, __மனைவிகளே__ உங்கள் __சொந்தப் புருஷர்களுக்குக்__ கீழ்ப்படிந்திருங்கள் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார். இல்லத்தில் ஒழுங்குமுறைமை மற்றும் சமாதானம் ஆகியவற்றிற்காக அவர்கள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும். இல்லத்தில் தலைமைத்துவப் பொறுப்பைக் கணவர்களுக்குத் தேவன் கொடுத்துள்ளார் என்பதே பேதுருவின் வார்த்தைகளில் உள்ள மறைமுகக் கருத்தாகும். கணவரின் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்துதல் என்பது, அதி காரத்துவ, எதேச்சாதிகார ஆளுகையை உறுதிப்படுத்துதல் போன்றிருப்பதில் லை. பேதுருவின் அறிவுறுத்துதல்கள் கணவரை அல்ல ஆனால் மனைவியையே இலக்காகக் கொண்டுள்ளன என்பது கவனிக்கத் தக்கது. பேதுரு "கணவர்களே உங்கள் மனைவியரைக் கட்டுப்பாடு செய்யுங்கள்" என்று கூறவில்லை, ஆனால் அவர், "மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்தி ருங்கள்" என்றே கூறினார். கீழ்ப்படிதல் என்பது மனவிருப்பத்துடன் தரப்படும்போது தரத்தைக் குறைப்பதில்லை. ஒரு மனைவி தனது கணவரின் தலைமைத்துவத்தையும் அதன் கருத்துள்ள அதிகாரத்தையும் மனவிருப்பத்துடன் ஏற்றுக்கொண்டால் அன்றி, அதை அவர் (கணவர்) செயல்படுத்த இயலாது - குறைந்த பட்சம் அவர் தாமே கிறிஸ்துவைப் பின்பற்றுபவராக வாழும் போது செயல்படுத்த இயலாது.*

*கீழ்ப்படிதல் என்பது, எஜமானர்கள் தங்கள் அடிமைகள் மீது கொண்டுள்ள மேலாண்மைத்துவத்திற்குச் செய்யும் ஆவிக்குரிய அல்லது மதிநுட்பத்திற்குரிய மேன்மையைக் காட்டிலும், அதிகமான மேன்மையைப் பெண்கள் மீது ஆண்கள் கொண்டிருப்பதாக எந்த மறைமுகக் குறிப்பும் பெற்றிருப்பதில்லை. முறையான சமூக உள் செயல்பாட்டைக் கிறிஸ்தவர்கள் ஆதரித்தல் என்பதே பேதுருவின் அக்கறையாக இருந்தது. எந்த சமூக ஏற்பாட்டிலும், அது ஒரு வணிகம் அல்லது ஒரு வகுப்பறையாக இருந்தாலும்கூட, அங்கு ஓரளவிற்காவது தலைமைத்துவம் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை இருந்தாக வேண்டும். செயல்படும் பொறுப்பை அல்லது அதிகாரத்தை எவரும் கொண்டிராத போது, குழப்பம் ஆளுகை செய்கிறது. கிறிஸ்தவக் குடும்பத்தில் கணவரும் தந்தையும், தமது குடும்பத்தின் ஆவிக்குரிய, உணர்வுரீதியான மற்றும் பொருளாதாரரீதியான நலவாழ்விற்குப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேதுருவும் பவுலும் (எபேசியர் 5:22-6:4; கொலோசெயர் 3:18-21) வேண்டிக்கேட்டுக்கொண்டபோது, அவர்கள் இருவரும் ஒரே சிந்தையாயிருந்தனர். அவர்கள் இருவருமே, ஒரு மனிதரின் தலைமைத்துவப் பணிப்பொறுப்பில் அவரது மனைவி அவரை ஆதரிக்க வேண்டும் என்பதில் மனநிறைவு அடைந்தனர்.*

*மனைவியர் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, நவீன மேற்கத்திய உலகத்தைக் காட்டிலும் பழங்கால*

ரோமானிய உலகத்தில் மிகவும் ஆழமாக வேரூன்றி இருந்தது. [ஆணும் பெண்ணும்] சரிநிகர் சமானம் எனக் கருதும் மேற்கத்தியக் கலாச்சாரத்தில், கீழ்ப்படிதல் என்பது ஒருவரின் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்ற கருத்து, பழங்கால உலகத்தில் இருந்ததைப் போன்று ஏற்புடையதாக இராமல் அதிகம் குற்றப்படுத்தப்படுவதாக உள்ளது. நவீன வாசகர் ஒருவரின் சொந்த சமூகத்தில் உள்ள எழுதப்படாத சட்டங்களில் இருந்து வேதாகம அறிவுத்துதல்கள் கணிசமான அளவு மாறுபாடுவதால், அவற்றைத் தமது சமகால உலகில் எவ்வாறு தாம் நடைமுறைப்படுத்துவது என்று தீர்மானித்தல் அவருக்கு மிகவும் அடிக்கடி கடினமானதாக உள்ளது. இது இந்தக் கேள்வியை முற்றிலுமாக ஆய்வு செய்து பதில் அளிக்கும் இடமல்ல, ஆனால் இப்போதைக்கு நாம், புதிய ஏற்பாடு தனது வாசர்களுக்கு, சமூகக் கட்டமைவுகளின் வரிசை முறை ஒன்றை கொடுப்பதில்குறைவுபடுவதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். கணவர் மனைவிக்கு இடையில் பரஸ்பரம் மனநிறைவு தரும் நிபந்தனைகளில் செயல்படுத்தப்படக் கூடிய குடும்ப விஷயங்கள் பற்றிய கலந்துரையாடலை இந்தக் கீழ்ப்படிதல் என்பது தவிர்த்துவிடுவதில்லை. இது சில வேளைகளில் திருமணம் என்பது பலத்த சித்தமுடைய இருவரால் ஏற்படுத்தப்படுகிறது என்பதன் அங்கீகாரமாக உள்ளது. அந்த விஷயங்களில், கணவரும் மனைவியும் தங்களில் யாருடைய மனவிருப்பம் மேலோங்குகிறது என்று காண்பதற்கு ஒருவர் மற்றவரோடு போராடுகின்றனர். அப்படிப்பட்ட போராட்டமானது வாழ்நாள் முழுவதும் அல்லது விவாகரத்திற்கு வழக்கிடும்வரையில் பெரும்பாலும் தொடர்ந்து நடைபெறுகிறது. மற்ற திருமணங்களில், எவரொருவரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல் என்ற தட்டை நோக்கி அடியெடுத்து வைத்து செயல்பட மனவிருப்பம் கொண்டிருப்பதில்லை. கணவர் தலைமைத்துவத்தின் பொறுப்பைக் கொண்டிருத்தலே இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வாக உள்ளது. அதை அவர் ஏற்றுக்கொள்ளுகிறபோது அவர் தேவனைப் பிரியப்படுத்துகிறார்.

இல்லம் என்பது பேதுருவின் புத்திமதிக்குச் சந்தர்ப்பப் பொருளாக உள்ளது என்ற கருத்தை கவனிக்காமல் விடலாகாது. வணிக உலகத்தைப் பற்றியோ அல்லது மற்ற சமூக கட்டமைவுகளைப் பற்றியோ இங்கு மறைமுகமான குறிப்பு எதுவும் இல்லை. சபையில் பாலினப் பணிப்பொறுப்புகள் பற்றிய வழிகாட்டுதலுக்கு, [புதிய ஏற்பாட்டின்] வேறிடங்களுக்கு நாம் திரும்ப வேண்டும். சபையின் போதித்தல் மற்றும் அதிகாரம் செலுத்துதல் ஆகியவற்றின் விஷயங்களில் ஆண்கள் தலைமைத்துவப் பொறுப்பேற்க வேண்டும் என்று பவுல் எதிர்பார்த்தார் என்பது 1 கொரிந்தியர் 14:34, 35 மற்றும் 1 தீமோத்தேயு 2:11, 12 ஆகிய வசனப்பகுதிகளில் தெளிவாகிறது. இல்லமும் சபையும் தேவன் ஏற்படுத்தி தேவன் கண்காணிக்கும் நிறுவனங்களாக உள்ளன. இவை இரண்டிலுமே தமைமைத்துவத்தைத் தேவன் பின்வரும் அளவிற்கு எளிமைப்படுத்தியுள்ளார்: கிறிஸ்தவ ஆண்கள் உதாரணத்தை முன்வைத்து மற்றவர்களை வழிநடத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்ப்பதாக அவரே (தேவனே) கூறியுள்ளார். இருப்பினும் ஆவிக்குரிய, ஒழுக்கரீதியான அல்லது மனநிலை சார்ந்த வகையில் ஆணோ அல்லது பெண்ணோ ஒருவரைக் காட்டிலும் இன்னொருவர் மேன்மையாக உள்ளனர் என்று மறைமுகமாக உணர்த்தும் வார்த்தை எதுவும்

*இல்லை. இல்லம் மற்றும் சபை தவிர, வெளியே உள்ள உறவுமுறைகளில், அது சமூகரீதியாகவோ அல்லது தெய்வீக ரீதியாகவோ இருந்தாலும், அங்கு ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இருப்பதில்லை.*

*மனைவியர் தங்கள் கணவர்களுக் கீழ்ப்படிய வேண்டும் என்ற பேதுருவின் புத்திமதி, வேலையாட்கள் தங்களை வேலைக்கு அமர்த்தியவர்களுக்கு அல்லது குடிமக்கள் தங்கள் நாட்டில் நியமிக்கப்பட்டுள்ள சட்டங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதைக் காட்டிலும் எந்த வகையிலும் முன்னணி வகிப்பதில்லை. தற்கால மேற்கத்திய கலாச்சாரத்தில், ஒரு மனைவி கணிசமான ஊதியம் பெறலாம், வணிகம் அல்லது அரசாங்கத்தில் பொறுப்புள்ள பதவி ஒன்றை வகிக்கலாம் அல்லது அவள் மிக அற்பமான வேலை ஒன்றைச் செய்யலாம், அவள் இல்லத்தில் ஒரு முழுநேரப் பணி செய்யலாம் அல்லது தனது கணவரைச் போன்ற, எட்டு மணிமுதல் ஐந்து மணிவரை செய்ய வேண்டிய வேலை ஒன்றைக் கொண்டிருக்கலாம். அவளது பணியோ அல்லது பிற பொறுப்புக்களோ என்னவாக இருந்தாலும், கிறிஸ்தவப் பெண்ணானவள் தனது கணவரைக் குடும்பத்தின் தலைவர் என்ற முறையில் ஊக்குவித்து ஆதரிக்க வேண்டும் என்பதே கிறிஸ்தவப் பெண்ணுக்குப் பேதுரு விடுத்த வேண்டுகோளாக உள்ளது. பழங்காலப் பெண்ணுக்குப் போலவே இந்தப் புத்திமதி நவீனகாலப் பெண்ணுக்கும் ஏற்புடையதாக உள்ளது.*

*சிலவேளைகளில் ஒரு ஆண், கணவர் அல்லது தந்தை என்ற வகையில் தாம் கொண்டுள்ள பொறுப்பை தவறாகப் பயன்படுத்தவோ அல்லது கைவிட்டு விடவோ கூடும் என்பது உண்மையே. கணவர் கருத்தற்றவராக. பொறுப்பற்றவராக அல்லது கொடுமையானவராக இருக்கும்போது, கிறிஸ்தவ மனைவி தன்னால் முடியுமளவுக்கு ஆவிக்குரிய தலைமைத்துவத்தை தனது குடும்பத்திற்கு வழங்க வேண்டும். கணவர் விசுவாசியாக இல்லாதிருந்து மனைவி விசுவாசியாக இருக்கும்போது, அவள் தனது கணவரில் காணும் நற்தன்மை எதையும் ஆதரித்து ஊக்குவிக்க வேண்டும்,* **இதன்மூலம் அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப் படுத்திக் கொள்ளப்படுவார்கள் என்ற வசனம் நிறைவேறும்.** *"திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்" என்பது "சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள்" (4:17). என்பதைப் போன்றதாகவே உள்ளது. இப்படிப்பட்ட விஷயத்தில் கணவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எவ்வித பதில் செயலும் செய்யாதவராக அல்லது அதை நேரடியாக எதிர்ப்பவராக இருப்பார். மனைவி மாத்திரம் கிறிஸ்தவளாக இருக்கும்போது, பழங்கால உலகத்தில் அவளது நிலைப்பாடு ஏற்கனவே இடர்ப்பாடு உள்ளதாக இருந்தது. ஒரு மனைவி தனது கணவரின் மார்க்கத்தைப் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டாளேயன்றி வேறுவழியில் இருக்கும்படி எதிர்பார்க்கப்படவில்லை. கிறிஸ்தவ ம னைவியானவள் தமது சாந்தமும் ஆதரவுமுள்ள நிலைப்பாட்டின் மூலம் தனது கணவருக்கு ஒரு முன்னுதாரணத்தை அமைக்க வேண்டும் என்று பேதுரு எதிர்பார்த்தார். கிறிஸ்தவர் வார்த்தைகளினால் மாத்திரமல்ல ஆனால் நடத்தையினாலும் போதிக்கிறார்.*

KJV வேதாகமம் "போதனையின்றி, ... ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்"

என்ற சொற்றொடரைத் தரவழைத்திருக்கும் ["they also may without the word be won"] விதமானது, தவறாக வழிநடத்துவதாக உள்ளது. "Word" என்ற வார்த்தைக்கு முன்னால் உள்ள "the" என்ற திட்டவட்டச் சுட்டுச்சொல்லானது தேவனுடைய வசனமே இங்கு எழுவாயாக உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கிறது. அவிசுவாசி-யான கணவரின் மனமாற்றத்தில் தேவனுடைய "வார்த்தை" எவ்வித பங்கும் வகிப்பதில்லை என்று பேதுரு கூறவில்லை. NASB வேதாகமம் இதை "without a word" என்று மொழிபெயர்த்தபோது இதற்குச் சரியான கருத்தை அளித்துள்ளது. சில விஷயங்களில், திருமணத் துணைவரில் அவிசுவாசியாக இருப்பவரின் மனமாற்றத்தில் குறிப்பிட்ட எந்த வார்த்தையும் அவரை ஆதாயப்படுத்துவதில்லை என்று பேதுரு கூறினார். மாறாக தேவபக்தியுள்ள நடக்கையினால் ஆதரிக்கப்பட்ட வார்த்தையானது அவிசுவாசியைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும். அவர் "ஆதாயப்படுத்தப்படுதல்" என்பது, ஒரே வேளையில் கிறிஸ்துவின் மகிமைக்கென்றும் கணவரின் இரட்சிப்புக்கென்றும் செய்யப்படுவதாக இருக்கும். பேதுரு கூறியதற்கு மற்ற மறைமுகமான கருத்துக்களும் இருந்தன. பேதுருவின் வாசகர்களில் கணவர்களைக் காட்டிலும் அதிகமாக மனைவியர்கள் இருந்தனர் என்பது மிகவும் சாதாரணமான விஷயமாகும். கிறிஸ்தவ மனைவியர்கள் தங்கள் கணவர்களுக்கு வசனத்தைப் போதிப்பதன் மூலம் அவர்களை ஆதாயப்படுத்தப் பொதுவாக முயற்சி செய்து கொண்டிருந்தனர். கணவர் கிறிஸ்தவராக இல்லாதபோது, மனைவியானவர் தமது கணவரைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்த முதன்முயற்சி செய்வதைப் பேதுரு தெளிவாக அங்கீகரித்தார்.

கிரேக்க - ரோம உலகத்தில் இருந்தவர்களில் அதிகாரமற்றவர்களாக இருந்தவர்கள் - அல்லது குறைந்த பட்சம் மிகக்குறைவான அதிகாரத்தைக் கொண்டிருந்தவர்கள் (ஏழைகள், பெண்கள், அடிமைகள்) - போட்டிக்கடவுள்கள் எல்லாரையும் மற்றும் போட்டிக் தத்துவங்கள் யாவற்றையும் முடிவில் வெல்லக்கூடிய வல்லமையுடன் (கிறிஸ்துவைப் பற்றிய) செய்தியை அறிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தேவனுக்கு முன்பாக எல்லா மக்களும் சமானமாக நிற்கின்றனர் என்ற செய்தியானது கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு உள்ளானதாக இருக்கிறது. மனிதகுலத்தின் மத்தியில் சமானத்தன்மை இருக்க வேண்டும் என்ற தேவன் விரும்புகிறார் என்ற உறுதிப்பாடுதான், நாசரேத்தூர் இயேசுவைச் சேவித்தலுக்குத் தப்பிக்க இயலாத விளைவாக உள்ளது. தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை. அவரது மக்களும் பட்சபாதம் உள்ளவர்களாக இருக்கவேண்டியதில்லை (யாக்கோபு 2:1).

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தைத் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில், கிறிஸ்தவமானது பலத்த விமர்சனங்களைச் சந்தித்தது. அவற்றில் ஒன்று, இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த செல்ஸஸ் என்ற மனிதர் கிறிஸ்தர்களைக் கண்டனம் பண்ணி எழுதிய நீண்ட கட்டுரையாகும். காலங்கள் சென்ற போது, அந்த எழுத்தாக்கம் அழிக்கப்பட்டு மறக்கப்பட்டுப் போயிற்று. இருப்பினும் மூன்றாம் நூற்றாண்டில் எகிப்தின் அலெச்சந்திரியா என்ற நகரில் வாழ்ந்த ஓரிகன் என்ற கிறிஸ்தவர் செல்ஸஸின் எழுத்தாக்கத்தை மறுத்து எழுதினார். ஓரிகன் தமது பதிலுரையில், செல்ஸஸ் கூறுவது என்ன என்பது பற்றி ஒரு சிறந்த கருத்தை நாம் கொண்டிருக்கும் அளவுக்கு, செல்ஸஸின் எழுத்தாக்கத்தை ஓரிகன் அவர்கள் மறுபடியும் குறிப்பிட்டார்.

*செல்ஸஸ் எழுதியவற்றில் ஒரு பகுதி கீழே தரப்படுகிறது:*

> *தனிப்பட்ட வீடுகளிலும்கூட நாம், கம்பளி வேலை செய்பவர்கள், காலணி செய்பவர்கள், சலவைத் தொழிலாளர்கள் மற்றும் மிகவும் கல்வியறிவற்றவர்கள் மற்றும் நாட்டுப்புற வேலையாட்கள் ஆகியோரை நாம் காணுகிறோம், இவர்கள் யாவரும் தங்களுக்கு மூத்தவர்களும் மிகவும் புத்தி கூர்மையுள்ளவர்களுமான தங்கள் எஜமானர்களுக்கு முன்பாக எதையும் கூறத்துணிய மாட்டார்கள். ஆனால் அவர்கள் தனிப்பட்ட வகையில் பிள்ளைகளையும் மதியீனமான பெண்களையும் தங்களுடன் கொண்டிருக்கும்போதெல்லாம், திகைப்புக்குரிய கூற்றுக்களை வெளியிடுகின்றனர், உதாரணமாக அவர்கள் தங்கள் தந்தையர்களும் பள்ளி ஆசிரியர்களும் கூறுவதைக் கவனமாகக் கேட்கக்கூடாது, ஆனால் ஆவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது போன்ற கூற்றுக்களை வெளியிடுகின்றனர்; இவர்கள் மதியீனமாகப் பேசுவதாகவும், உண்மையில் இவர்கள் எதையும் செய்ய அறிவதோ அல்லது கூடுவதோ இல்லை, ஆனால் வெற்றுப் பேச்சை மாத்திரமே மேற்கொள்கின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.*[1]

*இது இவர்களின் மனவிருப்பமாக இருந்திராது, ஆனால் செல்ஸஸ் மற்றும் ஓரிகன் ஆகிய இருவருமே, கிறிஸ்தவத்தின் முதல் சில நூற்றாண்டுகளில் கிரேக்க - ரோமர் உலகத்திற்குக் கிறிஸ்துவை அறியச் செய்த போராட்டத்தில், (ஏழைகள், பெண்கள், அடிமைகள் முதலிய) பலவீனமான மற்றும் அதிகாரமற்ற மக்களின் பணிப்பொறுப்பை உணர்ந்து அறிந்திருந்தனர் என்று இந்தக் குறிப்புரை சாட்சியளிக்கிறது.*

***வசனம் 2.*** *கீழ்ப்படிதல் என்ற மனைவியின்* ***நடக்கையானது*** *அவளுடைய கணவரைக் கிறிஸ்துவுக்கு ஆதாயப்படுத்தலாம், இருந்தாலும் அது* ***பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையாக இருக்க வேண்டும்.*** *மனைவியர் மாத்திரமல்ல ஆனால் பேதுருவின் வாசகர்கள் யாவரும், தங்கள் சமகாலத்தில் வாழ்பவர்களுக்கு ஏற்புடைய சாட்சியமான வாழ்வின் நடக்கையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே பேதுருவின் அக்கறையாக இருந்தது (1:15; 2:12). அவர்கள் கிறிஸ்துவை அணிந்து கொண்டனர் என்பதையும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் இருந்தனர் என்பதையும் புறதெய்வ வணக்கத்து உலகம் கண்டு கேள்விப்பட வேண்டியிருந்தது. விசுவாசிகள் தங்கள் வார்த்தையினாலும் தங்கள் நடக்கையினாலும் தேவபக்தியற்றவர்களிடம் சென்று சேர வேண்டும் என்று பேதுரு எதிர்பார்த்தார். "பார்த்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (epopteuō என்ற) வார்த்தையானது இவ்விடத்திலும் 2:12 லும் பயன்படுத்தப்பட்டுள்ளது ஆனால் புதிய ஏற்பாட்டின் வேறு எவ்விடத்திலும் இவ்வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. இது "பார்த்தல் அல்லது காணுதல்" என்பதைக் காட்டிலும் பலமான வார்த்தையாக உள்ளது. இது கணவர் தமது தலையைத் திருப்பித் தமது மனைவியின் விசுவாச அறிக்கைக்கும் அவள் நடந்துகொள்ளும் வகைக்கும் இடையில் உள்ள தொடர்ப்பைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் சித்திரம் ஒன்றைத் தீட்டுகிறது. வாழ்வில் அவளது "கற்புள்ள நடக்கை"*

*என்பது பாலுறவு நடத்தையில் அவள் குற்றத்திற்கு அப்பாற்பட்டவளாக இருப்பதைக் காண்பிக்கிறது, ஆனால் அந்த வார்த்தை இன்னும் அதிகமான அர்த்தம் தருகிறது. அது குற்றமற்ற தன்மையையும், ஒருமைத்தன்மை மற்றும் வேறு எதினாலும் உடன்பாடு ஏற்படுத்தப்படாத தன்மை ஆகியவற்றைக் கொண்டுள்ள, நற்தன்மையை நோக்கிய நிலைப்பாட்டையும் கருத்தாகத் தெரிவிக்கிறது. கிரேக்கர்கள், அவளது "கற்புள்ள நடக்கை" என்பது "பயத்தினால்" (en phobōi) ஆனதாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். (ஆனால்) மனைவியானவள் தனது கணவர் மீதுள்ள பயத்தினால் ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று பேதுரு அர்த்தப்படுத்தியிருக்க மாட்டார். அவர் "தேவனுக்குப் பயந்திருங்கள்" (2:17) என்ற கட்டளையில் "பயம்" என்ற வார்த்தை கொண்டிருந்த அதே அர்த்தத்துடன் தான் அவ்வார்த்தையை இங்கும் பயன்படுத்தினார். அவள் தனது கணவருக்கு தனது கணவருக்கு மரியாதையும் பணிவிணக்கமும் காண்பிக்க வேண்டும்; ஆனால் அதற்கும் மேலாக அவள், வாழ்வில் தனது தூய்மையான நிலையைக் காணும் தனது கணவர், தேவனுக்கு முன்பாகப் பயன் நிறைந்த மதிப்பு நிறைந்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் வகையில், அவள் தனது நடக்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.* En phobōi *என்ற வார்த்தையை* NASB *வேதாகமம் "மதிப்புநிறைந்த வகையில்" என்று மொழிபெயர்க்கையில் அது இவ்வார்த்தைக்குச் சரியான வகையில் நியாயம் செய்கிறது. (தமிழ் வேதாகமத்தில் இவ்வார்த்தை "பயபக்தியோடு" என்று நியாயமான வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)*

***வசனம் 3.*** *கிறிஸ்தவப் பெண், தான் யாராக இருக்கிறார் மற்றும் தான் கண்களுக்கு விருந்தாக இருப்பதைக் காட்டிலும் அதிகமாக எவ்வாறு நன்னடக்கை உள்ளவளாக இருக்கிறாள் என்பதைப் பற்றி அதிகம் அக்கறை கொள்ள வேண்டும் என்று பேதுரு அறிவுரை கூறினார். தேவபக்தியுள்ள பெண் தன் வாழ்வை "பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கை" யினால் அலங்கரித்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவுக்குள் அவளது* ***அலங்கரிப்பு புறம்பான அலங்காரமாயிருக்கக் கூடாது.***[2] *ஒரு பெண் தனது சரீரத் தோற்றம்பற்றிச் சற்றும் கவலையற்று இருக்க வேண்டும் என்று பேதுருவின் வார்த்தைகள் அர்த்தப்படுத்துவதில்லை. எதிர்பாலினத்தவருக்கு முன்பாகப் பிரியமான வகையில் தோன்றும் வகையில் நடந்துகொள்ளுதல் என்பதே பிரச்சனையாக இருந்தது. பேதுரு பெண்களை மதித்தார் மற்றும் அவர்கள் தாங்கள் யாராக இருந்தனர் என்பதால் தங்கள் கண்ணியத்தையும் அடையாளத்தையும் கண்டறிய வேண்டும் தவிர, தங்களின் அலங்கரிப்பினால் அவற்றைக் கண்டறியத் தேடலாகாது என்றும் அவர் விரும்பினார்.*

*கிரேக்க - ரோம உலகத்தில் அப்போது இருந்த ஒழுக்கநெறியாளர்கள் பேதுருவின் வார்த்தைகளை எதிரொலித்தனர். J. ராம்சே மிகாயேல்ஸ் அவர்கள், பேதுருவின் காலத்தில் வாழ்ந்தவர்களில் ஒருவரான, தத்துவஞானியும் டெல்பி கோயில் பூஜாசாரியுமான புளூடார்க் என்பவரின் வார்த்தைகளை நோக்கிக் கவனத்தை இழுத்தார்: "பொன்னோ அல்லது விலையுயர்ந்த கற்களோ அல்லது இரத்தாம்பரமோ அல்ல, ஆனால் கண்ணியம், நல்ல நடத்தை மற்றும் தன்னடக்கம் ஆகியவையே அவளைக் குணவதி ஆக்குகிறது."*[3] *அதே போன்று பவுலும் பின்வருமாறு எழுதினார்:*

*ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையெறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும் (1 தீமோத்தேயு 2:9, 10).*

பேதுரு தமது காலத்தில் வாழ்ந்த அதிகம் தெளிவான சிந்தனையுள்ளவர்களுடன் ஒரே சிந்தையாக இருந்தார். இங்குமறைமுகமாக ஆண்களுக்கு ஒரு கட்டளையையும் பேதுரு கொண்டிருந்தார். புறம்பான அழகு மற்றும் அலங்கரிப்பு ஆகியவற்றின் மீது அக்கறை கொண்டிருந்த. பெண்களைப் போன்றே அப்படிப்பட்ட விஷயங்களினால் ஈர்க்கப்பட்ட ஆண்களும் இருந்தனர். ஒரு பெண் தனது உடல் தோற்றத்தின் அடிப்படையில் முதன்மையாகத் தன்னை முன்வைக்கும்போது, ஒரு பெண்ணிற்குள் உடல் தோற்றத்திற்கு அப்பால் சிறிதளவே காணும் மனிதர்களை அவள் ஈர்ப்பாள். உடல் தோற்றத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் உறவானது காலங்கள் செல்லும்போது நலிவடைய வாய்ப்பு உள்ளது. ஆண்கள் தங்கள் மனைவியரில் அவர்களின் அலங்கரிப்பைக் காட்டிலும் மேலானவற்றைக் காணவேண்டும் என்பதே அவர்களுக்குப் புத்திமதியாக உள்ளது.

பேதுரு மிகவும் திட்டவட்டமாக இருந்தார். **மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலில்** அலங்கரிப்பு இருக்கலாகாது என்று அவர் கூறினர். ஏறக்குறைய பேதுருவின் காலத்தில் வரையப்பட்டுப் பாதுகாக்கப்பட்டுள்ள ஓவியங்கள், அந்த காலத்தில் நேர்த்தியான பெண்கள் உடை உடுத்திய வகையை விவரிக்கின்றன. பறம்பான தோற்றத்திற்கு மிக அதிகமான கவனம் செலுத்துதல் என்பது நவீனகாலக் கண்டுபிடிப்பல்ல. பேதுருவின் வாசகர்களில் சுமாரான சதவிகிதத்தினர் செல்வந்தர்களாக இருந்தனர் எனவே அவர்கள் அப்படிப்பட்ட ஆடம்பரமான உடைகளை வாங்க முடிந்திருந்தது என்று பேதுருவின் வார்த்தைகளில் ஆலோசனை எதுவும் இல்லை. தோற்றத்தைப் பற்றி அதிகம் அக்கறை கொண்டிருந்த மனநிலையை நோக்கிப் பேதுரு உரைத்தார். அந்த மனநிலையானது ஏழை மற்றும் பணக்காரர் ஆகியோர் மத்தியில் ஒன்றுபோன்றே காணப்படக்கூடும். ஒரு பெண், பொன் மோதிரத்தையும் கடகத்தையும் அணிதல், புது உடைகளை அணிதல் அல்லது தலைமுடியை ஒழுங்கமைத்தல் ஆகியவற்றைச் செய்தல் பாவமாயிருக்கும் என்று அப்போஸ்தலர் இங்கு கூறியிருக்க வாய்ப்பில்லை. மாறாக, இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றிப் பெண்கள் அதிக அக்கறையாக இருக்கும்போது, மிகவும் தீவிரமான விஷயங்களில் தங்கள் கணவர்களுக்குப் பிரியமாயிருக்கும் தங்கள் திறனைக் குறைத்துக் கொள்கின்றனர் என்றே அவர் கூறினார்.

**வசனம் 4.** கிறிஸ்தவ மனைவியர் தங்களின் புறம்பான தோற்றத்தின் அடிப்படையில் மாத்திரம் தங்கள் கணவர்களுக்குப் பிரியமாயிருப்பதைப் பேதுரு விரும்பவில்லை என்பது எதிர்மறையாகும்; அவர்கள் **அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியைச்** செயல்விளக்கப்படுத்த வேண்டும் என்று அவர் விரும்பினார் என்பது நேர்மறையாகும். கீழ்ப்படிதல் வேண்டும் என்று வற்புறுத்துவதன் மூலம் கிறிஸ்தவ மனைவியரிடத்தில் அப்போஸ்தலர் தமது வேண்டுகோளைத் தொடங்கினார், ஆனால் கணவர் யாராக இருக்கிறார் மற்றும் அவர் செய்தது என்ன என்பதால் மாத்திரம் சமமான மந்தமான வேறுபாடற்ற கீழ்ப்படிதலை அவர் எதிர்பார்க்கவில்லை என்பது தெளிவு. ஒரு

*மனைவி தனது கணவர் மீது கொண்டுள்ள செல்வாக்கு அல்ல ஆனால் அவளது நடக்கையே இங்கு பொருட்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. கணவர் தமது நடத்தையினால் மனைவியை உருவாக்குவது போன்றே, மனைவியானவள் தனது வாழ்வின் நடத்தையினால் தனது கணவர் மீது செல்வாக்குச் செலுத்தி அவரை உருவாக்குகிறாள். அவள்* ***இருதயத்தில் மறைந்திருக்கிற குணத்தின் அடிப்படையில்*** *தனது கணவருக்குப் பிரியமாயிருக்கும்போது, தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருவாள். இங்கு அப்போஸ்தலர் பெண்களிடம் இதை உரைக்கையில், இது ஆண்களுக்கும் சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆண்களும்கூடத் தங்கள் மனைவியரைத தங்கள் இருதயத்தில் மறைந்திருக்கும் நற்குணத்தினால் பிரியப்படுத்த வேண்டும். தேவனுக்கு - பொன், வெள்ளி, உடை மற்றும் அலங்காரப்பொருட்கள் போன்ற - புறம்பான விஷயங்கள் பிரியமாயிருப்பதில்லை.*

*மனித இயல்பு பற்றிய நல் எதிர்பார்ப்புள்ள மதிப்பீட்டைப் பேதுரு திகைப்புக்குரிய வகையில் காட்சிப்படுத்தினார். ஒரு கணவர் புறம்பான வகையில் எவ்வித நிலைப்பாடு கொண்டிருந்தாலும், "இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே" அவரது மனைவியின் புறம்பான அலங்கரிப்புக்கு மேலாக அவளது தேவபக்தியுள்ள நடக்கையை மதிப்பிடுகிறது. இந்த உரையானது, மனைவி தனது கணவரின் ஆவிக்குரிய நலன்மீது கொண்டுள்ள பொறுப்பில் ஒரு ஆரோக்கியமற்ற பங்கை அவள்மீது வைப்பதாகக் காணப்படுகிறது. இருப்பினும் சந்தர்ப்பப் பொருளை மறுபடி ஆழ்ந்து சிந்தித்தல் என்பது வாசகரின் கருத்து நோக்கைப் புதுப்பிக்கும். பேதுரு பின்வரும் கேள்விக்குப் பதில் கொடுத்தார்: "ஒரு கிறிஸ்தவ மனைவி தனது கணவரிடத்தில் செல்வாக்குக் கொண்டிருக்கத் தன்னைத் தனது கணவருக்கு எவ்வாறு முன்வைக்க வேண்டும்?" அவர் பின்வரும் கேள்விக்கு பதில் கொடுக்கவில்லை: "சுவிசேஷத்திற்குக் கணவர் எந்தவித செய்கையும் செய்யாதிருக்கும்போது அல்லது சுவிசேஷத்தை அவர் வெறுக்கும்போது, அதற்குக் கணவரா அல்லது மனைவியா, யார் பொறுப்பாளியாக இருக்கிறார்?" சில ஆண்கள் தமது மனைவியின் நடக்கையினால் கிறிஸ்துவின் செயல்விளைவின் மீது மனம் ஈர்க்கப்படும் அளவுக்கு "இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்" கொண்டிராது இருக்கலாம், ஆனால் அவர் அதைக் கொண்டுள்ளது போன்று மனைவி செயல்பட வேண்டியிருக்கும். "இருதயத்தில் மறைந்திருக்கிற குணம்" இருந்தாலும் இல்லாதிருந்தாலும், அதற்காக அவள் வேண்டுகோள் விடுக்க வேண்டும்.*

*"அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே ...* ***தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது****" என்று பேதுரு கூறினார். "தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" என்ன என்பது எல்லாக் கிறிஸ்தவ வாழ்விலும் அக்கறைக்குரிய விஷயமாக உள்ளது. ஒருவர் அணியும் பொன் அல்லது நேர்த்தியான உடை பற்றி தேவன் அக்கறை கொள்வதில்லை. "மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1 சாமுவேல் 16:7). "அழியாத" என்ற வார்த்தையின் பயன்பாடானது, கிறிஸ்தவ மனைவியின் நடத்தைக்கான உடனடி அக்கறையை நித்திய கருத்துநோக்கினுள் வைக்கிறது. பொன் "அழிந்துபோகிற" தாக உள்ளது (1:7); சாந்தமும்*

*அமைதலுமுள்ள ஆவியானது "அழியாத" தாக உள்ளது. "அழியாத" இந்த நடக்கையானது "இயேசுகிறிஸ்து வெளிப்படும்" நாள் வரையிலும் நிலைத்திருக்கும் (1:7); பொன் ஆபரணம் அப்படி இராது. "சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி" என்பதே, பெண்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேதுரு அவர்களிடம் வேண்டிக்கேட்டுக் கொண்டதும், அழியாததுமான பண்பு ஆகும்.*

*ஒவ்வொரு பண்புத்தொகையும் இன்னும் நெருங்கி ஆய்வு செய்யத் தகுதியுள்ளதாக உள்ளது. "சாந்தம்" அதாவது,* "gentle" *என்று* NASB *வேதாகமம் மொழிபெயர்த்துள்ள (praus என்ற) வார்த்தை, பாக்கியங்கள் பற்றிய இயேசுவின் பட்டியலில் உள்ளது (மத்தேயு 5:5). இது சிலவேளைகளில் "தாழ்மை" (அதாவது* "meek"*) என்று மொழிபெயர்க்கப்படுகிறது. சாந்தமுள்ள ஆவி என்பது பலவீனமான ஆவி போன்று இருப்பதில்லை. கிறிஸ்தவ மனைவி தன் கணவருக்குத் தன்னை, மென்மையான மற்றும் அன்பாதரவு கொண்ட நிலைப்பாட்டுடன் கையளிக்க வேண்டும். இது, கீழ்ப்படிதலில் மனம் நோகாது இருக்கும் வகையிலான நிலைப்பாடாகும். தனது சொந்த வழியை வலியுறுத்திக் கொண்டு, "தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற" விஷயங்களைவிட, சுயநிறைவு பற்றி அதிக அக்கறை கொண்டுள்ள நிலைப்பாடானது, சாந்தமான, தாழ்மையான நிலைப்பாட்டிற்கு எதிரானதாக உள்ளது.*

*"அமைதல்"* ["quiet"] *என்று* NASB *வேதாகமம் தரவழைத்துள்ள (hēsuchios என்ற) வார்த்தையானது, 1 தீமோத்தேயு 2:12ம் வசனத்தில் உள்ள பெயர்ச்சொல்லின் பெயர் உரிச்சொல் வடிவமாக உள்ளது: "உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்." "அமைதலாயிருக்க" என்பது நேரடி அர்த்தத்தில் "அமைதலில் இருத்தல்" அல்லது "வாய்பேசாதிருத்தல்" என்று பொருள்படும். இவ்விரு வார்த்தைகளுமே, மனதின் தாழ்மையான, பணிவிணக்கமான வடிவமைப்பைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. பெண்களைப் பொறுத்த வரையில் அவளது கணவரின் சம்மதம் அல்லது ஆசீர்வாதம் இல்லாத நிலையில் கிறிஸ்தவளாகுதல் என்பது கிரேக்க - ரோம சமூகத்தில் மதிப்பிற்குரிய பெண் எடுத்து வைக்கும் தைரியமான அடிவைப்பாக இருக்கும். பணிவிணக்கமும் மதிப்பும் காண்பிக்க மன உணர்வுடன் ஒரு முயற்சியை மேற்கொள்வதன் மூலம் அவள் தனது சுயாதீனம் குற்றப்படுத்தப்படுவதை எதிர்த்து நிற்க வேண்டும் என்று பேதுரு வற்புறுத்தினார். கிறிஸ்தவளாகுதல் என்பது அவளது எதிர்த்து நிற்கும். சுயாதீனமான மனவிருப்பத்தின் விஷயமாக இருக்கவில்லை, ஆனால் அது அவள் தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் அவளது மனவிருப்பத்தின் விஷயமாகவே இருந்தது. இந்த வசனத்தில் "ஆவி" என்ற வார்த்தை அவளுக்குள்ளாக இருக்கும் அழிவற்ற ஆவியைக் குறிப்பதில்லை, ஆனால் இது அவளுடைய உள்ளான இயல்பை, அவளது நிலைப்பாட்டைக் குறிக்கிறது. (காண்க 1 கொரிந்தியர் 4:21; கலாத்தியர் 6:1 இங்கு "சாந்தமுள்ள ஆவி" என்பது சாந்தமான நிலைப்பாட்டைக் குறிக்கிறது.)*

*"சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி" தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாக இருப்பது ஏன்? ஏனென்றால், கணவருக்கு, எஜமானருக்கு அல்லது ஒரு காவலருக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்கும்படி*

அழைக்கும் இதே ஆவிதான் தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் இருப்பவர்களுக்கும் தேவையாக உள்ளது. இந்த நிருபத்தில் பிற்பாடு பேதுரு, நீதிமொழிகள் 3:34ஐக் குறிப்பிட்டார்: "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (5:5). அவர், "ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்றும் கூடுதலாகக் கூறினார் (5:6; காண்க யாக்கோபு 4:10). மேட்டிமைகுணம் என்பது நாட்டின் அதிகாரத்திற்கு, பணியிடத்தின் அதிகாரத்திற்கு, இல்லத்தின் அதிகாரத்திற்கு மற்றும் மீட்பரின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதலைஇடர்பாட்டிற்குஉள்ளாக்குகிறது.தாழ்மைமற்றும்பணிவிணக்கம் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளுதல் என்பது, தேவனுக்குக் கீழ்ப்படிதல் மற்றும் அவருடன் சமாதானமாயிருத்தல் ஆகியவற்றிற்கான பாதையாக உள்ளது. ஒருவர் - மனச்சான்றின் விஷயங்கள் உட்படுத்தப்படாத இடத்தில் - தமது சொந்த முடிவு மற்றும் கருத்திற்குக்குப் பணிவிணக்கம் காண்பிக்காத வரையில் கீழ்ப்படிதல் இருக்க இயலாது, ஏனெனில் அவர் இன்னொருவரின் அதிகாரத்தை மதிக்கிறார்.

**வசனம் 5.** கிறிஸ்தவப் பெண்களிடத்தில் இருக்க வேண்டிய குணம் என்று பேதுரு நாடிய குணமானது, அவர்களின் ஆவிக்குரிய முன்னோர்களிடத்தில் மாதிரியாகக் காணப்பட்ட விஷயம் என்று பேதுரு நினைவூட்டினார். **பூர்வத்தில்** என்பது ஆபிரகாமும் அவரது சந்ததியார்களும் தேவனுடைய மக்களாக இருந்த அந்தக் காலங்களாக இருந்தன (காண்க எபிரெயர் 1:1, 2). சபைக்கும் மக்களுக்குமான தொடர்பும் இஸ்ரவேல் மக்களின் எழுத்தாக்கங்களும் 1 பேதுரு நிருபத்தின் அடிப்படைப் பின்னலிலேயே வேயப்பட்டுள்ளன. வேதாகமத்தில் வரலாறு பதிவுசெய்யப்பட்டுள்ள **பரிசுத்த ஸ்திரீகள்** தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்கையில் தங்களை, சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியினால் அலங்கரித்துக் கொண்டனர். பேதுரு வேண்டுகோள் விடுத்த பெண்களின் பரிசுத்த தன்மை அவர்கள் **தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்ததில்** செயல்விளக்கப்படுத்தப்பட்டது.

பவுலின் நிருபங்களில் விசுவாசம் முக்கியத்துவப் படுத்தப்பட்டிருக்க, "பரிசுத்த ஸ்திரீகள்" "தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தனர்" என்று பேதுரு கூறுவார் என்று எதிர்பார்த்திருக்கலாம். கர்த்தருடைய மறுவருகையின் எதிர்பார்ப்பு, அப்போஸ்தலரின் சிந்தையில் செதுக்கப்பட்டிருந்ததால், அவர் "நம்பிக்கை" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் என்று கூற அதிக வாய்ப்புள்ளது. "தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுத்திருந்த" அவரது வாசகர்கள் (4:19), போன்றே, "பரிசுத்த ஸ்திரீகளும்" கூட "தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்தனர்." அவர்களின் கீழ்ப்படிதலில் மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் நம்பிக்கையிலும் அவர்கள் பேதுருவின் வாசகர்களுக்கு மாதிரியாக இருந்தனர். அடுத்த வசனத்தில் சாராளைக் குறிப்பாக மறைமுகமாய்க் குறித்தலானது, ஆபிரகாம். ஈசாக்கு மற்றும் யாக்கோபு என்ற முற்பிதாக்களின் மனைவியர்களையே பேதுரு தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று கருத்துத் தெரிவிக்கிறது. முதற்பிதாக்கள் இஸ்ரவேலின் தந்தையர்களாக இருந்திருக்கையில், சாராள், ரெபேக்காள், லேயாள் மற்றும் ராகேல் ஆகியோர் இஸ்ரவேலின் தாய்களாக

இருந்தனர். இந்தப்பரிசுத்த ஸ்திரீகள் **தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து இருக்கையில் தேவபக்தியுள்ள நடக்கையினால் தங்களை அலங்கரித்தார்கள்.**

ஒரு பரிசுத்தமான பெண் ஒரு பரிசுத்தமற்ற ஆணைத் திருமணம் செய்துகொண்டுள்ள நிலையின் போதுள்ள காலங்களைப் பற்றிப் பேதுரு கையாளவில்லை. அப்படிப்பட்ட விஷயத்தில் "சாந்தமும் அமைதலுள்ள ஆவியுடன்" கீழ்ப்படிதல் என்பது, அவள் தேவனுக்கு விசுவாசம் நிறைந்த வாழ்வை வாழத் தொடரும்படி அனுமதிக்கும் வரை முறையானதாகவே இருந்தது. கீழ்ப்படிதலைப் பேதுரு இணைத்து வைத்த - குடிமக்களுக்கு, அடிமைக்கு மற்றும் மனைவிக்கு என்ற - இந்த மூன்று பகுதிகளிலும் அவர் நன்கு முறைப்படுத்தப்பட்ட யூகங்களை ஏற்படுத்தினார். பொதுவாக அரசாங்கம், அமைதியான மக்கள் தங்கள் அன்றாட அலுவல்களைச் செய்தல் பற்றி கண்டனம் செய்யவில்லை. பொதுவாக எஜமானர் தமது அடிமை தமது உடமை என்ற காரணத்தைத் தவிர வேறு எதற்காகவும் அந்த அடிமையைத் தவறாகப் பயன்படுத்தியதில்லை. பேதுரு இங்கு உரைத்திருந்த, கணவரும் மனைவியும் கிறிஸ்தவர்களாக இருந்த அல்லது கணவர் கிறிஸ்தவரல்லாதிருந்த குடும்பத்திற்கான விதியானது அந்தக் குடும்பத்திற்கு ஆதரவாகவே இருந்தது. நடபடிகள் 5:28, 29ல் பேதுரு தாம், எருசலேமில் இருந்த அதிகாரிகளுக்குக் கீழ்ப்படியக் கூடாதிருந்த வேளையொன்றைக் கண்டறிந்தார். ஒரு அடிமை தனது எஜமானருக்கோ அல்லது ஒரு மனைவி தனது கணவருக்கோ கீழ்ப்படிய வேண்டாத சூழ்நிலைகளைக் கற்பனை செய்தல் கடினமல்ல.

எவரொருவரும், ஒரு குடிமகன், ஒரு வேலைக்காரன் அல்லது ஒரு மனைவி என்ற வகையில் கீழ்ப்படிய இலேசில் மறுத்துவிடக் கூடாது என்று பேதுரு விவாதித்தார். நல்ல, தேவபக்தியுள்ள வாழ்வை வாழ விரும்புகிறவர்களை, அதிகாரத்தின் முறைப்படியான சங்கிலி போன்ற அமைப்பு பொதுவாக ஆதரிக்கிறது. பின்வரும் இரண்டில் ஒரு காரணத்திற்காக ஒருவர் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய மறுக்கலாம்: (1) அவர் செய்யும்படி அவருக்கு மேல் உள்ள அதிகாரம் அவரிடத்தில் கேட்டுக் கொண்டதைச் செய்யக்கூடாதிருக்கும்படி தேவனால் அறிவுறுத்துதல் பெற்றிருக்கலாம். (2) அவர் தாம் என்ன செய்ய விரும்புகிறாரோ, அதைச் செய்யத் தமது சொந்த மனவிருப்பங்களை உறுதிப்படுத்திப் பின்பற்றுதல் தவிர வேறு மேன்மையான காரியங்கள் அவரிடத்தில் இல்லாதிருக்கலாம். அதிகாரத்திற்கான இந்தப் பிந்திய வகையிலான பதில் செயலானது, கிறிஸ்தவ வாழ்வின் பாகமாக இருக்க முடியாது என்று பேதுரு கூறினார்.

**வசனம் 6.** "பூர்வத்தில்" இருந்த "பரிசுத்த ஸ்திரீகள் தங்களை அலங்கரித்த" வகைக்கு, **சாராள்** என்ற பெண்மணியின் நடத்தை, ஒரு விவரிப்பாக உள்ளது. குறைந்த பட்சம் இந்த விஷயத்திலாவது, சாராளின் நடக்கை கிறிஸ்தவ நடத்தைக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது என்பதால், அவளது நடக்கைக்குப் பேதுருவின் புத்திமதியில் வலிவு கூட்டப்பட்டது. சாராள் தனது கணவருக்குக் கீழ்ப்படிந்து நடந்த விஷயம் ஆதியாகமத்தில் ஒரு குறிப்பிட்ட நிகழ்வைத் தரவழைக்கிறது. ஆபிரகாமின் குடும்பத்தார் மம்ரே என்ற சமவெளியில் கூடாரத்தில் குடியிருந்தபோது, மூன்று மனிதர்கள் அங்கு தோன்றினர். அவர்களுக்கு ஏற்ற உபசரிப்பு அந்த முற்பிதா காண்பித்த பின்பு,

*சாராள் விரைவிலேயே ஒரு மகனைப் பெறுவாள் என்று அவர்கள் அவருக்கு வாக்களித்தனர். அவர்கள் கூறியதை மறைந்து இருந்து கேட்டுக்கொண்டிருந்த சாராள் அந்தக் கருத்தைப் பற்றிச் சிரித்தாள். ஆபிரகாம் மற்றும் சாராள் போன்ற முதிர் வயதான தம்பதியர் ஒரு குழந்தையைப் பெற முடியும் என்பது கற்பனைக்குக்கூட எட்டாத விஷயமாக இருந்தது. இந்த சந்தர்ப்பப்பொருளில் தனக்குத்தானே பேசிக்கொண்ட சாராள், ஆபிரகாமை "என் ஆண்டவன்" என்று குறிப்பிட்டாள் (ஆதியாகமம் 18:12). பேதுரு வலியுறுத்த விரும்பிய கருத்தை "என் ஆண்டவன்" என்ற சொற்றொடர் விவரிக்கிறது. சாராள் **ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி** தனது கீழ்ப்படிதலைச் செயல்விளக்கப்படுத்தினாள்.*

*விசுவாசியான ஒரு மனைவி, அவிசுவாசியான ஒருவருக்குத் திருமணம் செய்விக்கப்பட்ட நிலையில் இருக்கும் சாத்தியக்கூற்றைப் பேதுரு ஆழ்ந்து சிந்தித்திருந்தாலும், அப்படிப்பட்ட கணவரை ஆதாயப்படுத்திக்கொள்ளும் "பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கை" பற்றிய கருத்தை அவர் ஏற்கனவே தெரிவித்திருந்தாலும், அவிசுவாசியான கணவர்களைக் கர்த்தருக்கென்று ஆதாயப்படுத்திக் கொள்ளுதல் என்பது இங்கு பேதுருவின் பாடக்கருத்தாக இருக்கவில்லை. கிறிஸ்தவ மனைவிகள் தங்கள் கிறிஸ்தவக் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருத்தல் என்பதே அவரது பாடக்கருத்தாக இருந்தது. கிரேக்க - ரோம இல்லங்களில் ஆண் ஆதிக்கம் என்பது எழுதப்படாத சட்டமாக இருந்தது என்பதைக் கவனிக்கையில், பெரும்பான்மையான விஷயங்களில் மனைவியர் கிறிஸ்தவ விசுவாசத்தைத் தழுவிக் கொள்வதில் தங்கள் கணவர்களைப் பின்பற்றியிருப்பார்கள் என்று யூகிக்க வேண்டும். சாராள் தன் "கணவரை ஆண்டவன் என்று அழைத்து" அவருக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் என்ற உதாரணம், திருமணத் துணைவர்கள் இருவருமே விசுவாசிகளாக இருந்த சாதாரண சூழ்நிலையை எடுத்துரைத்தது. சில கிறிஸ்தவ மனைவியர்கள், ஆண்களும் பெண்களும் இரட்சிப்பில் சமமான நிலையைப் பகிர்ந்து கொள்வதால், பொருளாதாய உறவிலும் சமான நிலை நிலவிற்று என்று யூகித்திருக்கலாம். விஷயம் அதுவல்ல என்று அப்போஸ்தலர் கூறினார். மனைவியர்கள் சாராளின் உதாரணத்தைப் பின்பற்றித் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார்.*

*ஒப்புவித்தலுக்கும் கீழ்ப்படிதலுக்கும் இடையில் உள்ள வேறுபாடு மிகச்சிறியதாக இருக்கையில், சாராள் ஆபிரகாமுக்கு "ஒப்புவித்து இருந்தாள்" என்று கூறுவதற்கு மாறாக, சாராள் ஆபிரகாமுக்குக் **கீழ்ப்படிந்திருந்தாள்** என்று பேதுரு கூறவேண்டும் என்பது எதிர்பாராததாக உள்ளது. பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிகின்றனர், அடிமைகள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிகின்றனர், மற்றும் குடிமக்கள் சட்டங்களுக்குக் கீழ்ப்படிகின்றனர், ஆனால் மனைவியர்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று சாதாரணமாக புத்திகூறப்படவில்லை. ஒருவேளை அப்போஸ்தலர், தலைபலத்த சில கிறிஸ்தவப் பெண்கள் வலிவார்ந்த கிறிஸ்தவர்கள் இடர்பாடு அடையக்கூடிய வகையில், இல்லத்தில் சுதந்தரம் வேண்டும் என்று வாதிட்டதால், பின்வாசல் வழியாக, "ஒப்புவித்தல்" என்பதற்கு மாறாக "கீழ்ப்படிதல்" என்ற மிகப்பலமான வார்த்தையைத் தவறாக இங்கு போட்டு விட்டாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.*

யூதர்கள், குடும்ப வழித்தோன்றல் காரணமாக ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் பிள்ளைகளாக இருந்தனர். கிறிஸ்தவர்கள், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிந்து இருப்பதால், தீர்க்கதரிசிகள் வழியாக ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொண்டதாக உரிமைகோரினர். அவர்கள் விசுவாசத்தினாலே ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் வாரிசுகளாக இருந்தனர். புறஜாதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் முன்னோர் வரிசையை ஆபிரகாமை நோக்கி தடம் காணக் கூடாதிருந்தபடியால், அவர்கள் ஆபிரகாம் மற்றும் சாராள் ஆகியோரின் பெயரைத் தரித்துக்கொள்ளுதல் என்ற உரிமையானது குறைவான உண்மையாக இருக்கவில்லை. யோவான் ஸ்நானன் கூற்று சரியானதாகவே இருந்தது. தேவன் கல்லுகளில் இருந்தும் கூட ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டாக்கக் கூடியவராக இருந்தார் (மத்தேயு 3:9). புறஜாதிக் கிறிஸ்தவ மனைவியர் சாராளைப் போன்று வாழும்போது, அவர்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்து சரியானவற்றைச் செய்யும்போது, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தனர் என்று அவர்களுக்குப் பேதுரு கூறினார். அவர்கள் சாராளின் பிள்ளைகளாக இருப்பதற்கு நிபந்தனை அம்சம் ஒன்றிருந்தது. **நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.** அவர்கள் சாரளைப் போன்று நடந்து கொண்டால் அவள் பிள்ளைகளாக இருப்பார்கள்.

கிறிஸ்தவ மனைவியர்களுக்குப் பேதுரு தமது புத்திமதியை ஒரு குழப்பமான கூற்றுடன் முடித்தார். அவர்கள் நன்மை செய்து **ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தார்களானால்** அவர்கள் சாராளின் பிள்ளைகளாக இருப்பார்கள் என்று அவர் கூறினார். இந்த இடத்தில் "பயம்" என்ற வார்த்தை வந்தது ஏன்? இன்னமும் சாராள் அப்போஸ்தலருடைய சிந்தையில் இருந்தாளா? அப்படி என்றால், பயப்படாதிருக்கும்படி கிறிஸ்தவ மனைவியருக்குப் போதிக்கும் சாராளின் உதாரணம் பற்றிய விஷயம் என்ன? மற்றும், இந்தக் கிறிஸ்தவ மனைவியரைப் பயமுறுத்தியது என்னவாக இருந்திருக்கும்? சாராளைப் பற்றிய கேள்விக்கு நாம் பதில் அளிக்க முடியும். அவள் தைரியம் மற்றும் அச்சமின்மை ஆகியவற்றிற்கு உதாரணமாகக் காணப்படுவதில்லை என்பதால், இப்போது அவள் சித்தரிப்புக்கு வெளியே இருக்கிறாள் என்று கூறுதல் பாதுகாப்பானது. இன்னமும்கூட, இந்தக் சொற்றொடரைக் கொண்டு பேதுரு அர்த்தப்படுத்தியது என்ன என்பது நிச்சயமற்றதாகவே உள்ளது.

"ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால்" என்பது சாத்தியமான மூன்று அர்த்தங்களைக் கொண்டுள்ளது: (1) ஒருவேளை பேதுரு, கிறிஸ்தவ மனைவியர்கள் தங்களால் இயன்ற அளவுக்குச் சிறப்பாகச் செயல்பட்டு, விஷயங்களைத் தேவனுடைய பராமரிப்பின் கீழ் விட்டுவிட வேண்டும் என்று கூறியிருக்கலாம். இந்த உலகத்தோடு மட்டுப்படுத்தப்படக் கூடியவையாக உள்ள, கவலையும் நிச்சமற்ற தன்மையும் தரும் விஷயங்களைப் பற்றிப் பயப்பட வேண்டாம். நம்பிக்கை மற்றும் நம்பிக்கை வைத்தல் ஆகியவற்றைப் பற்றிய நேர்மறையான கூற்று ஒன்றை அளித்தல் என்பது வழக்கமாக திடீரென்று தோன்றும் வழியாக இருக்கையில், அதுவே பேதுரு கூறியதாக இருந்தது. (2) ஒருவேளை இது, அவிசுவாசிகளான கணவர்களிடம் இருந்து கிறிஸ்தவ மனைவிகள் எதிர்பார்க்கக்கூடிய எதி

*ர்ப்புப் பற்றிய தெளிவற்ற குறிப்பாக இருக்கலாம். பேதுருவின் நிருபத்தைப் பெற்றுக்கொண்டவர்களில் பெருமளவு எண்ணிக்கையில் இருந்தகிறிஸ்தவ பெண்கள், அவிசுவாசிகளான கணவர்களைக் கொண்டிருந்தனர் என்ற கருத்து எதுவும் இவ்வசனப்பகுதியில் இல்லை. சில வசனப்பகுதிகள் இதை நிச்சயமாக்கியுள்ளன. இருப்பினும் சாராள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்து இருந்தாள் என்ற உதாரணத்தைப் பேதுரு பயன்படுத்தியபோது, விசுவாசிகளாக இருந்த கணவர்களுக்குக் கிறிஸ்தவ மனைவிகள் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பேதுரு வேண்டிக் கொண்டதையே அது சுட்டிக்காண்பித்தது. (3) பேதுருவின் வாசகர்கள் எல்லாருமே துன்புற்றுக் கொண்டிருந்தனர் என்பது இந்த நிருபம் முழுவதிலும் தெளிவாகத் தெரிகிறது. கிறிஸ்தவ மனைவியர் எல்லா விசுவாசிகளுடனும் தங்களுக்குள்ளதைப் பங்கிட்டுக் கொண்ட காரணத்தினால், எல்லா விசுவாசிகளையும் பயப்படுத்திய எதிர்ப்பு மற்றும் சோதனைகள் ஆகியவற்றிற்குப் பயப்படத் தேவையில்லை என்று பேதுரு அர்த்தப்படுத்தி இருக்கலாம். தேவன் எல்லாவற்றையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டிருந்தார். அவர், "அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து" (3:14); "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" (4:7); "இவ்வுலகத்தின் பாடுகள் உங்களை அமிழ்ந்துபோகப் பண்ண அனுமதிக்காதீர்கள்" என்று கூறினார்.*

## ***கணவர்களால் மனைவியர் கனப்படுத்தப்படுதல் (3:7)***

**[7]அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.**

*கணவர்களுக்குப் புத்திமதியானது மனைவியருக்குக் கூறப்பட்டதைக் காட்டிலும் அதிகம் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது, ஆனால் இந்த சில வசனங்களில் மாபெரும் பொருள் கையாளப்பட்டுள்ளது. குடும்பத்தில் தலைமைத்துவம் என்பது அதனுடன் பொறுப்பையும் கொண்டுள்ளது. கணவர் குடும்பத்தில் சர்வாதிகாரியாக இருக்க அனுமதி எதுவும் அவருக்குத் தரப்படவில்லை. அவர் தமது மனைவி கூறுவதைக் கவனிக்கவும், அவளைக் கனப்படுத்தவும் மதிக்கவும் வேண்டும்.*

***வசனம் 7.*** *கீழ்ப்படிதலுக்கான முந்திய இரண்டு புத்திமதிகளும், அரசாங்கங்களுக்கும் எஜமானர்களுக்கும் இணையான பொறுப்பைக் கொண்டிருப்பதில்லை. கிறிஸ்தவ மனைவிகள் கீழ்ப்படிய வேண்டும் என்ற ஒன்று மாத்திரமே, கிறிஸ்தவ* ***கணவர்கள்*** *தங்கள்* ***மனைவியரிடத்தில்*** *அக்கறை காண்பித்து அவர்களை மதிக்க வேண்டும் என்ற கட்டளையினால் சமானப்படுத்தப்படுதலை இணைப்பாகக் கொண்டுள்ளது. பழங்கால சமூகத்தைக் கிறிஸ்துவின் போதனைகள் எதிர்கொண்ட போது, அவைகள் பெண்களின் நிலையைக் கணிசமான அளவுக்கு உயர்த்தின.*

ஆண்கள் பெண்களைக் கண்ணோக்கிய கீழ்நோக்கிய வகை பற்றி செயல்விளக்கப்படுத்தும் பல உதாரணங்கள் பழங்கால இலக்கியங்களில் இருந்து அதிகமாகத் தரப்படமுடியும். உதாரணமாக, யூதவரலாற்றாளரான யோசிப்பஸ் அவர்களால் உரைக்கப்பட்ட கூற்று ஒன்று, அவரது ரோம வாசகர்களுக்கு யூதப்பிரமாணம் பற்றிய தகவலை விவரிக்கிறது. இரண்டு அல்லது மூன்று சாட்சிகளினால் ஒரு செயலுக்கான சாட்சியம் நிலைநாட்டப்படலாம் என்று அவர் கூறினார், பின்பு அவர் "ஆனால் பெண்பாலின் சிறுமைத்தனம் மற்றும் முனைப்பு ஆகியவற்றின் நிமித்தம், பெண்களின் சாட்சியம் அனுமதிக்கப்படலாகாது" என்று அவர் கூடுதலாகக் கூறினார்.[4] இன்னொரு இடத்தில் அவர் "எல்லா விஷயங்களிலும் ஒரு பெண் தனது கணவரைவிடத் தாழ்ந்தவளாக இருக்கிறாள்"[5] என்ற கூற்றிற்கு வேதவசனத்தைக் காரணம் கற்பித்துக் கூறினார், ஆனால் வேதவசனம் இப்படிப்பட்ட எதையும் கூறுவதில்லை. எந்த மதிப்பீட்டின்படியும், இப்படிப்பட்ட கூற்றுக்களில் பெண்ணுக்குச் சிறிதளவு மதிப்பே காண்பிக்கப்பட்டது. இதற்கு நேர்மாறாக, கணவர்கள் தங்கள் மனைவிகளும் **அவர்களோடே நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யவேண்டும்** என்று அறிவுறுத்தினார்.

மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது பாடப்பொருளாக இருந்துள்ளதால், **அந்தப்படியே** என்பது, மனைவி கணவருக்குக் கீழ்ப்படிகிறவாறே கணவர் மனைவிக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கலாம், ஆனால் அது இங்கு அர்த்தமல்ல. *Homoios* என்ற கிரேக்க வார்த்தை இங்கு "மேலும்" அல்லது "அத்துடன் கூடுதலாக" என்று அர்த்தப்படுகிறது. மனைவி தனது பகுதியில் தனது கணவருக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும், மற்றும் கணவர் தமது பகுதியில் அவளுடன் **விவேகத்தோடு வாழ வேண்டும்**. "சக சுதந்தரவாளி என்ற வகையில் அவளுக்கு மதிப்பளித்தல்" என்ற அளவிற்கு அவர் அதைச் செய்கிறார். இல்லத்தில் கணவர்களும் மனைவியர்களும் ஒருவரையொருவர் கண்ணியத்துடனும் இரக்கத்துடனும் நடத்த வேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலர் இங்கு ஏற்படுத்தினார்.

கிறிஸ்தவக் கணவர்களும் மனைவியர்களும் ஒரே மீட்பையும் ஒரே நம்பிக்கையையும் பகிர்ந்து கொள்கின்றனர். இல்லத்து வட்டாரத்தில் மனைவியர்கள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும் என்பது, அவர்கள் தேவனுக்கு முன்பாக [தங்கள் கணவர்களுக்கு] சமமாக இருக்கின்றனர் என்பதைத் தவிர வேறு எந்தக் கருத்தையும் தெரிவிப்பதில்லை. **மனைவியானவள் பெலவீனபாண்டமாயிருக்கிறபடியினால்**[6] என்று பேதுரு கணவருக்குக் கூறியபோது,தெளிவாகத் தெரியும் பின்வரும் விஷயத்தை அவர் உரைத்தார்: சாதாரணமாக ஒரு பெண், ஆணைப்போன்று அவ்வளவு பலசாலியாக இருப்பதில்லை. கணவர் தனது மனைவியின் மீது அதிகாரம் செலுத்த வேண்டும் என்று நினைத்தால், அவர் அவ்வகையான நபராக இருந்தால், அவ்வாறு அவர் செய்யக்கூடும். அவர் உடல்ரீதியாகத் துன்புறுத்துபவராக இருக்கக் கூடும். சாராம்சத்தில் பேதுரு, "உங்கள் மனைவியைத் துன்புறுத்த உங்களுக்குப் பலம் உண்டு, ஆனால் அப்படிப்பட்ட

விஷயம் கிறிஸ்தவ நடத்தையின் எல்லைகளுக்கு முற்றிலும் புறம்பே உள்ளது" என்றே கூறினார். கணவர் தமது மனைவியுடன் "விவேகத்தோடு" - அதாவது அறிவின்படி, மதிப்புக் காண்பித்து - வாழும்போது அப்படிப்பட்ட செயல்கள் நடக்காது. ஒழுக்கரீதியாகவோ அல்லது ஆவிக்குரிய கருத்திலோ பெண் "பலவீனமாக" இருப்பதில்லை. 3:1 வசனம் பெண்ணைப் பற்றி ஏதேனும் கருத்துத் தெரிவிக்கும் என்றால் அது, குறைந்த பட்சம் பல சூழ்நிலைகளில் பெண்ணானவள் தனது கணவரைக் காட்டிலும் ஆவிக்குரிய வகையில் அதிகம் பலசாலியாகவே இருக்கிறாள் என்பதே ஆகும். அவள் தனது கணவரைத் தேவனிடத்தில் நெருக்கமாக நடத்தும் சந்தர்ப்பத்தைக் கொண்டிருக்கலாம்.

கிறிஸ்தவக் கணவர் மனைவிக்கு "செய்யவேண்டிய கனத்தைச் செய்ய வேண்டியது" ஏன் என்பதற்கு, அப்போஸ்தலர் இரண்டு காரணங்களைக் கொடுத்தார்: (1) ஏனென்றால் மனைவியர்கள் தங்கள் "கணவர்களுடன் சேர்ந்து நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களா" க இருக்கின்றனர் மற்றும் (2) [கணவரின்] **ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு** இதைச் செய்ய வேண்டும். 1:4ல் அப்போஸ்தலர் தமது வாசகர்களுக்கு, பரலோகத்தில் அழியாத சுதந்தரம் வைக்கப்பட்டுள்ளதை நினைவூட்டினார். மனைவியை "சக சுதந்தரவாளி" என்று அவர் அழைத்தபோது, தேவனுடனான ஒருவரின் உறவுக்கு, பரலோக சுதந்தரம் பற்றிய ஒருவரின் நம்பிக்கைக்கு, அவரது பால்தன்மை எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்துவது இல்லை என்றே கூறினார். இருப்பினும் இன்னமும் கிறிஸ்தவ கணவர் தமது மனைவியைத் தவறாக நடத்துதலைத் தமது அதிகாரத்திற்கு உட்பட்ட நிலையிலேயே கொண்டு இருந்தார், கணவர் தமது மனைவியைத் தவறாக நடத்தினால், அது அவர்மீது தேவன் பிரியமற்றவராக இருக்கச் செய்துவிடும் மற்றும் அவரது ஜெபங்களுக்குத் தடை ஏற்படும். கணவர் தமது மனைவியின் கீழ்ப்படிதலை, அவளைத் தவறாக நடத்துவதற்கு அனுகூலமான விஷயமாக எடுத்துக்கொள்ளும்போது, அவர் தேவனுடன் தொடர்புகொள்ளுதல் கடினமாகிறது, அது சுமையானதாகக் கூட ஆகிவிடுகிறது.

இவ்வசனப்பகுதிக்கும் 1 கொரிந்தியர் 7:5க்கும் உறவு ஒன்று உள்ளது: "உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்." இல்லத்தில் வாழ்வும் தேவனுடன் வாழ்வும் நேர்த்தியாக ஒன்றில் ஒன்றாகப் பின்னப்பட்டுள்ளது. ஒரு ஆண் தமது மனைவியை, கனப்படுத்துதலுக்குக் குறைவாக எப்படி நடத்தினாலும், அவர் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்கிறார். இல்லத்தில் இசைவிணக்கம் இல்லாதபோது, மார்க்க நடவடிக்கைகளில் மிகவும் அத்தியாவசியமான ஜெபம் தடைப்படுகிறது. மனைவியைத் தவறாக நடத்துதல் என்பது ஆணுக்கும் தேவனுக்கும் இடையிலான தொடர்புக்கயிறு அறுந்துபோகக் காரணமாகிறது. மனைவியைத் தவறாக நடத்தும் கணவர் தமது செயல்களுக்குக் கணக்கு ஒப்புவிக்கும்படி தேவன் கேட்டுக்கொள்வார் என்று கூறுதல் அநாவசியமான பலமுள்ள கூற்று அல்ல.

இல்லத்தில் வாழ்வு என்பது இன்னொரு வழியில் ஒருவர் தேவனுடன்

கொண்டுள்ள உறவில் பிரச்சனைகளுக்குக் காரணமாகலாம், இது 1 கொரிந்தியர் 7ல் பவுலினால் உரைக்கப்பட்டுள்ளது. கணவரோ அல்லது மனைவியோ தமது வாழ்வில், தமது துணையுடன் நெருக்கமான உடல், உணர்வு மற்றும் சமூக உறவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம். அது நடக்கிறது என்று தம்பதிகள் நம்புவார்கள் என்றால், அவ்விருவரும் தேவனுடன் தொடர்பு கொள்வதற்காக, தங்களை ஜெபத்தில் ஒப்புக்கொடுப்பதற்காக, சற்றுக்காலம் ஒருவரிடம் இருந்து ஒருவர் பிரிந்திருக்கும்படி பரஸ்பரம் ஒப்புக்கொண்டு அவ்வாறு இருக்கலாம் என்று பவுல் கூறினார். இங்கு 1 பேதுரு 3:7 மற்றும் 1 கொரிந்தியர் 7 ஆகிய இரு விஷயங்களிலுமே, ஆவிக்குரிய வாழ்வும் இல்லத்து வாழ்வும் ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்டுள்ளது தெளிவாகிறது.

தேவன் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்நாள் முழுவதற்குமான திருமணபந்தத்தை ஏற்படுத்துதல் என்பதே தேவனுடைய சித்தமாகும் என்று விவாதிக்கப் பேதுரு நேரம் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. எல்லாத் தரப்புகளின் பகுதியிலும் ஒப்புமை இருக்கும்போது அதைப் பற்றி விவாதிப்பது அவசியமில்லை. ஒருதாரத் திருமணம் என்பது வேதாகமத்தின்படி திருமணத்திற்கான தர அளவையாக உள்ளது. பாலுறவு என்பது தேவனிடத்தில் இருந்து வந்த கொடையாகும். மற்ற கொடைகளைப் போன்றே இதுவும் மகிழ்வுடன் அனுபவிக்கப்படவேண்டும். அதே வேளையில், பாலுறவு என்பது மன இச்சைகளைப் பூர்த்தி செய்தல் என்பதைக் காட்டிலும் மிகவும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. ஆண்களும் பெண்களும் தங்கள் பாலுறவு விருப்பங்களை, திருமணத்தின் உறுதிப்பாட்டுப் பிணைப்புகள் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் வெளிப்படுத்தும் போது, அங்கு அதிக வலுமிக்க இன்பநுகர்ச்சி என்று எதுவும் இருப்பதில்லை. பாலுறவு என்பது வெறும் கேளிக்கை ஆகிறபோது, விரைவிலேயே அது கேளிக்கையாகக் கூட இராது போகிறது. ஒரு நபர் இன்னொருவரைத் தமது வரம்பு கடந்த பாலுறவு இச்சையைத் திருப்திப்படுத்தப் பயன்படுத்துகிறபோது, பிணைப்பு, அன்பு மற்றும் உறுதிப்பாடு/ஒப்புவித்தல் எதுவும் இல்லாதபோது, சிறுமைப்படுத்துதலும் வெறுப்புணர்வுமே விளைவாக உள்ளது. ஒருவேளை தேவன் கொடுத்த வேறு எந்தக் கொடையிலும் பாலுறவில் உள்ளது போன்று நன்மைக்கான மாபெரும் வலிவு இல்லை என்றே கூறலாம். ஒருவேளை இந்த உறவில் நெருக்கம் மற்றும் உறுதிப்பாடு/ஒப்புவித்தல் விலக்கப்பட்டிருக்கும்போது, பொல்லாங்கு செய்தலுக்கு இதைக்காட்டிலும் அதிக வலிவான கொடை வேறு எதுவும் இல்லை என்றும் கூறலாம்.

ஆதியிலே மனிதன் தனிமையாக இருந்தபோது, அவனுக்காக, அவனது துணையாளியாக இருக்கத் தகுதியானவளாகப் பெண்ணைத் தேவன் உண்டாக்கினார். தேவன் பெண்ணைப் படைத்த போது, மனிதனின் பாலுறவு திருப்தி என்பதே அவரது (தேவனுடைய) அடிப்படை அக்கறையாக இருந்திருக்கும் என்றால், அவர் பெண்கள் நிறைந்த ஒரு அந்தப்புறத்தைப் படைத்திருப்பார். ஏதேன் தோட்டத்தில் பலதாரத் திருமணம் இல்லாதிருந்தது. தோட்டத்தில் முதல் தம்பதியர் இருக்கத் தொடங்கினர். அங்கு தேவன், மனித குடும்பத்தை எந்நாளும் வழிநடத்தச் சட்டத்தை முன் அமைத்து வைத்தார்: “இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன்

*மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதியாகமம் 2:24).*

## *நீதிக்காகத் துன்புறுவோர்கள் மீது ஆசீர்வாதம் (3:8-17)*

### *தேவனுடைய ஆசீர்வாதங்களினால் வேண்டப்படும் பரிசுத்தமான வாழ்வு (3:8-12)*

***[8]மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்க முள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, [9]தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். [10]ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, [11]பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன். [12]கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள்வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது.***

*__வசனம் 8.__ இவ்வசனத்தில் பேதுரு, கீழ்ப்படிதல் பற்றிக் கூறப்பட்ட யாவற்றையும் தொகுத்துக் கூற விரும்புகிறார். இவ்வார்த்தைகள், அடிமைகள் அல்லது எஜமானர்கள், மனைவியர் அல்லது கணவர்கள், காவலர்கள் அல்லது தனிக்குடிமக்கள் என்று யாராக இருந்தாலும் எல்லா விசுவாசிகளுக்குமாக உரைக்கப்பட்டன. இதற்கு முந்திய வசனங்களில் பேதுரு, அவிசுவாசிகளிடத்தில் விசுவாசிகளின் நடக்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்று உரைத்திருந்தார். ஒருவர் தமது சக மனிதர்களிடம் நடந்துகொள்ளும் வகையில் இருந்துதான் தேவனுடன் சரியான உறவுமுறை வளருகிறது, ஆனால் கிறிஸ்தவருக்கும் கிறிஸ்தவருக்குமான பிணைப்பு விசேஷித்த கவனத்தைக் கேட்கிறது (காண்க கலாத்தியர் 6:10). கொலோசெயர் 3:12-14ல் பவுல், கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவருடன் நடந்து கொள்ளும் வகைபற்றி அவர்களை வழிநடத்தும் நெறிமுறைகள் பற்றிய மிக விரிவான பட்டியல் ஒன்றை அளித்திருந்தார். பேதுரு நமது பங்கிற்கு ஏற்கெனவே மக்கள் ஒருவர் மற்றவருடன் நடந்து கொள்ளும் வகை பற்றி அவர்களை வழிநடத்தும் மறுவுருவாக்கம் செய்யாத நடக்கை மாதிரிகளின் பட்டியல் ஒன்றை அளித்திருந்தார்: துர்க்குணம், கபடம், வஞ்சகங்கள், பொறாமைகள், புறங்கூறுதல் (2:1). விசுவாசிகள் அடங்கிய சபையாகிற சரீரத்திற்குள் நடந்துகொள்ளும் நடக்கையானது மிகவும் வேறுபட்டதாக இருக்க வேண்டியுள்ளது. பேதுரு பயன்படுத்தும் ஒவ்வொரு வார்த்தையும் உறுதிப்பாட்டை/அர்ப்பணிப்பை வேண்டுகிறது.*

இரட்சிக்கப்பட்டவர்களின் சமூகத்தில் கீழ்ப்படிதல் உள்ள விசுவாசிகள் ஒன்றுகூடி வாழ்வதில், அவர்கள் **ஒருமனப்பட்டவர்களாக** இருக்க வேண்டும். அவர்கள் ஒரே சிந்தை கொண்டிருக்க வேண்டும். "ஒரே சிந்தையுள்ளவர்களாக இருத்தல்" என்று நேரடியாக அர்த்தப்படும் *homophron* என்ற கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்த ஒரே இடத்தில்தான் காணப்படுகிறது. விசுவாசிகளின் மத்தியில் ஐக்கியம் என்பது புதிய ஏற்பாட்டில் ஒருபோதும் முடியாத ஆய்வுக்கருத்தாக உள்ளது. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சபை நடத்துனராக இருந்த இக்னேஷியஸ் என்பவர் தமது வாசகர்கள், "யாழ் என்ற இசைக்கருவியானது எவ்வாறு கம்பிகளுடன் ஒத்திசைவு கொண்டுள்ளதோ, அவ்வாறே அவர்கள் கட்டளைகளுடன் ஒத்திசைவு கொண்டு" இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியதன் மூலம் இந்த வேண்டுகோளை மாதிரிப்படுத்தினார்.[7] கிறிஸ்தவர்கள் "ஒருமனப்பட்டவர்களாக" இருக்க வேண்டும் என்பதற்கான பேதுருவின் அழைப்பானது, பொதுவான நிலைப்பாட்டில் உள்ளதாக, சபையின் மகிழ்வை அனுபவித்தல் மற்றும் சந்தோஷம் ஆகியவற்றைக் களவு செய்யும் சிறு சிறு சில்லறைச் சண்டைகளின் வகைகளுக்குத் தங்கள் முதுகைத் திருப்பிக் காண்பித்தல் ஆகியவற்றிற்கான வேண்டுகோளாக இருந்தது. சபை எதிர்கொண்ட ஒவ்வொரு பிரச்சனையையும் ஒரேமாதிரியாக நினைக்கும்படிக்கு விசுவாசிகளுக்கான அழைப்பாக இது இருந்திருக்கக்கூடும் என்பது அரிது. மாறாக இது மதித்தலுக்கான புத்திமதியாகவும், அறிக்கையிடுதலிலும் கிறிஸ்தவ வாழ்வை நடைமுறைப்படுத்துதலிலும் ஒருவரை ஒருவர் ஆதரித்தல் என்ற முடிவைக் கொண்டுவருதலுக்குமான புத்திமதியாகவும் இருந்தது.

**இரக்கமுள்ளவர்கள்** என்பதற்கான ஆங்கில வார்த்தை *sumpathes* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து தரவழைக்கப்பட்டுள்ளது. பேதுரு தமது வாசகர்கள் ஒருமனப்பட்டவர்களாக இருக்கும்படி மாத்திரமல்ல, ஆனால் அவர்கள் இருதய அளவில் ஒரே வகையான உணர்வுப்பூர்வப் பிணைப்பைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் விரும்பினார். நமது பிரதான ஆசாரியராகிய இயேசு, மனிதரின் பலவீனங்களைக் குறித்துப் பரிதபித்தார் என்று எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் கூறினார் (4:15). பரிதபித்தல் என்பது அங்கீகாரத்திற்கான மறைமுகப்பொருள் எதையும் கொண்டிருப்பதில்லை. ஒருவர், இன்னொருவரின் நடத்தையானது அவரையும் கர்த்தருடைய மக்களின் சபையையும் கனவீனப்படுத்துகிறது என்று நம்பி இணங்கும் அதே வேளையில், அவருடைய பலவீனங்களுக்காகவும் போராட்டங்களுக்காகவும் அவர் மீது பரிதபிக்கலாம். முந்திய வார்த்தைகளைப் போன்றே இந்த வார்த்தையும், அதன் பெயர்ச்சொல் வடிவத்தில் புதிய ஏற்பாட்டில் இந்த ஒரே இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது.

***சகோதர*** என்று NASB வேதாகமம் மொழிபெயர்த்துள்ள (*philadelphos* என்ற) வார்த்தையானது, இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிடுபவர்களைப் பண்புப்படுத்தும், "சகோதர அன்பு" அல்லது "சகோதரப் பரிவு" என்ற பண்பைக் கொண்டிருக்கும்படி அழைக்கிறது. இதேபோன்ற வார்த்தையைப் பேதுரு 1:22ல் பயன்படுத்தினார் என்றாலும், இந்த வடிவத்தில் இவ்வார்த்தை, புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணப்படுகிறது. இந்தப்

*பெயர் உரிச்சொல் இதற்கு முந்திய வார்த்தையை முன்னோக்கி எடுத்துச் சென்று வலுப்படுத்துகிறது. விசுவாசிகள் ஒருவர் மற்றவரின் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளுதல் மட்டுமின்றி, அவர்கள் தங்கள் வாழ்வு, நம்பிக்கைகள் மற்றும் நல்வாய்ப்புகள் ஆகியவை ஒன்றாகக் கூட்டிக் கட்டப்பட்டுள்ள தங்கள் சகோதர சகோதரிகளின் நல்வாழ்வையும் நாட வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒரு குடும்பமாக உள்ளனர்.*

*பழங்காலத்து மக்கள் அடிக்கடி இருதயத்தையல்ல ஆனால் தங்கள் வயிற்றையே உணர்வுகளின் மையமாக நினைத்தனர். அப்போஸ்தலர் பயன்படுத்திய அடுத்த பெயர் உரிச்சொல்லானது, விசுவாசிகள் ஒருவர் மற்றவரிடத்தில் "ஆரோக்கியமான குடல்களை" (eusplanchnos) கொண்டு இருக்கும்படி வேண்டிக்கொண்டது.* NASB *வேதாகமத்தில்* **kindhearted** *என்றுள்ளது, [தமிழ் வேதாகமத்தில் இது மனஉருக்கம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது] இவ்வார்த்தை பழங்கால மருத்துவ இலக்கியங்களில் ஒரு நபர் ஆரோக்கியமான குடல்களைக் கொண்டிருத்தலை நேரடியாகக் குறித்தாலும், இவ்விடத்தில் இது ஒரு நல்ல மொழிபெயர்ப்பாகவே உள்ளது. புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை இவ்விடத்திலும் எபேசியர் 4:32லும் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது, இருப்பினும் "இரக்கம்" அல்லது "இரக்கத்தன்மை" என்று அர்த்தப்படும் மற்ற வார்த்தைகள் சாதாரணமாக உள்ளன. பேதுரு தொடர்ந்து, தமது வாசகர்களின் ஆத்துமாக்களை ஆராய்ந்து பார்த்து, ஆண்களையும் பெண்களையும் ஒன்றுகூட்டும் மிக ஆழமான உணர்வுப்பூர்வமான பிணைப்புகளை விளைவிக்குமாறு அவர்களை அழைத்தார்.*

*இந்தப் பெயர் உரிச்சொற்களின் பட்டியலில் கடைசியாக உள்ள tapeinophron என்ற வார்த்தை விசேஷித்த வகையில் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது.* NASB *வேதாகமம் இதை* **humble in spirit** *என்று மொழிபெயர்க்கிறது. தமிழ் வேதாகமத்தில் இது இணக்கமுள்ளவர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. உலகப்பிரகாரமான கிரேக்க - ரோம உலகமானது சிந்தையில் தாழ்மை என்ற கருத்தின் மீது மதிப்புச் செலுத்தவில்லை. அந்த நாளில் நன்கு வசதியாகப் பிறந்தவர்கள் வெளிப்படையான உரிமைகோருதலைச் செயல்முனைப்புடன் நாடினர். அவர்கள் தங்கள் சாதனைகளை பிரசித்தப்படுத்துதல் பற்றிக் கூச்சப்படவில்லை.*[8] *மேற்கத்தியக் கலாச்சாரத்தில், ஒருவேளை ஒருவர் மேட்டிமை பாராட்டுதல் பற்றி மிகவும் மறைவாக இருப்பதை ஒருவர் அறியலாம். நாம் மிகவும் தாழ்மையாக இருக்கக் கற்றிருக்கிறோமா என்பது சந்தேகமாக உள்ளது. தாழ்மை என்பது, ஒருவர் சரியான விஷயத்தை, அது தமக்குக் கொண்டுவருதலை உரிமைகோருதலுக்காக இன்றி, அதன் உள்ளான மதிப்புக்காக மாத்திரம் செய்தலாக உள்ளது. சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை நோக்கி ஒருவரின் நிலைப்பாடு திசைதிருப்பப்பட வேறுவார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால், இது உள்ளான கண்ணோக்குக்கு அழைக்கிறது. கிறிஸ்தவர் தமது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளும் மற்றவர்களின் நலன் நோக்கிச் செயல்படுபவராக இருக்க வேண்டும்; அவர் நற்சான்று அல்லது உரிமை கோருதல் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது.*

*வசனம் 9.* *அப்போஸ்தலரின் சிந்தனையானது, அவிசுவாசிகளுடன் கிறிஸ்தவர்கள் தொடர்புகொள்ளும் வகையின் திசை நோக்கித் திரும்பத் தொடங்கிற்று. சில வசனங்களுக்குப் பின்பு (3:13) அவர், அடக்கியாளும் உலகத்தை நோக்கி விசுவாசிகளின் நிலைப்பாட்டைப் பற்றிக் குறிப்பிடுவார். முந்திய வசனத்தில் இணைக்கப்பட்ட பண்புகள் யாவும்* **தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும்** *சரிக்கட்டாமல் என்பதுடன் முழுமையற்றவையாக இருந்தன, ஆனால் விசுவாசிகளிடத்திலும் அவிசுவாசிகளிடத்திலும், கிறிஸ்தவர் இப்படிப்பட்ட நடக்கையைக் கொண்டிருத்தலை மறுதலிக்க வேண்டும். அதே வகையாக பதில் செயல் செய்தல் என்பது கிறிஸ்தவரின் விளம்பரப்பகுதியாக ஒருக்காலும் இருக்க இயலாது. ஏற்கனவே பேதுரு, இயேசுவை முன்மாதிரியாகச் சுட்டிக்காண்பித்திருந்தார்: "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (2:23). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், "உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள்" என்று புத்திமதி கூறியிருந்தார் (ரோமர் 12:14). மேலும் அவர், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்" என்றும் கூடுதலாகக் கூறியிருந்தார் (ரோமர் 12:17). ரோமருக்கு எழுதிய நிருபம் மற்றும் 1 பேதுரு நிருபம் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள இணைகருத்துக்கள் கவனிக்கப்பட வேண்டியவையாக உள்ளன.*

*பழைய ஏற்பாடு, பழிவாங்குதலைத் தேவனுடைய கவனிப்பில் நியமிக்கிறது என்பது உண்மையே (உபாகமம் 32:35; நீதிமொழிகள் 20:22), ஆனால் அது பழிவாங்குதலின் சட்டமாகிய lex talionis, என்பதைக் கொண்டு பக்குவமாக உறுதிப்படுத்தப்படுகிறது: "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால், சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழி கொடுக்க வேண்டும்" (யாத்திராகமம் 21:24, 25). சவக்கடலில் கிடைக்கப்பெற்ற சுருள்களில் ஒன்று, "ஒளியின் மக்கள் எல்லாரையும் நேசியுங்கள் ... மற்றும் இருளின் மக்கள் எல்லாரையும் வெறுத்து விடுங்கள்"[9] என்று (கும்ரான்) சமூக மக்களை ஊக்குவித்ததை ஏர்னெஸ்ட் பெஸ்ட் அவர்கள் சுட்டிக்காண்பித்தார். பழிவாங்குதலை ஒழுங்கு நடத்தையின் குறி என்று ஏற்றுக்கொள்ளாமல் அதை இயேசு புறக்கணித்து இருந்தார் (மத்தேயு 5:39). பேதுருவும் இதையே செய்தார். புறங்கூறுதலும் அவமதித்தலும், சபையை அடக்கிப் பணியச் செய்வதற்கான முயற்சியில் புறதெய்வ வணக்கத்தார் பயன்படுத்திய குற்றப்படுத்தும் ஆயுதங்களாக இருந்தன. மிகவும் கொடுமையான புறங்கூறுதல் பரப்பப்பட்டது. கர்த்தருடைய நாளில் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடியபோது, அவர்கள் இரத்தத்தைக் குடித்தனர் என்ற கதை பரப்பப்பட்டது. அவர்கள் ஒரு குழந்தையைப் பலி செலுத்தி மனித மாம்சம் உண்பவர்களாக ஆயினர் என்று சிலர் கூறினர், கிறிஸ்தவர்கள் இதற்கு இதே வகையில் பதில் செயல் செய்திருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட எதிர்த்தாக்குதல் எதையும் அவர்கள் செய்யக்கூடாது என்று பேதுரு கூறினார்.*

*கிறிஸ்தவர்கள், தீமைக்குத் தீமை செய்தல் என்ற பதில் செயலைத்*

தவிர்த்தல் மட்டுமின்றி, அவர்கள் தீமைக்கு நன்மை செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். சபிக்கப்பட்டு அவமதிக்கப்படும்போது, கிறிஸ்துவின் ஆவியைத் தமதாக்கிக் கொண்டுள்ள ஒருவர் அதற்குப் **பதிலாக ஆசீர்வதிக்க வேண்டும்.** இதேபோன்றே "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திரும்பிக்கொடு" என்று இயேசுவும் உரைத்தார் (மத்தேயு 5:39). குற்றம் இழைத்தவர் மீது ஆசீர்வாதத்தை உரைத்தல் என்பது எவ்வித மாறுபாடும் காண்பிக்காமல் இருத்தலைக் காட்டிலும் அதிகமானதை அர்த்தப்படுத்துகிறது. அது, அந்த நபரின் நலத்தை விரும்பி மேம்படுத்துதலை அர்த்தப்படுத்துகிறது. அது, அவர் ஆறுதலாக வாழும்படியான விஷயங்களான - நீண்ட ஆயுளும், நல்ல உடல் நலமும் வளமையும் பெறும்படி வாழ்த்துதலை அர்த்தப்படுத்துகிறது. இதை எதிர்மறையாக உரைத்த பேதுரு, கிறிஸ்துவைப் போன்று வாழுதலை ஊட்டும் விஷயங்களுடன் கசப்பான விஷயங்கள் எதுவும் தங்கிவிடக்கூடாது என்று பேதுரு மறைமுகமாக உணர்த்தினார். "நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு" என்று பவுல் எழுதினார் (ரோமர் 12:21).

அவமதிக்கப்படும்போது "ஆசீர்வாதத்தை" பதிலாகத் தருதல், தீமையை நன்மையினால் வெல்லுதல் என்பது, கிறிஸ்தவ நடைமுறையின் விளம்பில் நிற்பதில்லை. அது மையமாக உள்ளது. அப்போஸ்தலர் தமது வாசர்களுக்கு **நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்** என்று நினைவூட்டினார். "இயேசுகிறிஸ்து வெளிப்படும்" நிகழ்வை நோக்கி ஒரு பார்வை கொண்டவராகப் பேதுரு, விசுவாசிகளுக்கு அவர்களின் சுதந்தரமானது (1:4) அவர்கள் தீமைக்கு நன்மை திரும்பச் செய்யும் இயல்பின் பாகமாக உள்ளது என்று அவர்களுக்கு நினைவூட்டினார். ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதற்குத் தங்களை அவர்கள் ஒப்புக்கொடுத்தபோது, அவர்கள் தழுவிக்கொண்ட வாழ்வின் முக்கியமான பாகமாக அவர்களின் சுதந்தரம் இருந்தது. கிறிஸ்தவர்கள் ஆசீர்வதிக்கும்போது அவர்கள் பதிலுக்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். வாழ்வில் கிறிஸ்துவைப் போன்று வாழும் வழியானது நித்திய ஆசீர்வாதத்தின் முன்னுரையாக இருப்பதில்லை; நித்திய ஆசீர்வாதத்திற்குச் செலுத்த வேண்டிய விலையானது மிகவும் குறைவாக உள்ளது. கிறிஸ்தவ வாழ்வே ஒரு ஆசீர்வாதமாக உள்ளது.

**வசனம் 10.** மேலே உரைக்கப்பட்ட சத்தியத்தை ஆதரிக்கவும், இந்த சத்தியத்தை இன்னுமொரு மேல்மட்டத்திற்கு உயர்த்தவும், அப்போஸ்தலர் சங்கீதம் 34:12-16ஐ மேற்கோள் காண்பித்தார். இந்த மேற்கோள் காண்பித்தலின் பிரதான கருத்தானது, பேதுரு இந்த நிருபத்தில் குறிப்பிட்ட கிரேக்க மொழிபேசும் உலகத்தில் பழக்கத்தில் இருந்த எபிரேயமொழி பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான LXX, ல் இருந்து வந்துள்ளது. 34ம் சங்கீதம் முழுவதுமே, அடக்கப்பட்டவர்களுக்கு, தேவன் தமது மக்களை விடுவிக்கிறார் என்று மறு உறுதிப்படுத்துகிறது, இதுவே பேதுரு, அடக்கப்பட்டிருந்த தமது வாசகர்களுக்கு எடுத்துரைக்க விரும்பிய செய்தியாக இருந்தது. ஏற்கனவே அவர் சங்கீதம் 34:8ன் வார்த்தைகளைத் தரவழைத்திருந்தார்: "கர்த்தர் தயையுள்ளவரென்பதை

நீங்கள் ருசிபார்த்ததுண்டானால்" (2:1). சங்கீதத்தில் உள்ள **நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி**, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற என்பது, இந்த நிகழ்காலத்தில் வாழப்படும் வாழ்வைக் குறிக்கிறது. பேதுருவும் கூட, இந்த காலத்தில் ஒருவர் நல்ல வாழ்வைக் கொண்டிருக்க விரும்பினால், **அவர் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத்தன் உதடுகளையும் விலக்கிக்காத்து இருக்க வேண்டும்** என்று நம்பினார்; ஆனால் பேதுரு இதைக் காட்டிலும் அதிகமானவற்றைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார். விசுவாசம் பார்வையில் இருக்கும் காலம் வரையில், கிறிஸ்தவர் எப்போதுமே தமது கண்களால் முனைந்து முயற்சி செய்கிறார். 1:6-9 மற்றும் 4:12-14ல் உள்ளபடி, விசுவாசிகள் "இயேசு கிறிஸ்து வெளிப்படும் வேளைக்காக" காத்தி ருக்கின்றனர், ஆனால் அதே வேளையில் அவர்களின் சந்தோஷம் சொல்லி முடியாததாக உள்ளது. ஜீவனும் நல்ல நாட்களும் இப்போது உள்ளன, ஆனால் அவை வரும்படி காத்திருக்கவும் செய்கிறோம்.

ஒருவருடைய வாழ்வில் தேவபக்திக்கான அளவுக்கருவியாக நாவு உள்ளது என்பது பற்றிப் பேதுருவும் யாக்கோபுவும் ஒரே சிந்தை கொண்டிருந்தனர். யாக்கோபு, "ஒருவர் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்" என்று கூறினார் (யாக்கோபு 3:2). நாவு கட்டுப்படுத்தப்படாதபோது, ஜீவனும் நல்ல நாட்களும் இருக்க முடியாது என்று பேதுரு குறிப்பிட்ட சங்கீதம் உறுதிப்படுத்துகிறது. புறங்கூறப்படுதல் மற்றும் கெட்ட சிந்தை ஆகியவற்றினால் கிறிஸ்தவர்கள் பாடு அனுபவிக்கும்போது, நாவைக் கட்டுப்படுத்துதல் என்பது தேவபக்தியுள்ள வாழ்விற்கு மிகவும் இன்றியமையாததாக ஆகிறது. தீமையாகப் பேசப்படுதல் மற்றும் வஞ்சனை ஆகியவற்றை அவர்கள் மீளக்கட்டினால், அவர்கள் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறாமற்போவது மாத்திரமல்ல, ஆனால் புறதெய்வ வணக்கத்தவரான தங்கள் அயலகத்தினரிடம் இருந்து கூடுதலாகத் தயவற்ற செயல்களையும் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது.

**வசனம் 11.** கிறிஸ்து தமது மக்கள் வாழும்படி அழைத்துள்ள வாழ்விற்கு, தக்க வகையில் நாவைக் கட்டுப்படுத்திப் பயன்படுத்துதல் என்பது எவ்வளவு முக்கியமானதாக உள்ளதோ, அந்த அளவிற்கு மற்ற அம்சங்களும் உள்ளன. தேவனுடைய மக்கள் (அவர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும்), **பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்கின்றனர்** என்று சங்கீதம் கூறுகிறது. அதுவும்கூட "நல்ல நாட்களைக் காண" விரும்பும் ம னிதரின் நலத்திற்கான விதிகளின் பாகமாக உள்ளது. இயேசு "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" என்று கூறுகையில், குறிப்பிடத்தக்கதான முரண்பாடு போலத் தோன்றும் மெய்யுரை ஒன்றை அளித்தார் (யோவான் 12:24, 25). சுயத்தை நாடும் மனிதர், "தமது வாழ்வை நேசிக்கிற" ஒருவர், அதை இழந்து போகிறார். எதிர்மறையாக, ஒருவர் ஜீவனைக் கொண்டிருக்க விரும்பினால், அவர் "பொல்லாப்பை விட்டு நீங்க வேண்டும்." நேர்மறையாக அவர் "நன்மை

செய்ய வேண்டும்."

ஒருவர் சமாதானத்தை நாடும்போது ஜீவன் விளைகிறது. சங்கீதக்காரருக்கும் பேதுருவுக்கும், சமாதானம் என்பது சந்தேகமற்ற கிறிஸ்தவர் மீது அமையப்பெற்ற மந்தமான பண்பாக இருக்கவில்லை. **சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்** என்ற வார்த்தைகளில் செயல்துடிப்புள்ள, உக்கிரமானதாகக் கூட உள்ள, மிதமிஞ்சிய முயற்சி காணப்படுகிறது. LXX, வேதாகமத்தில் உள்ள *eirene* என்ற கிரேக்க வார்த்தை, *shalom*. என்ற எபிரெய வார்த்தையின் மொழியாக்கமாக உள்ளது. சங்கீதம் 34:14ல் எபிரெய மொழியினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டிருந்த கிரேக்க வார்த்தை (MT, வேதாகமத்தில் 34:15, LXX, வேதாகமத்தில் 33:14), முழுமை, ஆரோக்கியம் மற்றும் ஒருவர் இந்த தமது உலகத்துடன் இசைவிணக்கமான உறவு கொண்டிருத்தல் ஆகிய கருத்துக்களையும் கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் யூதர்களாக இருந்தனர் (லூக்கா இதற்கு விதிவிலக்கு). "சமாதானம்" என்பது அவர்களைப் பொறுத்தமட்டில், எபிரெய மொழிப்பயன்பாட்டைப் பின்பற்றுவதென்றால், வாழ்த்துதல் மற்றும் பிரியாவிடை கூறுதல் ஆகியவற்றிற்கான வார்த்தையாக இருந்தது. சமாதானத்தை வாழ்த்தாகக் கூறுதல் என்பது, ஒருவரின் வாழ்வில் நன்மைகள் மூடிக்கவிய வேண்டும் என்பதற்கான வாழ்த்தாகவும் ஜெபமாகவும் இருந்தது.

சமாதானம் என்பது கலகம் இல்லாத நிலை என்பதைக் காட்டிலும் அதிகமானதாக உள்ளது. அது, உள்ளாக இருக்கும் சமாதானம் என்பதைக் காட்டிலும் அதிகமான, தேவனுடைய பிரசன்னமும் வல்லமையும் தமது பக்கம் உள்ளது என்பதை அறிதலில் இருந்து வருதலாக உள்ளது. சமாதானத்திற்கு எப்போதுமே சமூக அம்சம் ஒன்றுள்ளது. அது மற்றவர்களுடன் சமாதானமாயிருத்தல் என்பதாகும். பாவம் சமாதானத்தை எடுத்துப் போட்டு விடுகிறது. சமாதானமும் நீதியும் சகோதரிகளாக உள்ளன. ஒருநபர் மற்றொருவரைத் தவறாக நடத்த அதிகாரம் கொண்டுள்ளபோது, சமூகத்தின் விதிகளும் சட்டங்களும் அநீதியை நெடுகப் பேணும் வகையில் அமைக்கப்படும்போது, சமாதானம் தவறுகிறது. சமாதானத்திற்கான ஏக்கம் என்பது, மனிதப் பிரச்சனைகளில் நீதி, ஏழைகளை நியாயமாக நடத்துதல், சமூகத்தினால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் வளங்களில் எல்லாரும் பங்கேற்றல் ஆகியவற்றைப் பற்றிய கிறிஸ்தவ அக்கறைக்குச் சாட்சியாக உள்ளது. சமாதானம் என்பது தேவனுடைய மக்களின் சிந்தையில் இருந்து தொலைவில் ஒருக்காலும் இருப்பதில்லை என்பதுவே இங்கு கருத்தாக உள்ளது. பேதுரு, "உங்கள் அனைவருக்கும் சமாதானமுண்டாவதாக" என்று எழுதி தமது இந்த நிருபத்தை முடித்தார் (5:14). 2 பேதுரு நிருபத்தின் முடிவிற்கு அண்மையில் அவர், "... சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" என்ற புத்திமதியை அளித்தார் (2 பேதுரு 3:14). யோவான் தமது மூன்றாவது நிருபத்தை, "உனக்குச் சமாதானம் உண்டாவதாக சிநேகிதர் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள். சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்துவாயாக" என்ற வார்த்தைதளுடன் முடித்தார் (3 யோவான் 15).

இவ்வார்த்தையைப் பேதுரு, வாழ்த்துக்கள் (1:2) மற்றும் ஆசீர்வாதம் (5:14), ஆகியவற்றைத் தவிர, இங்கு மாத்திரமே பயன்படுத்தினார்.

இவ்வார்த்தையை அவர் இங்கு பயன்படுத்தியது விருப்ப நோக்கம் உடையதாக உள்ளது. "சமாதானம்" என்பது கிறிஸ்தவ வாழ்வின் தற்செயலான உபரி உற்பத்தியாக இருந்ததில்லை என்பதைத் தெளிவுபடுத்த அவர் விரும்பினார். இதற்குப் பவுல் முழு கருத்து ஒருமையில் இருந்தார். "ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்தி விருத்தி உண்டாக்கக்தக்கவைகளையும் நாடக்கடவோம்" (ரோமர் 14:19). விசுவாசிகள் மத்தியில் சமாதானம் பற்றிப் பவுல் அக்கறை கொண்டிருந்தார், ஆனால் விசுவாசிகளான அயலகத்தார்களுடன் கிறிஸ்தவர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் சமாதானம் பற்றிப் பேதுரு அக்கறை கொண்டிருந்தார். சமாதானம் தற்செயலாக வந்து விடுவதில்லை. இயேசு, "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறினார் (மத்தேயு 5:9). கிறிஸ்தவர்கள் சமாதானத்திற்கு நேர்மறையான ஊக்குவிப்பாளர்களாக இருக்க வேண்டும் என்பதே உயர்கொள்கையாக உள்ளது, அவர்கள் "கிறிஸ்துவுக்குள் எல்லா ஆண்களையும் பெண்களையும் ஒப்புரவாக்கும்படி ஊழியம் செய்கின்றனர், ஏனெனில் அந்தச் செயல்பாட்டின் மூலமாகத்தான் அவர்கள் மிகச்சிறப்பாகத் தேவனைப் போன்று செய்கின்றனர் மற்றும் தேவன் கிறிஸ்துவுக்குள் தொடங்கியதை முன்னெடுத்துச் செல்கின்றனர் மற்றும் ஆவிக்குள்ளாகத் தொடருகின்றனர்."[10]

பவுல் தமது வாசகர்கள், தங்களுக்கும் மற்ற எல்லா மனிதர்களுக்கும் இடையில் பெரும்பாலும் நற்சிந்தையை விளைவிக்கக் கூடியதான செயல் முனைப்புள்ள வியூகம் ஒன்றை நாடும்படி, அவர்களிடம் வேண்டிக் கேட்டுக்கொண்டார். செயல்முனைப்புள்ள வியூகத்திற்கு, நாவைக் கட்டுப்படுத்துதலும் ஒழுக்கரீதியாக நேரான வாழ்வும் தேவைப்படுகின்றன. எதிர்மறையாக இது, ஒருவர் "பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து" இருத்தலைக் கேட்கிறது. நேர்மறையாக இது, ஒருவர் "நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடருதலை" கேட்கிறது. தேவனுடைய ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்தல் என்பது இதன் விளைவாக உள்ளது (3:9).

**வசனம் 12.** பேதுருவின் வாசகர்களை சங்கீதம் 34 மறு உறுதிப்படுத்திற்று. அவர்கள் கிறிஸ்துவைத் தழுவிக்கொண்டு இருந்தனர் மற்றும் தாங்களும் தங்கள் பிதாக்களும் அறிந்து சேவித்துக் கொண்டிருந்த பழைய கடவுள் யாவரையும் புறக்கணித்திருந்தனர்.விஷயங்கள் கசப்பாக மாறியது ஏன்? இந்த அண்டத்தின் ஒரே தேவன் அவர்களைப் பராமரிக்காமற் போனது ஏன்? "தேவன் உங்களை மறக்கவில்லை" என்று சங்கீதம் கூறுகிறது. விசுவாசம் நிறைந்தவர் சரியானதைச் செய்யும்போது அதைத் தேவன் கண்ணோக்குகிறார். அவர்களின் ஜெபங்களைத் தேவன் கேட்கிறார். மற்றும், **"தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது."** நியாயத்தீர்ப்புச் செய்யக் கர்த்தர் திரும்ப வரும்போது, நீதிமான்களை அடக்கி ஒடுக்கியவர்கள் கணக்கு ஒப்புவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவார்கள். கர்த்தர் பொல்லாங்கு செய்பவர்களுக்கு எதிராக உள்ளார். நாம் விசுவாசத்தை விட்டுவிடவோ அல்லது இழந்துபோகவோ கூடாது. சங்கீதத்தில் "கர்த்தர்" என்பது தேவனைக் குறிக்கிறது. பேதுருவைப் பொறுத்த மட்டில், பிதாவாகிய தேவனுக்கும் குமாரனாகிய தேவனுக்கும் இடையில் வரையப்பட்ட நேர்த்தியான பிரிவுக்கோடு என்று எதுவும் இருப்பதில்லை. கர்த்தர்

*தமது ஒருமைத்தன்மையில், "தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது." கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட வகையிலான எதிர்த்துத் தாக்குதலுக்கு மாறாக, தேவன் தமக்கே உரிய காலத்தில் இந்தப் பொல்லாத யுகத்திற்கு நீதியைக் கொண்டுவருவார் என்று நம்ப வேண்டும்.*

## கிறிஸ்துவை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் (3:13-17)

***13**நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்? **14**நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து; **15**கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். **16**கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். **17**தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.**

*பேதுருவின் வாசகர்கள் உதாசனத்தையும் தீமையையும் அநுபவித்திருந்தனர் என்பதே 3:9ன் கருத்தாக உள்ளது. அவர்கள் அநுபவித்த தீமையின் எதிரில் அவர்கள் தேவபக்தியுள்ள வாழ்வை வாழவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்வதற்காக அவர் சங்கீதம் 34ஐக் குறிப்பிட்டிருந்தார், ஆனால் அந்த சங்கீதம் தனது சொந்தக் கேள்விகளை எழுப்புகிறது. அது பேதுருவின் வாசகர்களை, "தேவன் நம்பக்கம் இருந்தால், நாம் ஏன் இவ்வாறு பாடு அநுபவிக்கிறோம்? எங்கள் வாழ்வைப் பரிதபிக்கப் படத்தக்கதாக ஆக்குபவர்களை நாங்கள் ஆசீர்வதிக்கும்படி நீங்கள் எதிர்பார்க்கக் கூடுவது எப்படி?" என்று கேட்கும்படி அழைக்கிறது. இந்தக் கேள்விகளுக்கு அப்போஸ்தலர் அடுத்துத் திரும்பினார்.*

***வசனம் 13.** இரண்டாம் முறையாக (காண்க 1:6-9) பேதுரு, தமது வாசகர்களின் உபத்திரவம் பற்றி வெளிப்படையாகக் குறிப்பிட்டார். இந்தப் பகுதி (3:13-17) யானது சொல்லாட்சித் திறன் வாய்ந்த கேள்வியுடன் தொடங்குகிறது; பதில் யூகிக்கப்படுகிறது. **நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் என்று யாரும் இருக்க மாட்டார்கள்.** இருந்தபோதிலும் இந்தக் கருத்திற்கும் இதைப் பின்தொடரும் கூற்றிற்கும் இடையில் சற்றே இறுக்கம் உள்ளது. அவர்கள் சகித்து இருந்த "பற்றியெரிகிற அக்கினி" போன்ற உபத்திரவம் (4:12) மற்றும் "கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம்" அவர்கள் பெற்ற நிந்தனை (4:14) ஆகியவை, வெறுப்பூட்டவில்லை என்று யூகிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றிப் பேதுரு பிற்பாடு பேசுவார், ஆனால் இந்த வேளையில் அவர், தமது வாசகர்களுக்கு, நேரான, தேவபக்தியுள்ள வாழ்விற்கு வழிநடத்தும் சில*

*கொள்கைகளைப் பற்றி உரைக்க விரும்பினார். அவர்களுக்கு அவர் பிற்பாடு ஆறுதல் அளித்து மறு உறுதிப்படுத்துவார், ஆனால் இப்போது, அடக்க முறையின் முகத்தில் அவர்கள் தேவபக்தியுள்ள நடக்கையால் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதே பேதுருவின் அக்கறையாக இருந்தது.*

*சாதாரண சூழ்நிலைகளில், உலகத்தின் ஆளும் அதிகாரங்கள், மக்களை உண்மை பேசுவதற்காகவோ, நேர்மையற்ற தன்மையைப் புறக்கணிப்பதற்காகவோ, ஒருவர் தம் குடும்பத்தைப் பொறுப்புள்ள வகையில் பேணுவதற்காகவோ மற்றும் "நன்மையான விஷயங்கள் குறித்து வைராக்கியமாய் இருப்பதற்காகவோ" அவர்களை அடக்கிக் கொடுமைப் படுத்துவதில்லை. இங்குள்ள வார்த்தைகள் ஏசாயா 50:9ன் எச்சங்களாக உள்ளன: "இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணைசெய்கிறார்; என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?" ஆட்சியாளர்கள் "தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நம்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி" யாகவும் அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர் என்று பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டியபோது, அவர் ஏற்கனவே இதைப்பற்றி அதிகமாகக் கூறியிருந்தார் (2:14). இன்னமும் அப்போஸ்தலர் நிலைநாட்ட விரும்பிய கொள்கையானது, கிறிஸ்தவர் ஒருக்காலும் அநியாயமாய்த் துன்புற மாட்டார்கள் என்பதாக இருப்பதற்குப் பதிலாக, கிறிஸ்தவர்கள் மோசமாக நடத்தப்படுவதினால் ஒருக்காலும் சினம் கொள்ளக் கூடாது என்பதாகவே இருந்தது. "ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது" (4:15) என்று பிற்பாடு அவர் கூறவிருந்தார். "புறஜாதிகளுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்" (2:12) என்று ஏற்கனவே அவர் கூறியிருந்தார். கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் தீமையானது, அவர்கள் சலித்து வெறுப்படையும்படியானதும் தீமைக்குத் தீமை செய்யும்படியானதுமான சந்தர்ப்பமாக அவர்களுக்கு ஒருக்காலும் இருக்கக் கூடாது (3:9).*

***வசனம் 14.*** *கிறிஸ்தவர் ஒருவர், நன்மையைச் செய்வதற்காகத் துன்புறும் வழியில் ஒருக்காலும் விழுவதில்லை என்ற மறைமுகக் கருத்துக் கொண்ட முந்திய வசனத்தில், பேதுரு கேட்டிருந்த கேள்வியானது, ஒரு மிகைக்கூற்றாக இருந்தது என்பது தெளிவு. அப்போஸ்தலர் அப்போதுதான் கூறியிருந்ததை மறைவாக ஆதரித்தார், ஆனால் அவர் அவர் நேர்மை யான நடத்தைக்கான எதிர்பார்ப்பைப் பின்னால் விட்டுவிடவில்லை. அவர் புதிய ஏற்பாட்டில் அரிதாகக் காணப்படும் இலக்கணக் கருவி ஒன்றுடன் தொடங்கினார்.* ***நீங்கள் பாடுபட்டால்*** *என்ற வார்த்தைகள் தேர்ந்துகொள்ளும் மனப்பாங்கின் பயன்பாட்டை ஏற்படுத்துகின்றன. இது, நடைபெறச் சாத்தியமற்ற சில விஷயங்களைக் கருத்தாகத் தெரிவிக்க விரும்புகிறபோது கிரேக்க எழுத்தாளருக்குக் கிடைக்கும் ஒரு கருவி-யாக இருந்தது.* J. N. D. *கெல்லி அவர்கள் இதை, "இருந்தபோதிலும், நன்மைக்கான உங்கள் அர்ப்பணிப்பு உங்களை இடர்ப்பாட்டில் இறங்கச் செய்யும் ..." என்று பொழிப்புரை செய்தார்.*[11] *"நன்மைக்கான அர்ப்பணிப்பு" பேதுருவின் வாசகர்களில் சிலரை இடர்ப்பாட்டில் இறங்கச் செய்திருந்தது*

என்பது உறுதி. அறியாமை, மூடநம்பிக்கை, விரோதம் அல்லது அரசியல் செல்வாக்கு என்பவை சிலவேளைகளில், ஒன்றும் அறியாத மக்களை உபத்திரவங்களுக்கு உள்ளாக்குகின்றன. உலகத்தில் அந்தக் குணங்களுக்குப் பஞ்சம் இல்லாதிருக்கையில், அவற்றைக் கிறிஸ்தவர் எதிர்கொள்ளும்போது நேர்மையான நடத்தையே அவரது உடனாளியாக உள்ளது.

***நீதி*** என்பதே பேதுருவின் முதன்மையான அக்கறையாக இருந்தது. "பாடுகள் வரவேண்டும் என்றால், அது நன்மை செய்தலுக்காக வருவதாக இருக்கட்டும், வேறு எந்தக் காரணத்திற்காகவும் அது வரவேண்டாம். தீமை செய்தலுக்காகப் பாடுகள் ஒருக்காலும் வரவேண்டாம்" என்று பேதுரு வலிறுத்தினார். இது நாம் முன்பே கண்டபடி (2:24) 1 பேதுருவில் "நீதி" என்பது "ஒழுக்க நேர்மையும், நல் நடத்தையும்" என்றே அர்த்தப்படுகிறது. இது பவுலின் கருத்தில் குற்றம் சுமத்தும் நீதியாக இருப்பதில்லை (உதாரணமாக, ரோமர் 4:3-5). எதிர்மறையாக இது, "நீதி" என்பது "ஆத்துமாவுக்கு எதிராகப் போர் செய்யும் மாம்ச இச்சையில் இருந்து விலகி இருத்தல்" என்பதை அர்த்தப்படுத்துகிறது (2:11). "நீதியினிமித்தம்" பாடுகள் வரும்போது, ***நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்*** என்று பேதுரு தமது வாசகர்களுக்கு உறுதிப்படுத்தினார். அவர்களை அடக்கித் துன்புறுத்தியவர்களுக்கு வெட்கம் உண்டாகும்படியாக இந்த ஆசீர்வாதம் இருந்தது (3:16).

***பாக்கியவான்களாயிருப்பீர்கள்*** என்பதற்குப் பின்னால் உள்ள *makarios* என்ற கிரேக்க வார்த்தை, 3:9ல் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையல்ல. அங்கு ஆசீர்வாதமாகப் பேசப்பட்ட வார்த்தை பற்றிய குறிப்பு இருந்தது; இங்கு இது விசுவாசி தாமே கண்டறிகிற ஆசீர்வாதத்தின் நிலையைப் பற்றிய குறிப்பாக உள்ளது. இது பாக்கியங்களின் வார்த்தையாக உள்ளது, எட்டாவது பாக்கியம் "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" என்று கூறுகிறது (மத்தேயு 5:10). விசுவாசிகளுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதத்தில் அடங்கியுள்ளது என்ன? (1) இது, மனித மீட்பை விளைவித்த பாடுகளில் கர்த்தருடன் பங்கேற்கக் கூடியதாக இருப்பதால் வரும் ஆசீர்வாதமாக உள்ளது (4:13). பவுலின் கவனத்திற்குரிய வார்த்தைகளில் இது, "இப்பொழுது நான் உங்கள்நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை ... என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" என்பதாக உள்ளது (கொலோசெயர் 1:24). (2) இது, தேவன்மீது நம்பிக்கை வைத்து அவருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் மீது தேவன் பிரியமாயிருக்கிறார் என்ற உறுதிப்பாட்டில் இருந்து வருகிற ஆசீர்வாதமாக உள்ளது (1:22, 23). (3) இது, "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்" (1:9) என்ற வாக்குத்தத்தத்தில் நம்பிக்கையைக் கண்டடைகிற ஆசீர்வாதமாக உள்ளது.

***நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து*** என்ற கடைசிச் சொற்றொடர் கடினமானதாக உள்ளது. மிகவும் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்ட இந்தக் கிரேக்கச் சொற்றொடர், "அவர்கள் பயத்திற்கு நீங்கள் பயப்படாதிருங்கள்" என்று வாசிக்கப்படுகிறது. NRSV மற்றும் NIV வேதாகமங்களில் "அவர்கள் பயப்படும் விஷயங்களுக்கு நீங்கள் பயப்படாதீர்கள்" என்றுள்ளது, இது NASB வேதாகமத்தின் கருத்தில் இருந்து கணிசமாக மாறுபடுவதாக உள்ளது. ஏசாயா 8:12ன் கடைசி வார்த்தைகளைப் பேதுரு தழுவியிருப்பதாகக் காணப்படுகிறது.

ஏசாயா, இஸ்ரவேல் மக்களைச் சுற்றிலும் இருந்த மக்களினங்கள் பயப்பட்ட விஷயங்களுக்கு இஸ்ரவேல் மக்கள் பயப்படுவதை விரும்பவில்லை, ஆகையால் இது NRSV மற்றும் NIV வேதாகமங்களின் மொழிபெயர்ப்பை ஆதரிக்கிறது. இருப்பினும், மூடநம்பிக்கைகளுக்கும் அவிசுவாசிகள் அஞ்சிய தேவர்களுக்கும் பயப்படாது இருக்க வேண்டும் என்ற புத்திமதியானது, பேதுருவின் சிந்தனைவரியில் அழகற்ற வகையில் பொருந்துகிறது. இவ்வசனத்தை இதற்குச் சமமாக, நேரடியாக மொழிபெயர்க்கக் கூடிய இன்னொரு வழியும் உள்ளது: "அவர்களின் பயத்திற்கு நீங்கள் பயப்படாதிருங்கள்," இது "அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" என்று கூறும் இன்னொரு வழியாக உள்ளது. அதுவே NASB வேதாகமத்தின் மொழிபெயர்ப்பிற்குப் பின்னால் உள்ள விளக்கமாக இருக்கிறது. சந்தப்பப் பொருளானது, NASB வேதாகமத்தின் வார்த்தையமைப்பையே தேர்ந்துகொள்ளத் தக்கதாக்குகிறது. கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் அனுபவிக்கும் ஆசீர்வாதமானது, பயமுறுத்துதல்கள் வரும்போது அவர்கள் **கலங்காமல்** இருப்பதற்கு உறுதிப்பாட்டையும் சமாதானத்தையும் தருகிறது.

**வசனம் 15**. கிறிஸ்தவராக இருத்தல் என்பது, ஒருவர் "வேதாகமம் போதிப்பது என்ன?" என்று கேட்பதற்கு முன்னர், அவர் "இயேசு போதித்தது என்ன?" எனக் கேட்க வேண்டும், "இயேசு போதித்தது என்ன?" என்று கேட்பதற்கு முன்னர், அவர் "இயேசு யாராக இருந்தார்"? எனக் கேட்க வேண்டும் "இயேசு யாராக இருந்தார்?" என்று கேட்பதற்கு முன்னர், அவர் "இயேசு யாராக இருக்கிறார்?" என்று கேட்க வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துகிறது. **கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்** என்று பேதுரு கூறியபோது, அவர் ஏற்கனவே இதில் உள்ள கடைசிக் கேள்விக்குப் பதில் அளித்திருந்தார். நசரேயனாகிய இயேசு என்ற நபரின் மீதுதான் கிறிஸ்தவர்களின் விசுவாசம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பேதுருவைப் பொறுத்த மட்டில், நசரேயனாகிய இயேசுவும் கர்த்தராகிய கிறிஸ்துவும் ஒருவராகவே இருந்தார். அவர் பொந்தியு பிலாத்துவினால் சிலுவையில் அறையப்பட்ட வரலாற்றுப்பூர்வம் கொண்ட போதகராயிருந்தார், மற்றும் இப்போது தேவனுடைய வலது புறம் அமர்ந்து ஆளுகை செய்யும் ஆண்டவராக இருக்கிறார். ஆபிரகாமைப் போல (ரோமர் 4:1-5), இயேசு விசுவாசத்திற்கு முன்மாதிரியாக மாத்திரம் இருப்பதில்லை, அவரே விசுவாசத்தின் மையப்பொருளாகவும் இருக்கிறார். அவர் ஆண்டவராக, கிறிஸ்துவாக மற்றும் தேவனாக இருக்கிறார். "கிறிஸ்துவைக் கர்த்தராகப் பரிசுத்தம் பண்ணுதல்" என்பது, அவரைப் பரிசுத்தராக ஒருவர் தமது உள்ளான இருப்பிற்குள் பற்றிக்கொள்வதாக உள்ளது; இது அவருக்குக் கீழ்ப்படிதலையும் அன்பையும் தருவதாக உள்ளது. தேவபக்தியுள்ள நடக்கை என்பது இன்னும் பேதுருவின் சிந்தையில் மிகமுக்கியமானதாக இருந்தது. உபத்திரவப்படுதலிலும்கூட, அது "நீதியின் நிமித்தமாக" இருக்கையில், பயமுறுத்துபவர்களிடம் பயப்படும்படி தூண்டுவதாக இருப்பதில்லை; அதற்குப் பதிலாக இது, "கிறிஸ்துவே ஆண்டவர்" என்ற உறுதிப்பாட்டைப் புதுப்பிக்க அழைக்கிறது.

உபத்திரவத்திற்குப் பதில்செயல் செய்தல் என்பது இரு மட்டங்களில் இருந்து வருகிறது. முதலாவது, உபத்திரவப்படுகிறவர், கிறிஸ்துவுக்குத்

*தமது பதில்செயல் எவ்வாறு இருக்கும் என்று தீர்மானம் செய்ய வேண்டும். உபத்திரவப்படுகிறவர் "கிறிஸ்துவைப் பரிசுத்தம்பண்ண வேண்டும்" என்று பேதுரு கூறினார். உபத்திரவப்படுகிறவர் நீதியாக வாழவேண்டும் என்ற தமது தீர்மானத்தைப் புதுப்பிக்கும்போது அதைச் செய்கிறார். இரண்டாவது, உபத்திரவப்படுகிறவர், தம்மைக் கொடுமைப் படுத்துபவர்களுக்குத் தமது பதில்செயல் என்னவாக இருக்கும் என்பதைத் தீர்மானம் செய்ய வேண்டும். எதிர்மறையாக அவர், "தீமைக்குத் தீமையை" (3:9) பதிலாகச் செய்யக்கூடாது, அல்லது பயப்படவும் கூடாது, ஆனால் ஒரு நேர்மறைப் பதில் செயலும் உள்ளது. அவர் தம்மிடத்தில்* **விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க** *வேண்டும். கிறிஸ்தவர் தவறுசெய்திராதிராமல் உபத்திரவப்படுகையில் அவர் தீர்மானமாகவும் சந்தோஷமாகவும் இருப்பதை, துன்புறுத்துபவர்கள் கவனிக்கும்போது, அது அவர்களின் ஆர்வத்தை எழுப்பும் என்பதே இங்கு மறைவாக கருத்தாக உள்ளது. கிறிஸ்தவர் சேவிக்கும் ஆண்டவரைப் பற்றி, அவர் பகிர்ந்துகொள்ளும் ஐக்கியம் பற்றி மற்றும் அவர் கொண்டிருக்கும் நம்பிக்கை பற்றி அவர்கள் கேள்விகேட்டுத் தெரிந்து கொள்ள வாய்ப்புள்ளது.*

*விசுவாசி தமக்குள் இருக்கும்* **நம்பிக்கையைக் குறித்து விசாரித்துக் கேட்கிற யாவருக்கும்** *பதிலுரை கூற எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும், அதாவது அவர் தாம் எதை விசுவாசிக்கிறார், ஏன் அதை விசுவாசிக்கிறார் மற்றும் அதைச் செய்கிறபோது அவர் ஏன் ஜீவிக்கிறார் என்பவற்றைக் குறித்து விளக்கம் அளிக்க அவர் தயாராக இருக்க வேண்டும். "உத்தரவு சொல்லுதல்" என்பது [ஆங்கிலத்தில் இது* "defense" *என்று உள்ளது] நீதிமன்றத்தில் வழக்கில் பேசும்போது கூறும் உரையாக இருப்பதில்லை, மாறாக இது* **விசாரித்துக் கேட்கிற யாவருக்கும்** *கூறப்பட வேண்டியதாக உள்ளது. பேதுரு இங்கு,* "defense" (*apologia*) *என்ற வார்த்தையை, பவுல் சிலவேளைகளில் பயன்படுத்திய அதே முறைசாராக் கருத்திலேயே பயன்படுத்தினார், உதாரணமாக, "என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது" (1 கொரிந்தியர் 9:3). இவ்வார்த்தை நீதிமன்ற செயல்முறைகளைக் குறிப்பதாக இருந்தாலும், இவ்விடத்தில் "மாறுத்தரம் (அல்லது) உத்தரவு" என்பது ஒரு விளக்கம் என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. பகுத்தறிதல் என்று மறைமுக அர்த்தம் தரும், logos, என்ற ஒரு வார்த்தை (இது கிரேக்க மொழி) "கணக்கு ஒப்புவித்தல்" என்று மொழிபெயர்க்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் கொண்டுள்ள "நம்பிக்கை" பற்றிய பகுத்தறிவுக்கேற்ற விளக்கமானது சிலரை இணங்கச் செய்து மற்றவர்களை வாயடைக்கச் செய்யும் என்று பேதுரு யூகித்தார். கிறிஸ்தவர்கள் பெறும்படி ஆவலாய் ஏங்கும் தூய பாலானது நியாயமான அல்லது பகுத்தறிவு உள்ள பாலாக இருந்தது (2:3).*

*அப்போஸ்தலர், கிறிஸ்தவரின் தற்காப்பு விஷயத்தை மாத்திரமல்ல ஆனால் அதைச் செய்யும் விதத்தையும் இங்கு உரைத்தார். கிறிஸ்தவரைக் குற்றப்படுத்தி கொடுமைப்படுத்துபவர் கேள்வி கேட்கும்போது, கிறிஸ்தவர்* **சாந்தத்தோடும் வணக்கத்தோடும்** *பதில்கூற வேண்டும்.* **வணக்கத்தோடு** *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள phobos, என்ற வார்த்தை பெரும்பாலும்*

"பயம்" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. NIV வேதாகமத்தில் "gentleness and respect." என்றுள்ளது. அதுபோல, "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு" பேச வேண்டும் என்று விசுவாசிகளைப் பவுல் வேண்டிக் கேட்டுக்கொண்டார் (எபேசியர் 4:15). "தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே" (எபேசியர் 4:14) அடிக்கப்பட்டுப் போகும் அபாயத்தை நோக்கி விசுவாசிகள் அணுகுமுறை இருந்துவிடுமோ என்பதுதான் பவுலின் கவலையாக இருந்தது, மற்றும் அவிசுவாசிகளிடத்தில் பேசும் விசுவாசிகள் அவர்களிடம் மாறுபாட்டுடனும் தேவனுக்கு மதிப்புடனும் இருந்து விடுவார்களோ என்பது பேதுருவின் கவலையாக இருந்தது, இவ்விரு மனிதர்களுமே, கட்டுப்பாடு, அமைதித்தன்மை மற்றும் நல்ல சிந்தை ஆகியவற்றை மாறுபட்ட கண்ணோக்குடன் அணுகுபவர்களிடத்தில் வேண்டுகோள் வைத்தனர். சத்தியத்தைப் பேசுதலோ அல்லது தற்காப்பு வாதம் செய்வதோகூட போதுமானதல்ல. பேசும் விதமானது விஷயத்தைப் போன்றே முக்கியம ானதாக உள்ளது.

***வசனம் 16.*** NASB வேதாகமத்தின் நிறுத்தற்குறியீடு, "சாந்தத்தோடும் வணக்கத்தோடும்" என்பதை "தற்காப்பு வாதம் ஒன்றை ஏற்படுத்தி" என்ற வினையாலணையும் சொற்றொடராக இருக்கும்படி மாற்றியமைக்க அனுமதிக்கிறது, அதாவது ஒருவர் தமது விசுவாசத்தை சாந்தமும் வணக்கமுமான வகையில் விளக்க வேண்டும். NASB, NRSV, NIV, REB, வேதாகமங்களும் மற்ற மொழிபெயர்ப்புகளும் இதையே செய்கின்றன. இருப்பினும் இந்தச் சொற்றொடர் மாறுபட்ட வகையிலும் பொருள் உணர்த்தலாம். ஒருவேளை பேதுரு தமது வாசகர்கள் தங்களில் உள்ள "நம்பிக்கையைப் பற்றி தற்காப்பு வாதம்" ஏற்படுத்துதல், கிறிஸ்துவினிடத்தில் சாந்தமும் வணக்கமும் உடைய நிலைப்பாட்டைக் காண்பிக்கும்படி அவர்களைத் தகுதிப்படுத்திற்று என்று அவர்களுக்கு விளக்கி இருக்கலாம். அது சாத்தியமானதுதான் ஆனால் இங்கு அதற்கு வாய்ப்பில்லை. அப்போஸ்தலர் தமது வாசகர்களை, அவர்களைத் துன்புறுத்துபவர்களிடம் தேவபக்தியுள்ள வகையில் நடந்துகொள்ளும்படி ஊக்குவித்தார். தீமைக்குத் தீமை செய்வதற்கு மாறாக, அவர்கள் ஆசீர்வதிக்க வேண்டியவர்களாக இருந்தனர் (3:9). இந்தச் சொற்றொடரை, அவமதிப்புகளுக்கு ஆசீர்வாதங்களைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற பேதுருவின் புத்திமதியினுடைய விரிவாக்கமாக எடுத்துகொள்ளுதல் மிகவும் சிறந்ததாக இருக்கும், அதாவது, அவரது வாசகர்கள் தங்களில் உள்ள "நம்பிக்கையை" சாந்தத்தோடும் வணக்கத்தோடும் எடுத்துரைத்து, தங்களைத் துன்புறுத்துபவர்களிடம் மோசமான சிந்தை கொண்டவர்களாக இராதபடி எதிர்பார்க்கப்பட்டனர்.

பேதுரு **நல்மனச்சாட்சி** (*suneidēsis*) என்ற வார்த்தையை மூன்று முறை பயன்படுத்தினார் (2:19; 3:16, 21). இது பவுலின் நிருபங்களில் பொதுவான வார்த்தையாக உள்ளது.[12] மேற்கத்தியக் கலாச்சாரத்தின் மிகமுனைப்பான தனிநபர் உரிமைத்துவமானது, "மனச்சாட்சி" என்பதைப் பற்றிய புரிந்து கொள்ளுதலை முற்றிலும் தனிப்பட்ட வகையிலான நிபந்தனைகளில் வழிநடத்தியுள்ளது. இது ஒருவரின் செயல்பாடுகளைக் கண்டனம் பண்ணவோ அல்லது அங்கீகரிக்கவோ அவருக்குள்ளாக இருக்கும் குரலாகும். மனச்சாட்சி என்பது தனிப்பட்ட விழிப்புணர்வாக இருந்தது என்பது மேற்கத்திய

*பிரபலமான பயன்பாட்டிற்கு இணையான கிரேக்கக் கருத்தாகும். பழங்கால மக்கள் இதை மற்றவர்களுடனான உறவுமுறையில் தனிப்பட்ட விழிப்புணர்வு என்பதாகப் புரிந்துகொண்டனர் என்பதே வேறுபாடாக உள்ளது. ஒருவர் தம்மை மற்றவர்கள் எவ்வாறு அங்கீகரிக்கின்றனர் அல்லது அங்கீகரிக்காமல் இருக்கின்றனர் என்பது பற்றிய அவரது மன உணர்வாக இருந்தது.* ***நல் "மனச்சாட்சி"*** *கொண்டிருத்தல் என்பது, ஒருவர் தம்மீது தேவனும் தம் சமகாலத்தவர்களும் சாதகமான முடிவை உரைக்கும்படி எதிர்பார்த்து அதற்கேற்ற வகையில் நடந்து கொள்ளுதல் என்பதாக இருந்தது. "மனச்சாட்சி" என்பதன் ஒழுக்கரீதியான உருவளவு, வடிவமைக்கப்பட்டு சமுதாயத்தில் தேவனுடனும் மற்றவர்களுடனும் நிலவுவதாக உள்ளது. ஒழுக்கரீதியான விழிப்புணர்வு என்ற வகையில் "மனச்சாட்சி" என்ற கருத்து ex nihilo ("ஒன்றும் இல்லாமை") யில் இருந்து தனிநபருக்குள் குதித்து எழும்புகிறது என்ற கருத்து பேதுருவுக்கு அந்நியமானதாக இருந்தது. அப்போஸ்தலர் இங்கு, விசுவாசிகள் தங்களைத் தூஷிப்பவர்கள் வெட்கப்படுதலை விளைவிக்கும் "நல்மனச்சாட்சி" கொண்டிருக்க வேண்டும் என்று உறுதிப்படுத்தினார். அவர்களைக் குற்றம் சாட்டுபவர்கள் வெட்கப்படுத்தப்படுதல் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்கும் "நல்மனச்சாட்சி" உடையவர்களாக இருக்க வேண்டும் என்று அவர் இங்கு கூறவில்லை.[13]*

*விசுவாசியின் "நல்மனச்சாட்சி" அவரை ஆதரித்து அவர் "தற்காப்பு வாதம் ஏற்படுத்த" அழைக்கப்படும்போது அவருக்குத் தைரியத்தைக் கொடுக்கிறது. அவர் தமக்கு எதிராகத் தொடுக்கப்படும் தீமையான குற்றச்சாட்டுகள் யாவும் புறங்கூறுதலைத் தவிர அதிகமானவைகளாக இருப்பதில்லை என்பதை அறிகிறார். 1 பேதுரு 2:12உடன் பல வினை இணைச்சொற்கள் உள்ளன. இவ்விடத்தில் அப்போஸ்தலர், கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் புறஜாதியார் தொடுக்கும் புறங்கூறுதலின் இயல்பைப் பற்றிய குறிப்பு எதையும் நமக்குத் கொடுக்கவில்லை, ஆனாலும் இதை யூகிப்பது சிரமமாக இருப்பதில்லை. நூற்றாண்டுகள் விரிகையில், கர்த்தருடைய இராப்போஜனத்துடன் தொடர்புடைய கிறிஸ்துவின் மாம்சம் மற்றும் இரத்தம் என்ற கருத்து, கிறிஸ்தவர்கள் தங்கள் சபை கூடுகைகளில்காமக்களியாட்டம் மனித மாமிசம் உண்பவர்கள் என்ற குற்றச்சாட்டிற்கு வழிநடத்திற்று. கிறிஸ்தவர்கள் தங்கள் சபை கூடுகைகளில் காமக்களியாட்டம் நிகழ்த்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். மற்றவர்கள் ஆராதித்த கடவுள்களை அவர்கள் ஆராதியாமல் இருந்ததால் அவர்கள் நாத்திகர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டனர். கடவுள்களுக்கு ஆராதனையும் பலிகளும் செலுத்தப்பட்ட பொது விழாக்களில் பங்கு பெற அவர்கள் மறுத்ததால், அவர்கள் மனித குலத்தை வெறுத்தனர் என்று குற்றம் சாட்டப்பட்டனர். அவமதிப்பு மற்றும் புறங்கூறப்படுதல் பற்றிய பேதுருவின் குறிப்பு, அவரது வாசகர்களின் துன்பங்கள் வாய்மொழியால் ஏற்பட்டது என்பதை, அதாவது குறைந்த பட்சம் அந்த வேளையிலாவது, அது சிறையில் அடைக்கப்படுதலாகவும் கொல்லப்படுதலாகவும் இல்லாதிருந்தது என்று கருத்துத் தெரிவிக்கிறது.*

*கிறிஸ்தவர்களின்* ***"நல்ல நடக்கை"*** *யானது, புறங்கூறப்படுதலுக்கு எந்தச் சான்றும் இராதபடிக்கு சுய உறுதிப்பாடு வாய்ந்ததாக இருக்கும் என்பதே இங்கு எதிர்பார்ப்பாக உள்ளது. அவர்கள்* ***"நல்மனச்சாட்சி"***

கொண்டிருக்கும்போது, **கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் ... வெட்கப்படும்படிக்கு** என்பதே விளைவாக இருக்கும். "மனச்சாட்சி" என்பதைப் போன்றே "வெட்கப்படுதல்" என்பதன் கருத்தும், நவீன மேற்கத்திய உலகத்தில் செய்வதைக் காட்டிலும் அதிகமாக கிரேக்க - ரோமானிய நாடுகளின் பழங்கால மக்களுக்கு மிகப்பலத்த சமூக அளவீட்டைக் கொண்டிருந்தது. "வெட்கம்" என்பது தவறுக்கு வருந்தும் அல்லது சுயகுற்றம் சாட்டிக்கொள்ளும் உள்ளான குணமாக இருக்கவில்லை. மாறாக அது, ஒருவர் தமது சமகாலத்தில் வாழ்பவர்களால் பொதுவாக வெறுக்கப்படும் விஷயங்களைச் செய்ததால் விளைந்த நிலைப்பாடாக இருந்தது. "வெட்கம்" அடையாதிருத்தல் என்பது "நல்மனச்சாட்சி" கொண்டிருத்தல் போன்றதாகவே இருந்தது இப்படிப்பட்ட விஷயத்தில் ஒருவர் தமது சககுடிமக்களை, தமது நடக்கைக்காக மன்னிப்பு எதுவும் கேட்டிராத கண்களுடன் கண்ணோக்கினார். கிறிஸ்தவர்களின் **"கிறிஸ்துவுக்கேற்ற நல்ல நடக்கையை"** அவிசுவாசிகள் எவ்வளவு அதிகமாக உற்றுநோக்கினார்களோ, அவ்வளவு அதிகமாக அவர்களின் சொந்த நடக்கை பற்றிய அவர்களின் விழிப்புணர்வு, அவர்களின் சமகாலத்தவர்களால் நியாயந்தீர்க்கப் பட்டபடி, வெட்கக்கேடானதாக இருந்தது. இதுவே விசுவாசிகள் தங்கள் விரோதிகளை வாயடைக்கும் வழியாக இருந்தது. அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் புறங்கூறியவர்களை அவமதித்தல் என்பது இயேசு விட்டுச் சென்றிருந்த மாதிரியின்படி இல்லாத நிலையாக இருந்தது (2:23).

**வசனம் 17.** பேதுரு தமது வாசகர்கள் காட்சிப்படுத்த வேண்டிய நேர்மையான நடத்தையை, வெட்கக்கேடு இல்லாத வகையில் வாழுதலைப் பின்வைத்துப் போகமாட்டார். ஒரு புதிய மார்க்கம் பட்சபாதமற்ற வகையில் கேள்விப்படுதலை ஆதாயப்படுத்துதல் எப்போதுமே சிரமமாக உள்ளது. புதிய மார்க்கம் ஒன்றிற்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள், சமூகத்தில் தவறாகப்போகும் அற்ப விஷயங்களுக்கு முதலாய்க் குற்றஞ்சாட்டப்படுதலைப் பெறுகின்றனர். கிறிஸ்தவர்கள் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. அவர்கள் உண்மையிலேயே தவறாக நடந்து அதனால் தங்களைச் சுற்றிலும் இருந்த அவிசுவாசிகளின் சமூகத்தினால் துன்புறுத்தப்படும் சந்தர்ப்பம் ஒன்றை ஒருக்காலும் அவர்களுக்குக் கிறிஸ்தவர்கள் தரக்கூடாது என்பதைப் பற்றியே பேதுரு அக்கறையாக இருந்தார். **தேவனுக்குச் சித்தமானால்** பாடுகள் வரும் என்று அவர் கூறினார்; ஆனால் அதில் உண்மையின் துணுக்கு சிறிதளவைக் கூடப் புறங்கூறுபவர்கள் கொண்டிருக்க அவர் விரும்பவில்லை. பெஸ்ட் அவர்கள், "துன்புறுத்துபவர்கள் பெரும்பாலும் தாங்கள் யாரைத் துன்புறுத்துகின்றனரோ அவர்களால் கோபப்படுகின்றனர் மற்றும் அவர்களின் நல்நடக்கையால் வெற்றிகொள்ளப்படுவதில்லை" என்று விளக்கம் கூறினார்.[14] விஷயம் அப்படி இருந்தாலும்கூட, உங்கள் "நல்மனச்சாட்சி" யானது, **தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், ... நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்** என்று சாட்சி கூறட்டும் என்று பேதுரு வேண்டிக் கேட்டுக்கொண்டார்.

விசுவாசிகள் "தீமை செய்து பாடநுபவிப்பதிலும் நன்மை செய்து பாடநுபவிக்கும்படி" இவ்வசனம் அழைக்கும்போது, இதில் குறைந்தபட்சம் இரண்டு சாத்தியமான அர்த்தங்கள் உள்ளன. கிறிஸ்தவர்களின்

*மீதான குற்றச்சாட்டுகள் உண்மையாயிருக்கும்பட்சத்தில், அவர்கள் எதிர்த்து நிற்கும்போது, அது அவிசுவாசிகள் அதிகம் துன்பம் தரும் சந்தர்ப்பத்தைக் கொடுக்கிறது (காண்க 2:20; 3:9). தீமைக்குத் தீமை செய்தல் என்பது தவறைக் கூட்ட மட்டுமே செய்யும். விஷயம் அப்படி இருக்கும்போது, தவறாகத் துன்புறுத்தப்படுதலைச் சகித்து அநுபவித்தலே மேன்மையானது, அவசியமானால் எந்த எதிர்ப்பும் இன்றி அதைச் செய்ய வேண்டும். அப்போஸ்தலர் 2:12ல் தாம் கூறிய* ***"நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள்"*** *என்பதை இங்கு வேறு வார்த்தைகளில் விளக்கப்படுத்தி இருக்கலாம்.*

*தீமை செய்து அதற்காக, இனி வரவிருக்கும் உலகத்தில் பாடநுபவிப்பதைக் காட்டிலும், நன்மை செய்து அதற்காக இந்த உலகத்தில் பாடநுபவித்தல் மேன்மையானது என்று பேதுரு எச்சரிக்கை செய்திருக்கும் சாத்தியக்கூறும் இங்கு உள்ளது. பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, கர்த்தருடைய மறுவருகை என்பது அவரின் சிந்தையில் இருந்து தொலைவில் இல்லை என்ற காரணத்தினால், பிந்திய இந்த விளக்கம் ஈர்ப்புள்ளதாக இருக்கிறது.*[15] *இவற்றிற்கு இடையில் ஏதாவது ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதல் என்பது கடினமாக உள்ளது, ஆனால் முந்திய விளக்கம் அதிகம் சாத்தியமானதாக உள்ளது. அப்போஸ்தலர், தமது வாசகர்கள் குற்றம் சாட்டப்படுதலுக்கு மேலான வாழ்வின் வழியை முன்வைக்க வேண்டும் என்றும் புறஜாதியாருக்கு முன்பாக தேவபக்தியுள்ள உதாரணத்தை வைக்க வேண்டும் என்றும் அக்கறையாயிருந்தார்.*

*கிறிஸ்தவர், தமது மார்க்கரீதியான காட்சிப்படுத்துதலைச் செய்வதில், மனிதர்களிடம் இருந்து புகழ்ச்சியைப் பெறுதல் (காண்க மத்தேயு 6:1) மற்றும் எல்லாருக்கும் முன்பாக நேர்மையாயிருத்தல் பற்றிய தமது நடக்கை குறித்து அக்கறையாயிருத்தல் ஆகியவற்றிற்கு இடையில் கவனம் நிறைந்த சமானத்தன்மை ஒன்றைப் பராமரிக்க வேண்டும். விசுவாசி தமது நற்பெயர் பற்றி அக்கறை கொண்டிருத்தல் ஏற்புடையதே. ஒரு யூத ஞானி கூறியபடி, "உங்கள் (நற்) பெயர் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்; அது ஆயிரம் பொற்குவியல்களைக் காட்டிலும் அதிகநாட்கள் உங்களை வாழவைக்கும்."*[16]

## *நமது பாவங்களுக்காக நேர்ந்தது கிறிஸ்துவின் மரணம் (3:18-22)*

***18ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். 19அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். 20அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள். 21அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம ானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும்***

***நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது; [22]அவர் பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.***

*அநீதியான மனிதகுலத்தின் பாவங்களுக்குப் பதிலாக இயேசு பட்ட பாடுகள் பற்றிய நேரடியான கூற்றுடன் பேதுரு, புதிய ஏற்பாட்டின் மிகக் கடினமான வசனப்பகுதிகளில் ஒன்றை அறிமுகப்படுத்தினார். இருப்பினும் நாம், அவர் முன்வைத்த நேர்த்தியான கருத்துக்கள், அவரது வார்த்தைகளின் முழுமையான வலிவாக்கம் தெளிவாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்றபோது பாவத்தில் இருந்து இரட்சிக்கப்படுகின்றனர். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக தேவனுடைய வலதுபுறத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்பவரின் ஆசீர்வாதங்களில் பங்கு பெறுகின்றனர். தம்முடைய ஜனங்களை இரட்சிப்பதற்காக சிலுவையில் மரித்த அதே கிறிஸ்து இப்போது வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும் கொண்டவராக இப்போது தமது ஆளுகை செய்கிறார். இதனால், இப்போது பாடநுபவிப்பவர்கள் மகிழ்ச்சி கொள்ள முடியும்.*

***வசனம் 18.*** *இது,* ***கிறிஸ்துவின்*** *பாடுகளைப் பற்றிச் சிந்திக்காமல் பாடநுபவித்தலைப் பற்றிப் பேதுருவினால் சிந்திக்க இயலாதிருந்தது போன்றுள்ளது, மற்றும் கிறிஸ்து* ***பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்*** *என்பதைப் பற்றிச் சிந்திக்காமல் அவரது (கிறிஸ்துவின்) பாடுகளைப் பற்றி அவரால் [பேதுருவினால்] சிந்திக்க இயலாதிருந்தது. 2:19, 20ல் அடிமைகளின் உபத்திரவங்கள் சிந்தனையின் இதே வரிசைக்கு வழிநடத்தியிருந்தன. இயேசுவின் வாழ்வு முழுவதுமே பாடுகளினால் பண்புப் படுத்தப்பட்டுள்ளது என்பதில் ஒரு கருத்து உள்ளது, ஆனால் மனிதரின் பாவத்திற்காக அவர் பாடநுபவித்தது என்பதே இங்கு பேதுரு ஆர்வம் காண்பித்த விஷயமாக உள்ளது. மனிதகுலத்தின் பாவங்களுக்குப் பதில்பலியாக இயேசு மரித்தார் என்ற கருத்து புதிய ஏற்பாட்டில் ஆழமாக ஓடுகிறது. இதைப் பவுல் பின்வருமாறு சொற்கலையுடன் விவரித்தார்: "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரிந்தியர் 5:21).*

*2:21-25 வசனப் பகுதியில் பேதுரு, கிறிஸ்துவின் முன்னுதாரணத்தின் மீது கவனம் குவித்திருந்தார், ஆனால் இவ்வசனத்தில் அவரது உதாரணம் அதைவிட குறைவான விஷயமாயிருந்தது. இயேசுவின் சீஷர்கள் (பின்பற்றுபவர்கள்),* ***அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப்*** *பாவங்களினிமித்தம்* ***ஒரு தரம்*** *பாடுபட்டார் என்ற கர்த்தருடைய உதாரணத்தைப் பின்பற்றவேண்டும் என்று பேதுரு எதிர்பார்க்கவில்லை. இயேசுவின் சீஷர்கள் அநுபவிக்க வேண்டிய பாடுகள் எதுவாக இருந்தாலும், இயேசு பாவங்களைச் சுமந்தது போன்று அவர்கள் சுமக்க மாட்டார்கள் (2:24), அல்லது அவர்* ***ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்*** *என்பது அவர்களுக்கு நடைபெறாது. பேதுரு தமது வாசகர்களுக்கு, எப்படி பாடுபடவேண்டும் என்பதை இயேசு காட்டினார் என்பதைக் காட்டிலும்* ***நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி*** *இயேசு*

*மரித்தார் என்பதை நினைவூட்டுதலே இவ்வசனத்தில் பேதுருவின் நோக்கமாக இருந்தது. இயேசு ஒரேதரம் எல்லாருக்காகவும் மரித்தார் என்பது எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் அடிக்கடி கூறிய ஆய்வுக்கருத்தாக உள்ளது (எபிரெயர் 7:27; 9:12, 26, 28; 10:10, 14).*

*பாவங்களுக்காகக் கிறிஸ்துவின் மரணம் என்பதில் ஒரு தனித்தன்மையும் முடிவுத்தன்மையும் உள்ளது. அதுவே* **"கிறிஸ்துவும் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்"** *என்பதன் மறைபொருளாக உள்ளது. பாவியானவர் தேவனுடன் ஒப்புரவாகுதலுக்கு, மனித பாவங்களுக்காகக் கூடுதலான பாடநுபவித்தல் எதுவும் தேவைப்படுவதில்லை. சிலுவையே முழுவதும் போதுமானதாக உள்ளது.*[17] *எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், ஆரோனின் ஆசாரியத்துவத்தில் செய்யப்பட்டது போன்று, ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்து பலிசெலுத்துவதில்லை; மாறாக அவர் "அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரே தரம் பலியிடப்பட்டு" தம்மையே கையளித்தார் என்று வாதிட்டார் (எபிரெயர் 9:24-28). எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில், இயேசு ஆசாரியராகவும் பலிப்பொருளாகவும் கூறப்பட்டுள்ளார். 1 பேதுரு நிருபத்தில், அவர் ஒப்புயர்வற்ற வகையில் பலியாக, களங்கமற்ற பலியாக, "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப்" பலியானார் என்று கூறப்படுகிறது.*

*பேதுருவின் தொடக்ககால வாசகர்களும் தொடர்ந்து வரும் மற்ற எல்லா வாசகர்களும்* **"அநீதியுள்ளவர்கள்"** *என்ற தலைப்பின்கீழ் இருக்கின்றோம். பவுலும் பேதுருவும் ஒரே உறுதிப்பாட்டை ஏற்படுத்தினர்: "எல்லாரும் பாவஞ்செய்து" [இருக்கிறோம்] (ரோமர் 3:23). கிறிஸ்து பாவமற்றவராயிருந்து பட்ட அவரது பாடுகளின் காரணமாக, அவரால்* **"நம்மைத் தேவனிடத்தில் சேர்க்க"** *முடிகிறது. பேதுரு இதை 2:24, 25ல் கூறியிருந்தார், ஆனால் இங்கு அப்போஸ்தலர் இன்னும் சற்று தூரம் சென்றார். சிலுவையில் கிறிஸ்துவின் பாடுகளும் மரணமும் அவ்வரவாற்றின் முடிவாக இருக்கவில்லை. சிலுவை என்பது தோல்வியாக இருக்க வில்லை. அவர்* **மாம்சத்திலே மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டாலும்** *தேவன் சிலுவையை வெற்றியாகத் திருப்பினார் அவர்* **"ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்."** *இந்த இரண்டாவது கூற்றைப் பேதுரு கூறுவதை நாம் சற்றும் எதிர்பார்ப்பதில்லை. இயேசு* **"மாம்சத்திலே கொலையுண்டார்"** *என்பது மாத்திரமல்ல, ஆனால் அவர் "மாம்சத்தில் உயிர்ப்பிக்கவும்பட்டார்." கர்த்தரின் உடலில் ஆணியால் உண்டான காயத்துளைகளில், தோமா தமது விரல்களை இட்டுப்பார்க்கும்படி அவரைக் கர்த்தர் அழைத்தபோது இதைத் தெளிவாக்கினார் (யோவான் 20:25, 27). மாம்ச உடலில் இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றிப் பேதுரு எதுவும் உரைக்கவில்லை. அவரது கருத்து வேறுபட்டதாயிருந்தது. இயேசு, தம்மைச் சிலுவையில் அறைந்த மனிதர்களின் கைகளில், "மாம்சத்தில்" மரித்தார். அவர் "ஆவியிலே" உயிர்ப்பிக்கப்பட்டார்.*

*இந்த வார்த்தைகளுடன் பேதுரு, புதிய ஏற்பாட்டில் மிகவும் கடினமான வசனப்பகுதிகளில் ஒன்றிற்கு, இந்த நிருபத்தில் நிச்சயமாகவே மிகவும் கடினமான வசனப்பகுதிக்குக் கடந்து சென்றார். 1930ம் ஆண்டில் J. A. மெக்குல்லோக் அவர்கள் இவ்வசனப்பகுதியையும் மற்றவற்றையும் ஆராய்ச்சி செய்தார். இவ்வசனப்பகுதிகள் தொடக்ககால சபையில், இயேசு தமது*

சிலுவை மரணத்திற்குப் பின்பு மரித்தவர்களின் உலகத்திற்குச் சென்றார் என்ற பிடிவாதமான பாரம்பரியக் கொள்கைக்குத் தொடர்புடையவையாக இருந்ததால், அவர் இதைச் செய்தார்.[18] மெக்குல்லோக் அவர்களின் புத்தகம் வெளியிடப்பட்ட நாளில் இருந்து, கல்வியாளர்கள் இவ்வசனப் பகுதிக்குக் கணிசமான ஆற்றலை அர்ப்பணித்துள்ளனர். பேதுருவின் இந்த வார்த்தைகளுக்குப் பல விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் உள்ளடங்கியிருக்கும் பிரச்சனைகள் சிக்கலானவை. அவற்றை முழுவதும் வகைப்படுத்துதல் சிரமமாக இருக்கும். NASB வேதாகமம் "ஆவியிலே" (Spirit) என்ற வார்த்தையின் முதல் எழுத்தைப் பெரிய எழுத்தில் இடுவதில்லை என்பது இந்த இடத்தில் கவனிக்கத் தக்க விஷயம ாக உள்ளது. Spirit என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது என்று மொழிபெயர்ப்பாளர்கள் முடிவு செய்யும் இடங்கள் எல்லாவற்றிலும், இவ்வார்த்தையின் முதல் எழுத்தைப் பெரிய எழுத்தில் இடுவது என்பது மொழிபெயர்ப்பாளர்கள் சீராகச் செய்துள்ள விஷயமாகும். NASB வேதாகமத்தைப் போலின்றி NIV வேதாகமம் "Spirit" என்று குறிப்பிட்டுள்ளது. இவ்விடத்தில் பேதுரு பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிட்டார் என்று NIV வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் நம்பினர். கிரேக்க மொழியில் "Spirit" பெரிய எழுத்துக்களில் இடப்படவில்லை. இது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறதா அல்லது வேறு ஏதேனும் கருத்தில் ஆவி என்பதைக் குறிக்கிறதா என்பதைச் சந்தர்ப்பப் பொருள்தான் தீர்மானம் செய்ய வேண்டும். NASB மற்றும் NIV ஆகிய இரு மொழிபெயர்ப்புகளுமே "spirit" அல்லது "Spirit" என்ற வார்த்தையைத் தேர்ந்துகொள்ளும்போது அதற்கு ஒரு விளக்கத்தை அளிக்கின்றன.

***வசனம் 19.*** இவ்வசனம் உடனடியாகக் கேள்விகளை எழுப்புகிறது. முதலில் வரும் **அந்த** என்ற சொற்றொடரில் உள்ள வினையாலணையும் பெயர்ச்சொல் தெளிவற்றதாக உள்ளது. இதற்கு நெருங்கியதாக முந்திய வசனத்தில் "ஆவி" என்ற பெயர்ச்சொல் உள்ளது, இதை NIV வேதாகமம் பரிசுத்த ஆவியானவர் என்பதாக எடுத்துக்கொள்கிறது. எனவே "அந்த ஆவியிலே" என்பதற்குப் பதிலாக NIV வேதாகமம் "அவர் மூலமாக" என்ற வார்த்தைகளை அளிப்பதில் வியப்பு எதுவுமில்லை. NIV வேதாகமத்தைப் பின்பற்றினால், இயேசு பரிசுத்த ஆவியானவர் மூலமாக **போய் பிரசங்கித்தார்**, அதாவது அவர் பரிசுத்த ஆவியானவர் அளித்த வல்லமையினால் சென்றார் என்று ஒருவர் புரிந்து கொள்வார். NIV வேதாகமம் இதை வலிவாய் நியாயப்படுத்துகிறதா? *En* என்ற கிரேக்க முன்னிடைச் சொல்லை "மூலமாக" என்று மொழிபெயர்த்தல் ஒரு சாத்தியக்கூறாக உள்ளது, மற்றும் இவ்வசனத்தின் இலக்கணம், முந்திய வசனத்தில் உள்ள "ஆவி" யை இந்த கிரேக்கப் பிரதிப்பெயர்ச்சொல் குறிக்க அனுமதிக்கிறது. விஷயம் அவ்வாறு இருந்தால், "அவர் மூலமாக" என்பது விரும்பித் தேர்ந்து கொள்ளப்படா விட்டாலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக உள்ளது. இது பேதுரு கூற விரும்பிய விஷயமாக இருந்ததா இல்லையா என்பது தான் கேள்வியாக உள்ளது. NIV வேதாகமம் ஆங்கில வாசகருக்கு சாத்தியமான விளக்கத்தை அளித்துள்ளது, ஆனால் அந்த மெ ாழிபெயர்ப்பு அவ்வசனத்தை சரியாக விளக்கப்படுத்தியுள்ளதா என்பது கேள்விக்குரியதாக உள்ளது.

"Which" அல்லது "whom" என்ற பிரதிப்பெயர்ச்சொல்

*பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடலாம், ஆனால் அது அவசியமாய் அப்படி இருக்க வேண்டியதில்லை. மொழிபெயர்ப்புகள், அதுவும் விசேஷமாகச் சமீப காலத்திய மொழிபெயர்ப்புகள், அத்தியாவசியமாகப் பிரதிபலிக்காதிருந்தாலும்,* "in which" *("இதிலே") என்பதற்கான (en hoi என்ற) கிரேக்கச் சொற்றொடர், 1 பேதுரு நிருபத்தில் மற்ற நான்கு இடங்களில் (1:6; 2:12; 3:16; 4:4) காணப்படுகிறது.* NASB *வேதாகமம் இதை "இதிலே" அல்லது "விஷயத்தில்" என்று சீர்பொருத்தமாக மொழிபெயர்க்கிறது. மற்ற இடங்களில் இந்தச் சொற்றொடர், அதாவது இந்தப் பிரதிப்பெயர்ச்சொல்லானது, அவ்விடத்துச் சந்தர்ப்பப்பொருளினால் தரப்பட்ட அதற்கு முந்திய சிந்தனையைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. இவ்வாறாக 1:6ல் பேதுரு "இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்" என்று எழுதும்போது, "இதிலே" என்ற பிரதிப்பெயர்ச்சொல், 1:4, 5ல் விவரிக்கப்பட்டுள்ள எல்லா சுழ்நிலைகளிலும் சந்தோஷம் அடைவதைக் குறிக்கிறதே தவிர, வேறு தனிப்பட்ட விஷயம் எதையும் குறிப்பதில்லை. அதுபோன்றே, நமக்கு முன்பாக உள்ள இவ்வசனத்தில்,* ***"அந்த"*** *என்பது "ஆவியை" குறிக்காமல், கிறிஸ்துவைப் பற்றிய முந்திய விவரிப்பை, அதாவது அவர் மரித்து பின்பு உயிர்ப்பிக்கப்பட்டதை, குறிப்பதாக இருக்கலாம். ஒருவேளை பேதுரு, இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுடன் இணைந்திருந்த நிகழ்வுகளின் ஓட்டத்தில், அவர் "பிரசங்கித்தார்" என்று கூறியிருக்கலாம். அப்படியென்றால் பின்வருபவை தேர்ந்து கொள்ளப்படக் கூடிய விஷயங்களாக உள்ளன: (1) பரிசுத்த ஆவியானவர் என்ற முகமையினால் இயேசு சென்றார் என்று பேதுரு கூறியிருக்கலாம், அல்லது (2) அவர் ஆவிக்குரிய வகையில் சென்றார் என்றோ அல்லது (3) அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் அடைப்பிடப்பட்ட நிகழ்வுகளின் ஓட்டத்தில் அவர் சென்றார் என்றோ அவர் குறிப்பிட்டிருக்கலாம். இவற்றில் முதல் மற்றும் இரண்டாம் தெரிவுகளில், பிரதிப்பெயர்ச்சொல்லுக்கு முன்னால் வரும் வார்த்தை "ஆவி" என்பதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. முதல் நிகழ்வில் இது* (NIV *வேதாகமத்தில் உள்ளது போன்று) பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதாக உள்ளது; இரண்டாவதாக வரும் ஆவி என்ற சொல்லில் இது* (NASB *வேதாகமத்தில் உள்ளது போன்று) பொதுவாக "ஆவிக்குரிய வகையில்" என்று அர்த்தப்படுவதாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. "அந்த" என்ற முன்சொல் "ஆவியானவரை" அல்லது "ஆவியை" குறிப்பதாக இருக்கலாம், அல்லது அது கிறிஸ்து மரித்து உயிர்த்த நிலையின் சூழ்நிலையைக் குறிப்பதாக இருக்கலாம். ஒருவர் எடுத்துக் கொள்ளும் விளக்கம் எதுவாக இருந்தாலும், வசனப்பகுதியின் எஞ்சியவற்றைப் புரிந்துகொள்ளும் வழியில் அது பெரிதும் செயல்விளைவை ஏற்படுத்தும்.*[19] *இவ்வசனங்களினால் எழுப்பப்பட்டுள்ள மற்ற பிரச்சனைகளை ஆராய்ந்து பார்க்கும் வரையில், இந்தச் சாத்தியக்கூறுகளுக்கிடையில் ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதலை நாம் தாமதிப்போம்.*

*கேள்விகள் தொடருகின்றன. "அவர் போய் ... பிரசங்கித்தார்" என்பது நேரடியாகவோ அல்லது உருவக நடையிலோ புரிந்துகொள்ளப்படலாம், வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் இயேசு தாமே நபர்த்துவத்தில் சென்றிருக்கலாம், அல்லது உடலற்ற வகையில் அல்லது பிரதிநிதித்துவம ாகச் சென்றிருக்கலாம். எப்படியிருப்பினும், இயேசு* ***போய்க் காவலிலுள்ள***

***ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்*** என்று பேதுரு கூறியபோது, "காவலிலுள்ள ஆவிகள்" என்பதற்கு உருவக ரீதியான வாசித்தல் ஒன்று தேவைப்படுகிறது. கம்பிகளையும் காவலர்களையும் உடைய உண்மையான ஒரு சிறைச்சாலை, ஆவிகளைப் பிடித்து வைத்துள்ளது என்பது கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும். ஆவிகள் ஏதோ ஒரு வகையான சிறைச்சாலையில் இருந்தன, ஆனால் அது மனிதர்கள் அறிந்துள்ளது போன்றதல்ல. NASB வேதாகமம் "உள்ள" [இப்பொழுது அதாவது "now"] என்ற வார்த்தையைச் சாய்வெழுத்துக்களில் இட்டுள்ளது, அது இவ்வார்த்தை கிரேக்க மொழி வேதாகமத்தில் இல்லை என்பதை அர்த்தப்படுத்துகிறது. NASB வேதாகமம் "now" என்ற வார்த்தையை உட்செருகும்போது, அது இயேசு அந்த ஆவிகளுக்குப் பிரச்கித்தபோது அவைகள் "காவலில்" இருக்கவில்லை, ஆனால் பேதுரு இதை எழுதி யபோது அவைகள் காவலில் இருந்தன என்ற கருத்தைத் தருகிறது. "Now" என்ற வார்த்தையை உட்செருகியதன் மூலம் NASB வேதாகமம் நன்கு செயல்பட்டுள்ளதா இல்லையா என்பதை, வேதாகமத்தை வாசிப்பவர், சந்தர்ப்பப் பொருளின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும்.

இயேசு பிரசங்கிப்பதைக் கேட்ட "ஆவிகள்" அந்த வேளையில் காவலில் இல்லை என்றால், அவைகள் எங்கே இருந்தன? "காவலில்" என்பது அர்த்தப்படுத்துவது என்ன? இக்கேள்விகளுக்கான பதில்கள், இயேசு பிரசங்கிப்பதைக் கேட்ட "ஆவிகள்" யாராக இருந்தன என்பதைச் சார்ந்துள்ளது. 3:20ன்படி, அந்த ஆவிகள் நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற் போனவைகளாக இருந்தன. இது, வெள்ளப்பெருக்கிற்கு முன்னால் வாழ்ந்த பொல்லாத தூதர்கள், ஆதியாகமம் 6:1-4ல் உள்ள "தேவகும ாரர்" ஆகியோரைப் பற்றிய குறிப்பாகும் என்று சிலர் வாதிடுகின்றனர். ஆதி யாகமம் 6:1-4ல், "மனுஷகுமாரத்திகளை" மனைவிகளாக்கிக் கொண்ட "தேவ குமாரர்" என்பதில் அசாதாரணமான சமகாலத்திய ஆர்வம் இருந்தது என்பது உண்மையாக இருக்கையில், அந்த "தேவ குமாரர்" (அவர்கள் யாராக அல்லது என்னவாக இருந்தாலும்) அவர்களைப் பற்றிப் பேதுரு ஆர்வம் கொண்டிருக்கவில்லை. பேதுரு தமது நாட்களில் இருந்த மக்கள் மீது தேவன் கொண்டு வரும் நியாயத்தீர்ப்பு பற்றி அக்கறை கொண்டவராக இருந்தார். தூதர்கள் மீது வரும் நியாயத்தீர்ப்பு பற்றி அவர் ஆர்வம் கொண்டிருக்கவில் லை. அவரது சொந்த நாட்களில் கீழ்ப்படியாமற்போன மக்களைப் போன்றே, நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற்போன மக்களும் தேவனுடைய கோபத்தைத் தூண்டினர். "மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்று ... கர்த்தர் கண்டு" (ஆதியாகமம் 6:5). நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற்போன "ஆவிகள்" அந்தத் தலைமுறையில் இருந்த பொல்லாத மக்களாவர்.

மக்களை "ஆவிகள்" என்று குறிப்பிடுதல் வழக்கத்திற்கு மாறானதாகும், ஆனால் நீண்ட நாட்களுக்கு முன்னரே மரித்துப் போனவர்களுக்கு அப்போஸ்தலர் வேறு எந்தப் பெயரைக் குறிப்பிடுவார்? வார்த்தையின் சாதாரணக் கருத்தின்படி அவர்கள் இனியும் மக்களாக, அதாவது ம ாம்சத்தில் உள்ள மக்களாக இருக்கவில்லை. நோவா உட்பட அக்காலத்தில் வெள்ளப் பெருக்கிற்குத் தப்புவிக்கப்பட்டு உயிர் வாழ்ந்திருந்த மக்களை, "ஆத்துமாக்கள்" (*psuchai, 3:20*) என்று வார்த்தையைப் பேதுரு

இவ்விடத்தில் பயன்படுத்துதலானது, “ஆவிகளின் பிதா” வானவர் “சரீரத்தின் தகப்பன்மார்களுக்கு” மேலாக வைக்கப்பட்டுள்ள இடமான எபிரெயர் 12:9ல் உள்ளதைப் போன்றதாகும். பேதுருவைப் போன்றே எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரும் “ஆவிகள்” என்ற வார்த்தையை, (இந்த நிருபம் எழுதப்பட்ட காலத்தில்) மாம்சத்தில் உயிரோடே இராத (அதாவது மரித்துப்போன) மனிதர்களுக்குப் பயன்படுத்தினார். “ஆவிகள்” “காவலில்” இருந்தன என்று பேதுரு கூறியபோது நோவாவின் நாட்களில் கலகம் செய்திருந்த மக்கள், இப்போது மாம்சத்தில் இல்லை என்றாலும், மரித்தவர்களின் வட்டாரத்தில் அடைக்கப்பட்டிருந்தனர் என்று அவர் உறுதிப்படுத்தினார். “ஆவிகள்” என்பது நோவாவின் தலைமுறையில் கீழ்ப்படியாமற்போன மக்களைக் குறிக்கிறது. பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, அவர்கள் பாதாள வட்டாரத்தில் இருந்தனர். அதுவே அவர்களின் சிறையாக இருந்தது. தீர்க்கதரிசனம் பற்றிப் பழகி அறிந்துள்ளவர்களுக்கு, சிறைச்சாலை என்ற வகையில் பாதாள வட்டாரத்தைக் குறிப்பிடுதல் அந்நியமான கருத்தாக இருப்பதில்லை. உதாரணமாக, எசேக்கியேல் தீர்க்கதரிசி, எகிப்தின் பராக்கிரமசாலிகள், சிறைச்சாலை போன்றுள்ள நிழலான வட்டாரமான பாதாளத்திற்கு இறங்கிச்சென்றிருந்தனர் என்று விவரித்தார் (எசேக்கியேல் 32:18-32). பேதுரு “காவல்” என்று குறிப்பிட்டது எசேக்கியேல் தீர்க்கதரிசனத்தில் உள்ள “பாதாளம்” என்பதற்குச் சமமானதாகும்.

இதைத் தொகுத்துரைப்பதென்றால், மரித்தோரின் உலகத்திற்கு, குறிப்பாக நோவாவின் நாட்களில் கீழ்ப்படியாமற் போனவர்களிடத்திற்கு இயேசு சென்று “பிரசங்கித்தார்” என்றாகிறது. இயேசு ஒரு செய்தியை அறிவித்தார். *Kerusso* என்ற வார்த்தை, ஒரு செய்தியை அறிவிப்பதற்கான பொதுவான வினைச்சொல்லாக உள்ளது. 4:6ல் பேதுரு, “சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல்” என்று அர்த்தப்படும் *euangelizo* என்ற வினைச்சொல்லைப் பயன்படுத்துவார், ஆனால் இங்கு அல்ல. மரித்தவர்களுக்கு இயேசு பிரசங்கித்தது அல்லது அறிவித்தது என்ன? மரித்தவர்களுக்கு எதையாவது அறிவிக்க வேண்டும் என்று அவர் விரும்பியது ஏன்? இந்தக் கேள்விகளைக் கையாள்வதற்கு நாம் இவ்வசனத்தைப் பற்றி முதலில் எழுப்பிய பிரச்சனைக்குப் பின்செல்ல வேண்டும். பிரதிப்பெயர்ச்சொல்லுக்கு முன்னால் வரும் வார்த்தை என்ன? “அந்த” என்பதன் அர்த்தம் என்ன?

கிரேக்க வேதாகமம் மற்றும் NASB வேதாகமம் ஆகிய இரண்டிலும் 3:18 வசனத்தின் கடைசியில் உள்ளது “ஆவி” என்ற வார்த்தையாகும். இது இயேசு மாம்சத்தில் அடங்கியிருந்த வட்டாரத்தின் வேளையில் அவர் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டார்; மற்றும் அவர் ஆவியின் வட்டாரத்தில் இருந்தபோது உயிர்ப்பிக்கப்பட்டார் என்று அர்த்தப்படுகிறது. இயேசு உயிர்ப்பிக்கப் பட்டார் என்று எளியவகையில் பேதுரு கூறாதது ஏன்? அவர் “ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்” என்று கூற வேண்டியது ஏன்? “ஆவிக்கேற்ற மாளிகை” மற்றும் “ஆவிக்கேற்ற பலிகள்” என்பவற்றை அப்போஸ்தலர் குறிப்பிடும் 2:5ம் வசனத்தில் சற்றே உதவி இருக்கலாம். அங்கு அவர், மாளிகை மற்றும் பலிகள் என்பவை பொருள்சார்ந்தவையல்ல என்று அர்த்தப்படுத்துவதாகக் காணப்பட்டது. அவைகள் “ஆவிக்கேற்ற” விஷயங்களாக இருந்ததால், அவைகள் தேவனுடைய சந்தோஷத்திற்காகவும் தேவனுடைய அங்கீகாரத்திற்கு

*ஏற்றவைகளாகவும் இருந்ததாக அர்த்தப்படுத்தின என்பதில் சந்தேகம் இல்லை, ஆனால் அவைகள் பொருள்சார்ந்தவையாக இருக்கவும் இல்லை. "ஆவி" என்பது மாம்சமற்றதை அர்த்தப்படுத்தக் கூடுவது போன்றே, ஆவிக்கேற்ற என்பது நேரடியானதல்ல என்று அர்த்தப்படக்கூடும். 2:5ல் "ஆவிக்கேற்ற" என்பதன் பயன்பாடு, இயேசு மரணத்தை வெற்றிகொண்டதை பேதுரு புரிந்து கொண்டதற்கு ஒரு குறிப்பாக உள்ளது. கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்பு அவரைத் தேவன் உயிர்ப்பித்தார். "ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்பதன் பொருள் சார்பற்ற, மாம்சமற்றதான அம்சம், 3:19ல் உள்ள "அந்த" என்பதன் பயன்பாட்டில் கொண்டுவரப்படுகிறது. மாம்சத்தில் இருப்பதற்கு ஆவியில் இருப்பதற்கும் இடையிலான வித்தியாசம் ஒன்றைப் பவுல் ஏற்படுத்தினார் (கொலோசெயர் 2:5). ஒருவர் நேரடியாக, சரீரரீதியாக இங்கிராதபோது, அவர் (ஆவிக்குரிய வட்டாரத்தில்) "ஆவியில்" இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது.*

*இயேசு "ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று கூறியுள்ள நிலையில் பேதுருவின் சிந்தனை திசை மாறிற்று. அவர் கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் ஊழியம், பாவங்களுக்காக அவர் மரித்தது மற்றும் அவரது உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் இருந்து, கிறிஸ்தவர்களை அடக்கிக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கும் உலகத்தின் கண்களில் கிறிஸ்தவர்கள் பழியினின்று விடுவிக்கப்பட்ட விஷயத்திற்குக் கடந்து சென்றார். பேதுருவின் சிந்தையானது, கர்த்தர் வெளிப்படுதலுக்கும் அவரது வெளிப்பாட்டில் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பிற்கும் திரும்பிற்று. நியாயத்தீர்ப்பு பற்றிய இந்த ஆய்வுக்கருத்துதான் அவரை நோவாவினிடத்திற்கு எடுத்துச் சென்றது. தேவன், மனிதகுலத்தின்மீது உலகளாவிய வகையில் நியாயத்தீர்ப்பு கொடுத்திருந்த இன்னொரு வேளை இருந்தது. நோவாவின் காலத்தில் தரப்பட்டிருந்த நியாயத்தீர்ப்பு கிறிஸ்து இல்லாத நிலையில் நடைபெற்றிருக்கவில்லை என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று பேதுரு விரும்பினார். ஆவிக்குரிய வகையில், பொருள்சார்பற்ற வகையில் நோவா தமது தலைமுறை வாழ்ந்திருந்த மக்களுக்குப் பிரசங்கித்தபோது, அவர்களுக்காக அவர் தேவனுடைய செய்தியை அறிவித்தபோது, நோவாவின் மூலமாகக் கிறிஸ்துவே பேசினார். மோசேயின் அல்லது ஏசாயாவின் நாட்களில் இருந்த உலகத்தைத் தேவன் நியாயந்தீர்த்து இருந்ததால், நோவா மூலமாகப் பேசினார் என்பதே இங்கு பொருத்தமானதாக உள்ளது. அந்த நாளில் தேவன், தம்மையும் தமது வல்லமையையும் தமது நோக்கத்தையும் வெளிப்படுத்தினார். பேதுருவுக்கும் அவரது வாசகர்களுக்கும் அவர்களுக்கு உலகப்பிரகாரமான நியாயத்தீர்ப்பு விதித்து அவர்களை அடக்கியவர்களுக்கும் கூடத் தேவன் தம்மை வெளிப்படுத்துவார். இயேசு ஆவிக்குரிய வகையில் நோவா மூலமாகப் பேசினார் அப்போது நியாயத்தீர்ப்பு வந்தது. அவ்வாறே இயேசு ஆவிக்குரிய வகையில் பேதுரு மற்றும் அப்போஸ்தலிக்க சாட்சியங்கள் மூலமாகப் பேசினார். அவர்களின் அறிவித்தலைத் தொடர்ந்து நிச்சயமாகவே நியாயத்தீர்ப்பு வரும்.*

*வசனப்பகுதிகளை இவ்வாறு புரிந்துகொள்ளுதல், அகுஸ்தீன் காலத்திற்கு (கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுற்கு) பின்திரும்பிச் செல்லுகிறது என்று கூறப்படுதலே நிலைத்துள்ளது, மற்றும் இது நவீன காலத்து பலமான*

கல்வியாளர்களால் தற்காக்கப்படுகிறது. இயேசு சென்று அறிவித்தல் என்பது பொருள் வகையில் செல்லுதல் என்பதாயிராமல் ஆவிக்குரிய வகையில் நிகழ்ந்ததாகப் புரிந்து கொள்ளுதலே மிகச்சிறந்ததாகும். தேவனுடைய நியயாத்தீர்ப்பு உடனடியாகவும் உலகளாவிய வகையிலும் வரவிருந்த வேளையில், தேவனுக்காகப் பேசியவரான நோவா என்ற நபர்வழியாக இயேசு பேசினார். நோவா பேசியபோது இயேசு பேசினார்; பேதுரு பேசியபோது இயேசு பேசினார்.

*3:19*ஐப் பற்றிய இன்னொரு விளக்கமும் ஆழ்ந்த சிந்தனைக்குத் தகுதியானதாக உள்ளது. இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல் ஆகியவற்றிற்கு இடையில், அவர் நேர்ப்பொருளில் மரித்தவர்களின் உலகத்திற்குச் சென்றார் என்ற உபதேசம், *Descensus* என்று அழைக்கப்படுகிறது, இது பழங்கால சபையில் பொதுவாக உரைக்கப்பட்டது. பாதாள உலகத்திற்கு அவர் சென்றதற்கான நோக்கம் என்ற வகையில் பல்வேறு விளக்கங்கள் இருந்தன. ஒருவேளை அது வெற்றியை அறிவிப்பதற்காக, விசுவாசிகளை மறு உறுதிப்படுத்தி அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவதற்காக மற்றும் துன்மார்க்கருக்கு ஆக்கினையை அறிவிப்பதற்காக நடந்திருக்கலாம். இந்த உபதேசத்தை ஆதரிக்க, நடபடிகள் *2:27* மற்றும் எபேசியர் *4:9* போன்ற வசனப்பகுதிகள் காண்பிக்கப்படுகின்றன. ரூஃபினுஸ் காலத்தில் (கி. பி. *360*) இருந்து தொடங்கப்பெற்ற அப்போஸ்தலர் உபதேசத்தின் பிந்திய வடிவம் "அவர் நரகத்திற்கு இறங்கிச் சென்றார்" என்ற சொற்றொடரைக் கொண்டுள்ளது. காலத்தின் முடிவிற்காகக் காத்திருக்கும் ஆத்துமாக்கள் உள்ள வட்டாரத்திற்கு இயேசு இறங்கிச் சென்றார் என்றும், இதுவே இயேசுவும் கள்வனும் சிலுவையில் அறையப்பட்ட பின்பு சென்ற இடமாகும் என்றும் வாதிடப்படுகிறது (லூக்கா *23:43*), இங்கு கீழ்ப்படிந்திருந்த மற்றும் கீழ்ப்படியாமற்போன ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்பிற்காகக் காத்துள்ளன.

சிலர் *Descensus* என்பதை "இரண்டாவது வாய்ப்பு" இறையியலாகக் காண முயற்சி செய்கையில், அது இந்த உபதேசத்தின் மறைவான கருத்தாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இயேசு பாதாளத்திற்கு இறங்கிச் சென்றதற்கு மற்ற காரணங்கள் உள்ளன. இயேசு தமது சிலுவை மரணத்திற்குப் பின்பு, அவர் ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டபோது, ஆவிஜீவிகளுக்கு அல்லது மரித்தோரின் ஆவிகளுக்குப் பிரசங்கிப்பதற்காகச் சென்றார் என்று நேர்ப்பொருளில் பேதுரு தமது வாசகர்களுக்கு நினைவூட்டினார் என்பது கருதுவதற்கு கடினமான விஷயமாக உள்ளது. இருப்பினும் அதுவே பேதுரு அர்த்தப்படுத்துவதாக இருந்தால், உடனடியாகத் தொடரும் சிந்தனைக்கான அவரது வார்த்தைகளின் ஏற்புடையமையைக் காணுதல் கடினமானதாக உள்ளது. பாதாள உலகத்திற்கு இயேசு இறங்கிச் சென்றது என்பது தொடர்பற்ற சிந்தனை போன்று இந்த சந்தர்ப்பப் பொருளில் பொருந்துகிறது. மற்றும், பிரசங்கிப்பதற்காக இயேசு பாதாள உலகத்திற்கு இறங்கிச் சென்றார் என்ற கருத்தானது, புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியில் இருந்து மிகச்சிறந்த வகையில், தெளிவற்ற ஆதரவையே பெறுகிறது. இப்படிப்பட்ட ஒரு இறங்குதலைப் பேதுரு குறிப்பிட்டார் என்பது நினைத்துப் பார்க்க இயலாததாக உள்ளது, இது இவ்வாறு இருக்கக் சாத்தியக்கூறு இல்லை, "அந்த" என்ற பிரதிப்

*பெயர்ச்சொல்லின் முன்வரும் சொல் "ஆவி" என்று நாம் முடிவு செய்கிறோம், இதுவே முந்திய வசனத்தின் கடைசிப்பகுதியில் வந்துள்ளது, மற்றும் அந்த ஆவி என்ற ஆவி சொல் சிற்றெழுத்தில் உச்சரிக்கப் பட்டுள்ளது. "அந்த" என்ற வார்த்தையே பேதுரு பயனப்படுத்தியுள்ள மற்ற இடங்களில், இப்பிரதிப் பெயர்ச்சொல்லானது இது வரும் இடத்திற்கு முந்தியுள்ள சந்தர்ப்பப் பொருளைக் குறிப்பதாகக் காணப்படுகிற, ஆனால் இச்சொற்றொடர் இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது விதிவிலக்கானதாக உள்ளது. இச்சொல் வரும் ஒவ்வொரு இடமும் அதன் சொந்தத் தகுதியைக் கொண்டு சிந்திக்கப்பட வேண்டும். 3:19ல் பிரதிபெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள வழியானது, அது தன் அருகாமையில் உள்ள முன்சொல் குறிப்பிடுவதை அல்ல ஆனால் "ஆவியை" யே குறிப்பிடுகிறது என்று புரிந்துகொள்ளுதல் இயல்பானதாக உள்ளது.*

***வசனம் 20.*** *பேதுரு இந்த நிருபத்தை எழுதியபோது, பாதாள உலகத்தில் இருந்த அந்த மக்களாகிய ஆத்துமாக்கள், [முன்பு] ஒருகாலத்திலே, கிறிஸ்து பிரசங்கித்தபோது* ***கீழ்ப்படியாமற்போனவைகள்.*** *நோவாவின் காலத்தில் வாழ்ந்திருந்தவர்களின் கீழ்ப்படியாமைபேதுருவின் நாட்களில் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தியவர்களின் கீழ்ப்படியாமைக்கு இணையாக இருந்தது. இவ்விரு விஷயங்களிலும், கீழ்ப்படியாதவர்கள் "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" (4:5). பெருவெள்ளத்திற்கு முன்பிருந்த உலகத்தைத் தேவன், மக்களின் துன்மார்க்கத்திற்கான முழங்கால் சறுக்கிய பதில்செயல் என்ற வகையில் அழிக்கவில்லை.* ***நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களில், தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தது*** *போன்றே, பேதுருவின் நாட்களிலும் அவர் பொறுமையோடே காத்திருந்தார். இந்த அப்போஸ்தலர் தமது இரண்டாம் நிருபத்தில், "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என்று கூற இருந்தார் (2 பேதுரு 3:9). நோவா தமது தலைமுறையில் இருந்த மக்கள் உயிரோடிருக்கையில், அவர்களுக்குப் பிரசங்கித்தபோது, அவர் மூலமாகக் கிறிஸ்துவே அவர்களுக்குப் பிரசங்கித்தார். அந்தப் பிரசங்கத்தை நோவாவின் தலைமுறையினர் விசுவாசிக்கவில்லை. கடைசியில் நோவா குற்றமற்றவர் என்று மெய்ப்பிக்கப்பட்டார்; அவிசுவாசிகள் நியாயந்தீர்க்கப்பட்டனர். பேதுருவின் தலைமுறையிலும் அவ்வாறே இருக்கும்.*

*பெருவெள்ளத்திற்கு முந்திய காலத்தின் மக்களுக்கு, "நீதியைப் பிரசங்கித்தவனாகிய" (2 பேதுரு 2:5) நோவாவின் வார்த்தைகள் மூலமாக, கிறிஸ்து எச்சரிக்கை தந்த வேளையாவற்றிலும், உணர்ந்து அறியத் தக்க மற்ற எச்சரிக்கைகளைத் தேவன் கொடுத்துக் கொண்டிருந்தார். நோவா* ***பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே*** *பிரசங்கித்துக் கொண்டிருந்தார். கிறிஸ்துவுக்காகப் பேசிய நோவாவைப் போன்றே, பேதுருவும் தமது தலைமுறையில் இருந்த மக்களுக்கு காணக்கூடிய எச்சரிக்கைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார். பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலிக்க சாட்சியங்களின் பிரசங்கித்தல் மூலமாக, சபை நிலைநாட்டப்பட்டது. முன்னதாக அப்போஸ்தலர், சபையை "ஆவிக்கேற்ற மாளிகை" என்று*

அழைத்திருந்தார் (2:5). நோவாவின் சந்ததியில் இருந்தவர்களில் சிலர் தங்களைச் சுற்றிலும் இருந்த துன்மார்க்கத்திற்குத் தப்பும்படியான அடைக்கலத்தை நாடியவேளையில், அவர்கள் காக்கப்பட்டனர், அதுபோன்றே பேதுருவின் சந்ததியில் இருந்தவர்களில் சிலர், தேவனுடைய ஆவிக்கேற்ற மாளிகையில் அடைக்கலம் நாடியபோது மீட்கப்பட்டனர். பேதுரு இதை யாருக்கு எழுதினாரோ அந்தக் கிறிஸ்தவர்கள், தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது தாங்கள் தங்கியிருக்கக் கூடிய பேழை ஒன்றைக் கொண்டிருந்தனர். 3:20ல் உள்ள “பேழை” என்பது பேதுருவின் வாசகர்களுக்கு, 2:5ல் உள்ள “ஆவிக்குரிய மாளிகை” மற்றும் “பரிசுத்த ஆசாரியத்துவம்” என்பவற்றைப் போன்றதாகவே உள்ளது. கிறிஸ்தவர்கள் சிறிய எண்ணிக்கையில் உள்ளனர் என்பது உண்மையே, ஆனால் நோவா தமது பேழையைக் கட்டியபோது, **சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம்** பாதுகாக்கப்படும்படி அதனுள் கொண்டுவரப்பட்டனர். பேதுருவின் காலத்தில் இருந்த சந்ததியில் சிலர் மாத்திரமே பாதுகாப்பைக் கண்டடைவார்கள் என்பது திகைப்புக்குரிய விஷயமாக இருக்கக் கூடாது.

நோவா, பேழை பற்றிய ஒப்புவமையும் (இது ஏறக்குறைய உருவகம் போன்று உள்ளது) நோவாவின் தலைமுறையில் இருந்த துன்மார்க்கமும் இந்தக் கருத்திற்கு நேர்த்தியாகப் பணிசெய்துள்ளன. இருப்பினும், நோவாவின் தலைமுறையில் எட்டுப்பேர் **(தண்ணீர் மூலமாக) காக்கப்பட்டார்கள்** என்று பேதுரு கூடுதலாகக் கூறுகையில், [இங்கு 1 பேதுரு 3:20ல் ஆங்கில வேதாகமங்கள் யாவற்றிலும் மற்றும் கிரேக்க வேதாகமத்திலும் கூட, “were brought safely through the water” என்றுள்ளது, ஆனால் தமிழ் வேதாகமத்தில் இது ***“காக்கப்பட்டார்கள்”*** என்று மாத்திரம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது,] நாம் கவனமாகக் கடந்து போக வேண்டும். இது ஒரு விநோதமான கூற்றாக உள்ளது. இவ்வசனமானது எட்டுப்பேர் மாத்திரம், “தண்ணீர் மூலமாக” அல்ல ஆனால் “தண்ணீரில் இருந்து காக்கப்பட்டனர்” என்று கூறுவதையே ஒருவர் எதிர்பார்க்க முடியும். நிச்சயமாகவே அவர்கள் வெள்ளப்பெருக்கின் வழியாகப் பாதுகாக்கப்படவில்லை, அல்லவா? ஒருவேளை அந்த எட்டுப்பேர் தங்கள் காலத்தில் வாழ்ந்த மற்றவர்களுக்குக் கிடைத்த நியாயத்தீர்ப்பை, அவர்கள் பெறாதிருக்கும்படி அதிலிருந்து காக்கப்பட்டனர் என்று பேதுரு இங்கு அர்த்தப்படுத்தி இருக்கலாம். இது அவரது அர்த்தமாக இருக்கும் என்றால், அவர்களைத் தண்ணீரே காப்பாற்றிற்று எனலாம். பூமியின்மீது மனிதகுலத்தின் பாவங்களைத் தண்ணீர் கழுவிப்போட்டது மற்றும் கீழ்ப்படியாதவர்கள் அனுபவித்த அதே நியாயத்தீர்ப்பினின்று எட்டுப்பேரைக் காப்பாற்றிற்று. தண்ணீரினால் கழுவப்படுதல் இல்லாதிருந்தால், அவர்கள் தங்களைச் சுற்றிலும் இருந்த துன்மார்க்கத்தில் தாங்களும் அகப்பட்டிருக்கக் கண்டிருப்பார்கள்.

பேதுரு “தண்ணீர்” என்ற சொல்லை இங்கு கொண்டு வந்தது ஏன் என்று கேட்பது பொருத்தமற்றதாக உள்ளது. பின்தொடரும் வசனம் இதைத் தெளிவுபடுத்துகிறது. நோவாவின் தலைமுறையில் இருந்த எட்டுப்பேரின் இரட்சிப்பு என்பது அவரது பாடக்கருத்தாக இருந்ததால் அவர் இதைக் கொண்டுவந்தார். அப்போஸ்தலரின் வாசகர்களுடைய இரட்சிப்பு என்பதே தொடர்ந்து வரும் பாடப்பொருளாக இருந்தது, பேதுரு இதை முதலாவது

யாருக்கு எழுதினாரோ அந்தக் கிறிஸ்தவர்கள், நோவாவின் நாட்களில் எட்டுப்பேரைப் போன்றே, (1) தேவன் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவந்தபோது மற்றும் (2) தண்ணீர் மூலமாக, தங்கள் சமகாலத்திய மக்களில் இருந்து மீட்கப்பட்டனர். இந்த ஒப்புவமை முழுமையும் நேர்ப்படாது என்றாலும், கடந்த காலத்தில் தேவன் செயல்பட்ட விதம், மற்றும் பேதுருவின் வாசகர்களிடத்தில் தேவன் செயல்படும் விதம் ஆகியவற்றிற்கு இடையில் இணைகருத்துக்கள் இருந்தன என்று பேதுருவின் வாசகர்களுக்கு உறுதியளிக்க இது போதுமானதாக உள்ளது. அவர்கள் அழியாத வித்தினாலே "மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டனர்" என்று முன்னரே பேதுரு கூறியிருந்தார். அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றபோது மறுபடியும் பிறந்திருந்தனர் (1:3, 23 ஆகியவற்றிற்கான விளக்கங்களைக் காணவும்). தண்ணீரில் அவர்கள் பெற்ற ஞானஸ்நானம், அவரை அவர்கள் அணிந்துகொண்டனர் (கலாத்தியர் 3:27), அவரது மக்களாயினர், மற்றும் சுதந்தரத்தில் பங்கு பெற்றனர் என்ற கருத்தைக் கொடுத்தது. நோவாவின் நாட்களில் எட்டுப்பேர்களின் இரட்சிப்பு என்பது பேதுருவின் வாசகர்களின் இரட்சிப்புடன் பல அம்சங்களில் இணைபடுகிறது. நோவாவின் நாட்களில், நோவாவும் அவரது குடும்பத்தாரும் தங்கள் தலைமுறையில் வாழ்ந்த மற்றவர்களின் செல்வாக்குச் செலுத்தும் நிலைகளில் இருந்து விடுதலையாகும்படிக்கு, பூமியின் மோசம் போக்கும் நடத்தைகள் யாவற்றையும், தண்ணீர் கழுவிப் புறம்பே போட்டது. பேதுருவின் வாசகர்கள் தண்ணீர் ஞானஸ்நானத்தில், தங்கள் பாவங்களை இயேசுவின் இரத்தம் எடுத்துப் போட்டதை அனுபவித்திருந்தனர். அவரது வாசகர்களுக்கு ஞானஸ்நானம் அர்த்தப்படுத்திய பொருளின் நிமித்தமாக, அவர்கள் "தண்ணீர் மூலமாக" இரட்சிக்கப்பட்டது போன்றே, நோவாவின் வாய்மூலமாக கிறிஸ்து பிரசங்கித்து இருந்ததைக் கேட்ட மக்களில் கீழ்ப்படிந்தவர்கள், "தண்ணீர் மூலமாக" கப்பாற்றப்பட்டனர் என்பதை [தமது வாசகர்கள்] காண வேண்டும் என்று அப்போஸ்தலர் விரும்பினார்.

**வசனம் 21.** இந்த நிருபம் முழுவதிலும், இந்த ஒரு இடத்தில்தான் **ஞானஸ்நானம்** என்ற வார்த்தை வெளிப்படையாகக் காணப்படுகிறது; இவ்வசனப்பகுதியில் இதன் தனிச்சிறப்புப் பற்றிய சந்தேகம் எதுவும் இல்லை. **அதற்கு ஒப்பனையான** என்பதற்கான NASB வேதாகம மொழிபெயர்ப்பு, பேதுருவின் வார்த்தைகளினுடைய வலிவைப் பலவீனப்படுத்துகிறது, மிகநேரடியாகச் சொல்வதென்றால், தண்ணீர் ஒரு "முன்மாதிரியாக" (*antitupos*) இருந்தது என்றே அவர் கூறினார். புதிய ஏற்பாடு முழுவதிலும் இவ்வார்த்தை இவ்விடத்தில் இரண்டாவது முறை வருகிறது, மற்றொன்று எபிரெயர் 9:24ஆகும். இரட்சிப்பு என்பது பாடக்கருத்தாக உள்ளது. நோவாவின் நாட்களில் தண்ணீரானது, அவர்களைச் சுற்றிலும் இருந்த மோசமான தலைமுறையில் இருந்து எட்டுப்பேர்களைக் காத்தபோது, அது **இப்பொழுது நம்மையும் இரட்சிக்கும்** "ஞானஸ்நானத்திற்கு" ஒரு "மாதிரியாக" இருந்தது.

அப்போஸ்தலரின் வாசகர்கள் ஏற்கனவே "ஞானஸ்நானத்தின்" தனிச்சிறப்பைப் பற்றிப் பயிற்றுவிக்கப் பட்டிருந்தனர் என்று அப்போஸ்தலர் யூகித்தார். அது இனியும் ஒரு இயந்திரத்தனமான செயலாக இருப்பதில்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். அதன் நன்மை விளைவிக்கும் ஆற்றலானது "நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப்

பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்ட" (3:18) கிறிஸ்துவின் ஊழியத்தில் இருந்து பாய்ந்தோடி வருகிறது. இரண்டாவது அது, அவரது வாசகர்களின் விசுவாச பதில் செயலில் இருந்து பாய்ந்தோடி வருகிறது. "ஞானஸ்நானம்" என்பது இரட்சிப்புக்குப் பின்னால் சேர்க்கப்படும் துணைப்பொருள் அல்ல என்பது தெளிவாக உள்ளது; அது "உள்ளான கிருபைக்கான புறம்பான பதில்செயல்" அல்ல. கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அவர் செயல்பட்டது போன்றே, ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போதும் செயல்பட்டு பாவங்களை எடுத்துப் போடுகிறார். "ஞானஸ்நானம்" என்பது மனித செயலாக உள்ளது, ஆனால் அது ஒரு தெய்வீக செயலாகவும் உள்ளது. மனஸ்தாபப்பட்ட பாவி ஞானஸ்நானம் பெறும்போது இரட்சிக்கப்படுகிறார் (ரோமர் 6:3, 4). கால்வின், சுவிங்கிலி மற்றும் பிற சீர்த்திருத்தக்காரர்கள், ரோமன் கத்தோலிக்கம் பற்றிய தங்களின் விமர்சனங்கள் பலவற்றிலும் சரியாக இருந்தனர், ஆனால் ஞானஸ்நானத்தில் விசுவாசம் வெளிப்படுத்தப்படுகையில் தேவன் செயல்படுகிறார் என்ற கருத்தை அவர்கள் புறக்கணித்த விஷயத்தில் அவர்கள் தவறு செய்தனர்.

D. A. கர்ஸன் அவர்கள், கிறிஸ்தவப் பாரம்பரியத்தில் வரலாற்றுரீதியான வேர்கள் எதுவுமன்றி, கிறிஸ்துவின் சபைகள் ஞானஸ்நானம் பற்றிய வினோதமான கண்ணோக்கைக் கொண்டுள்ளன என்று கருத்துத் தெரிவித்ததில் தவறானவராக இருந்தார்.[20] கிறிஸ்தவத்தின் தொடக்க நூற்றாண்டுகளில், ஞானஸ்நானம் பெறாமல் எவரொருவரும் கிறிஸ்துவுக்குள் இருப்பதாகக் கற்பிதம் செய்யவில்லை.[21] ஃப்ரெட் கீலி அவர்கள் பின்வருமாறு எழுதியதில் சரியானவராகவே இருந்தார்:

> ஞானஸ்நானம் என்பது, நித்திய ஜீவனுக்கு மனிதர்கள் செயல்வலிவாக அழைக்கப்படும் வேளையாக உள்ளது. [இது] உலகத்தில் இருந்து சபைக்குச் செல்லும் மார்க்கரீதியான வழியாக உள்ளது, இது தற்கால துன்மார்க்க உலகில் இருந்து தேவகுமாரனுடைய அன்பின் இராஜ்யத்தில் மறுபடி பிறத்தலாக, இந்த உலகில் இருந்து கிறிஸ்தவரை செயல்வலிவுடன் பிரித்து சபையில் அவரை நிலைநாட்டுதலுக்கான வெளிப்படையான அறிக்கையின் செயலாக இருந்தது.[22]

ஏராளமான குறிப்புகளைத் தரமுடியும். ஞானஸ்நானம், மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்பு ஆகியவை பிரிக்க இயலாத வகையில் இணைக்கப்பட்டுள்ளதாக, கிறிஸ்துவின் சபைகளுடன் தொடர்பற்ற வேதாகமக் கல்வியாளர்கள் பலரும் சுட்டிக்காண்பித்துள்ளனர். அவர்கள் ஒருவேளை, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களின் நடைமுறைகளினால் நவீன சபையானது வழிநடத்தப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் ஞானஸ்நானம் பெறாதிருந்த கிறிஸ்தவர்கள் என்பது போன்ற விஷயம் தொடக்ககால சபையில் இருந்ததில்லை என்பதைப் பலர் புரிந்துகொண்டனர். பேதுரு, **"ஞானஸ்நானமானது ... இப்பொழுது நம்மையும் ... இரட்சிக்கிறது"** என்று கூறியபோது அதைத் தெளிவுபடுத்தினார். பவுல், "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ,

அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" என்று எழுதியபோது (கலாத்தியர் 3:27), கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறாதவர்கள் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளவில்லை என்பதை மறைமுகமாய் உணர்த்தினார் என்பது தெளிவு. கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்கள் மாத்திரமே, கிறிஸ்தவ சுதந்தரத்தில் பங்கடைகின்றனர் என்பது சம அளவு தெளிவாக உள்ளது.

பேதுரு தெளிவுபடுத்தினார். "ஞானஸ்நானம்" என்பதன் தனிச்சிறப்பு அந்த சரீரப்பிரகாரமான சடங்கில்தான் உள்ளது என்று யூகிக்கும் எவரும், புதிய ஏற்பாட்டுப் போதனையைத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளார். எட்வர்டு கோர்டன் செல்வின் அவர்களின் வார்த்தைகளில் கூறுவதென்றால், ஞானஸ்நானம் என்பது, "உடலைச் சுத்திகரிக்கும் செயலல்ல, ஆனால் கிறிஸ்துவில் வெளிப்பட்ட தேவனுக்கு மனிதன் தன்னை முழுவதும் ஒழுக்கரீதியாக ஒப்புவிக்கும் செயலாக உள்ளது."[23] அதுபோல, "ஞானஸ்நானம்" என்பது தேவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையிலான உடன்படிக்கையின் வெறும் அடையாளமாக இருப்பதும் இல்லை. இதற்கு நேர் எதிராக, விருத்தசேதனம் என்பது, உடன்படிக்கையின் அடையாளமாகப் பணிசெய்த உடல்ரீதியான செயல்பாடாக இருந்தது. எட்டு நாட்களான பிள்ளை ஒருவனுக்கு விருத்தசேதனம் செய்வித்தபோது, தேவன் அதில் செயல்படவில்லை. விருத்தசேதனத்திற்கு முன்பேகூட, யூதக்குழந்தையானது தனதுபிறப்பினாலேயே ஏற்கெனவே தேவனுடைய மக்களில் ஒருவனாக எண்ணப்பட்டது. ஒரு விசுவாசி ஞானஸ்நானம் பெறுவதினால் **தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின்** வேண்டுகோள் விடுக்கும்போது, கிறிஸ்து "பாவங்களினிமித்தம் மரித்துள்ளதால்" (3:18), தேவன் அங்கு செயல்படுகிறார்; **இயேசுகிறிஸ்து** [தமது] **உயிர்த்தெழுதலினால்** வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளதால் அவர் [தேவன்] செயல்படுகிறார். ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகிறபோது, அவர் தமது புதிய பிறப்பின் காரணமாக, நெறிமுறைப்படி தேவனுடைய மக்களின் அங்கமாகிறார்.

ஞானஸ்நானம் என்பது, "நல்மனச்சாட்சிக்கு" இயேசு சிலுவையில் செலுத்திய விலைக்கிரயத்தை வேண்டி விண்ணப்பித்தலாக/தேவனுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளுதலாக உள்ளது. "மனச்சாட்சி" என்பது நவீனப் பேச்சு வழக்கில் பயன்படும் அதே அர்த்தத்தில் இங்கு பேதுருவினால் பயன்படுத்தப்படவில்லை. "மனச்சாட்சி" என்பது இங்கு உள்ளிருந்து ஒலிக்கும் மெல்லிய ஒலி அல்ல, மாறாக இது, ஒருவர் தமது சகமனிதருடனும் தேவனுக்கு முன்பாகவும் நிற்குதல் என்ற கருத்தாக உள்ளது. ஒருவர் ஞானஸ்நானம் பெற்றுள்ளதால், அவருடைய "நல் மனச்சாட்சி" தன்னுடனும், தேவனுடனும் மற்றும் அவருடைய சக மனிதர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அறிவாய் இருக்கிறது. இது அவருக்கு, தாம் தேவனுடைய சொந்த ஜனமாக, அவர் [கிறிஸ்து] தரிசனமாகும்போது வெளிப்படவிருக்கும் சுதந்தரத்திற்கு உரிமையாளராக இருக்கிறார் என்ற தைரியத்தையும் உறுதிப்பாட்டையும் அவருக்குத் தருகிறது. பேதுருவின் உலகத்தில் "மனச்சாட்சி" என்பது, இன்றைய நாட்களில் மக்களிடையே உள்ளதைக் காட்டிலும் அதிக கனமான சமூக அளவீட்டைக் கொண்டிருந்தது.

"ஞானஸ்நானம்" என்பது உடலைக் கழுவுதலாக இருக்க வேண்டும் என்று

பேதுரு புரிந்து கொண்டார் என்பது உற்றுநோக்கப்பட வேண்டும். இதன் தனிச்சிறப்பானது, கழுவுதல் பற்றிய சில செயல்களாக உள்ளது. ஞானஸ்நானம் என்பது தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்பதாக இருக்கும் என்று நாம் புரிந்துகொண்டால், அவரது ஒப்புமை முறிபடுகிறது. "ஞானஸ்நானம்" என்பது "நல்மனச்சாட்சியுடன்" ஞானஸ்நானம் பெறுபவர் பகுதியில் விடப்படும் "வேண்டுதலாக"/தேவனுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளுதலாக உள்ளது என்று கூடுதலாகப் பேதுரு கூறினார். ஞானஸ்நானம் பெறும் ஒருவர் தாமே இந்த வேண்டுகோளை ஏறெடுக்கும்படி/உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ளும்படிக்கு போதுமான அளவு பக்குவம் உள்ளவராக இருக்கிறார் என்பது இங்கு மறைவாக உணர்த்தப்படும் கருத்தாகும். [ஆங்கில வேதாகமங்களில் "appeal" மற்றும் "answer" என்ற வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன; தமிழ் வேதாகமத்தில் இது "உடன்படிக்கை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.] ஒருவர் தாம் இழந்து போகப்பட்டுள்ள நிலையை உணர்ந்தறியப் போதுமான அளவு வயது வந்தவராக இருக்கும்போது, அவர் முழுக்காட்டப்படுதலே ஞானஸ்நானம், அவ்வாறு செய்யும் போது அவர் நல்மனச்சாட்சிக்காக வேண்டுதல் செய்ய முடியும்.

**வசனம் 22.** சங்கீதங்களின் புத்தகத்தைக் காட்டிலும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி சான்று காண்பிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுப் புத்தகம் வேறு எதுவும் இல்லை,[24] மற்றும் சங்கீதம் 110ஐக் காட்டிலும் அதிகமாகச் சான்று காண்பிக்கப்பட்ட சங்கீதம் வேறு எதுவும் இல்லை, மற்றும் "கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்" (சங்கீதம் 110:1) என்ற பகுதியைக் காட்டிலும் அதிகமாகக் குறிப்பிடப்பட்ட வேறுபகுதி எதுவும் சங்கீதம் 110ல் இல்லை. இயேசு கிறிஸ்து **பரலோகத்திற்குப் போய், தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார்** என்பதைப் பேதுருவின் வாசகர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார். இயேசு கிறிஸ்துவுக்கு வரலாற்று அளவீடு ஒன்றுள்ளது. அவர் ஒரு மனிதராக இருந்தார், கன்னிப் பெண்ணிடம் இருந்து பிறந்தார், நாசரேத்தூரில் வளர்ந்தார், ஒரு பிரசங்கியாராக, ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார். உண்மையிலேயே காலத்தினூடே இயேசு பார்வையற்ற மனிதரைக் குணமாக்கினார், அற்புதமாய் ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார், தமது சீஷர்களில் மூவர் முன்னிலையில் மறுரூபமாக்கப்பட்டார். பொந்தியு பிலாத்துவின் கீழ் மற்றும் (தமது சொந்த ஜனங்களான) யூதர்களால் வற்புறுத்தப்பட்டு, ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்டார். மூன்றாம் நாளில் அவர் தேவனுடைய வல்லமையால் உயிர்ப்பிக்கப்பட்டார். கிறிஸ்தவ விசுவாசத்திற்கு அடிப்படையான இந்த நிகழ்வுகளும் இன்னும் மற்ற நிகழ்வுகளும் உண்மையிலேயே காலத்தினூடே நடைபெற்றன, ஆனால் இதுவே எல்லாமுமாக இருப்பதில்லை. கிறிஸ்துவின் அனுபவத்திற்கு, பழங்காலத்தைப் பற்றிய அறியும் வெறும் வினோதப்பிரியம் மாத்திரம் போதுமானதல்ல. இயேசு இப்போது அரசாளுகிறார். அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்றார், **தேவதூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் அவருக்குக் கீழ்ப்படிக்கிறது**. இயேசு மனிதராக இருந்தார் என்பதைக் காட்டிலும் அதிகமான விஷயங்களில் பேதுரு ஆர்வம் கொண்டிருந்தார்; அவர் [இயேசு] தேவனுடைய குமாரன் என்பதிலும் அவர்

[பேதுரு] ஆர்வமாயிருந்தார்.

"வலது பாரிசத்தில்" அமருதல் என்பது தனக்கே உரிய அடையாளத்துவத்தைக் கொண்டுள்ளது. "வலது பாரிசம்" என்பது நெருக்கத்தையும் அதிகாரத்தையும் உடனடியாகத் கருத்தாய்த் தெரிவிக்கிறது. பிதாவுக்கும் குமாரனுக்கும் இடையிலான உறவில் அடங்கியுள்ள யாவற்றையும் புரிந்துகொள்ள முயற்சி செய்தல் வீணான விஷயமாக உள்ளது. அவர்கள் ஒன்றாயிருக்கின்றனர், ஆனால் அதே வேளையில் பிதாவாகிய தேவன் அரியணையில் வீற்றிருக்கின்றார், மற்றும் அவரது வலது பாரிசத்தில் குமாரன் இருக்கின்றார். பேதுரு இங்கு திரித்துவம் என்ற பாடக்கருத்தின் நுட்பமான விஷயங்களைக் கையாளவில்லை. படைப்பில் உள்ள வேறு எவருடனும் ஒப்பிடப்பட இயலாத வகையில், மேன்மையான உறவு ஒன்றை இயேசு தேவனுடன் கொண்டிருந்தார் என்பதை அறிக்கையிடுதலும் உறுதிப்படுத்துதலுமே பேதுருவின் அக்கறையாக இருந்தது. தூதர்களானாலும் பூமிக்குரிய யாரானாலும், யாவரும் அவரது கட்டளையின் கீழ் உள்ளனர், சலக "அதிகாரங்களும் வல்லமையும்" அவருக்குத் தரப்பட்டுள்ளன. மேலும் அவர் தமது மக்களின் மேல் ஆளுகை செய்கிறார். அவர்களை அவர் பராமரிக்கிறார், சிட்சித்து வழிநடத்துகிறார். அவர்களுக்கு அவர் அன்பான அரசராக இருக்கிறார்.

## நடைமுறைப் பயன்பாடு

### ஜீவனை விரும்புகிறவர்களுக்கு (3:8-12)

வெறுப்புணர்வு, வன்முறை, சாபங்கள் மற்றும் கோபம் ஆகியவை கொண்ட உலகத்தில் வாழும் மக்கள் நம்மைச் சுற்றிலும் உள்ளனர். அவர்களை அருவருத்துத் தள்ளுவதா அல்லது அவர்கள் மீது பரிதாபம் கொள்வதா என்பது பற்றி எவரும் நிச்சயமான கருத்துக்கொண்டிருப்பது இல்லை. வாழ்வின் அவ்வகையைப் பேதுருவின் பின்வரும் வார்த்தைகளுடன் நேரெதிராக ஒப்பிட்டுப் பாருங்கள்:

> மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதரசிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள் (1 பேதுரு 3:8, 9).

பேதுரு கூறாதது என்ன என்பதை நாம் கவனித்தல் முக்கியமானதாக உள்ளது. வாழ்வின் நன்மையும் நிறைவும், ஒருவர் எவ்வளவு செல்வம் சேர்த்து வைக்கிறார் என்பதன் உற்பத்தியாக இருப்பதில்லை. அல்லது அது மக்கள் எவ்வளவு அதிகாரம் நிறைந்தவர்கள் ஆகின்றனர் என்பதன் உற்பத்தியாகவும் இருப்பதில்லை. பலமான ஒரு மனிதர் எவ்வளவு பேர்களுக்குக் கட்டளையிட முடியும் என்பது நல்ல வாழ்வின் அளவாக இருப்பதில்லை. திருப்தி செய்யும், நல்ல வாழ்வு என்பது அவ்வாறு வருவதில்லை. கிறிஸ்துவை அறிந்துள்ள பல

மக்கள் வாழும் வழியைக் கற்றுள்ளனர்.

கிறிஸ்தவர்கள் பரலோகத்தின் சந்தோஷத்திற்காக ஏங்குகின்றனர்; ஆனால் இயேசு, தம்மைத் தழுவிக்கொள்ளுபவர்களுக்காக, தமது இராஜ்யமான பரலோக ராஜ்யம், மனிதகுல வரலாற்றில் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக்கினார். இன்னும் உணர்ந்தறியக்கூடிய சில விஷயங்கள் உள்ளன, ஆனால் கிறிஸ்துவுக்குள் பரலோக ராஜ்யம் நம்மிடையே உள்ளது. அந்த இராஜ்யத்தை மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு கிறிஸ்தவர்கள் கர்த்தரின் மறுவருகை வரையிலும் காத்திருக்கத் தேவையில்லை (காண்க லூக்கா 17:20ஆ, 21).

கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது வரவிருக்கும் உலகத்திற்காக மாத்திரமானதல்ல. இந்தக் காலத்திலேயே வாழ்வின் திறவுகோலைத் தேவன் தமது மக்களுக்குக் கொடுத்துள்ளார். பேதுருவின் முறையான கூற்று போதுமான அளவு எளிமையாகத் தொடங்குகிறது.

*முதலாவது, இரக்கமுடன் இருக்க வேண்டும் என்பதை நினையுங்கள்.* இரக்கம் என்பது சிறு விஷயங்களில் அன்பு என்பதாக உள்ளது. அது ஒரு புன்சிரிப்பை அளிப்பதாக, ஒரு கதவைத் திறந்து பற்றிக் கொண்டிருப்பதாக, வயதான பெண்மணி ஒருவருக்கு வாசிக்கக் கற்றுக்கொடுத்தலில் உதவுவதாக, தரையைத் துடைப்பதாக, இன்னொரு நபரின் பிரச்சனைகளைக் கவனிப்பதாக, கரத்தைப் பற்றிக்கொள்வதாக உள்ளது. இரக்கத்தில் அடக்கமும் மரியாதையும் அடங்கியுள்ளது.

மற்றவர்கள் காண்கையில், நம்மில் பலர் பெருந்தன்மையுடையவர்களாக, சிந்தனை உடையவர்களாக, மற்றும் அடக்கம் உடையவர்களாக இருக்க முடியும்; காவலற்ற தருணங்களில் நாம் நமது சுயத்தை வெளிப்படுத்துகிறோம். இரக்கம் என்பது அவ்வப்போது வரும் கட்டளை ஒன்றிற்குக் கீழ்ப்படிதல் அல்ல; அது வாழ்வின் வலையில் பின்னப்பட்டுள்ளது. இரக்கம் ஒருக்காலும் முடிவதில்லை.

பேதுரு, இயேசுவின் வாழ்வையும் ஊழியத்தையும் தொகுத்துக் கூற விரும்பியபோது, கர்த்தரின் எளிய இரக்கத்தைப் பற்றிப் பேசிய வார்த்தைகளை அவர் பயன்படுத்தினார்: “அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றுத்திரிந்தார்” (நடபடிகள் 10:38ஆ). மாற்கு சுவிசேஷத்தில், இயேசுவினிடத்தில் ஒரு தொழுநோயாளி வந்து, முழந்தாள்படியிட்டு, “உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்” என்று கெஞ்சினார். இயேசு மனதுருகி, அம்மனிதரைத் தொட்டு அவரை முழுமனிதராக்கினார் (மாற்கு 1:40, 41). இயேசு தொழுநோயாளியைக் குணமாக்கியபோது, அவரது அற்புத வல்லமை பற்றிக் கூறப்பட்டது என்னவாக இருந்தாலும், அது இரக்கத்தின் ஒரு எளிய செயலாக இருந்தது என்பதாகவே இருந்தது.

*இரண்டாவது, தீமைக்கு நன்மை செய்தல் என்பது பரலோக இராஜ்யத்தை மகிழ்வுடன் அனுபவிக்கும் வழியாக உள்ளது.* அவர் சிந்தனையைத் தொடர்ந்து: “தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்” (1 பேதுரு 3:9). இந்த விதிப்படி கிறிஸ்தவர் எவ்வளவாக வாழ்கிறாரோ, அவ்வளவுக்கு

அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்காகக் காத்திருக்கத் தேவையில்லை. அவர்களிடையே இராஜ்யம் உள்ளது.

முன்னதாகப் பேதுரு தமது நிருபத்தில், கிறிஸ்துவின் பாடுகளைப் பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தார்: "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:23). இயேசு முன்னுதாரணத்தை வைத்தார். கர்த்தர் தூஷிக்கப்பட்டார், வையப்பட்டார், ஆனால் அவர் ஒருக்காலும், தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டவில்லை. அதற்குப்பதிலாக அவர் இரக்கம் காண்பித்தார்.

பழிக்குப்பழி என்பது மனிதகுலத்தின் சட்டத்தினுடைய மிகவும் அடிப்படை விதிகளில் ஒன்றாக உள்ளது. இதை "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்" என்று பழைய ஏற்பாடு விளக்கப்படுத்துகிறது (லேவியராகமம் 24:19, 20). தேவனுடைய இராஜ்யத்தில் மக்கள், தீமைக்குத் தீமை செய்யக்கூடாது என்று கூறுகிற வேறுபட்ட விதியைக் கொண்டு வாழ்கின்றனர். பேதுரு மக்களினங்களின் நாட்டுச் சட்டங்களை உரைக்கவில்லை. அவர் தமது வாசகர்களைத் தனிநபர்கள் என்ற வகையில் வைத்துப் பேசினார். "பழிவாங்குதல் உங்களைப் பட்சிக்க அனுமதிக்காதிருங்கள்" என்று அவர் கூறினார். "தேவனுடைய இராஜ்யம்" என்ற சொற்றொடரை அப்போஸ்தலர் இவ்விடத்தில் பயன்படுத்தவில்லை. மாறாக அவர் வாழ்வைப் பற்றிப் பேசினார். வாழ்வு என்பதே தேவனுடைய இராஜ்யமாக உள்ளது. பழிக்குப்பழி என்பது ஒருவரது வாழ்வில் முக்கியமானதாயிருந்தால், அவர் வாழ்வைக் கொண்டிருக்கமாட்டார்.

பேதுருவின் இந்த நிருபத்தை வாசித்த கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்காகப் பாடநுபவித்தல் என்றால் என்ன என்பதை அறிந்திருந்தனர். அவர்கள் பாடநுபவித்த சில சிஷயங்களில் அதைச் சரிக்கட்டும் வல்லமையையும் அவர்கள் கொண்டிருந்தனர். சில ஆண்டுகளுக்கு முன்னர், டெக்ஸாஸ் நகரில் ஒரு பெண் இருந்தாள், அவள் ஓரளவு செல்வம் கொண்டவளாக இருந்தாள், அவளது கணவர் இன்னொரு பெண்மேல் நோக்கமாயிருப்பதை அவள் கண்டறிந்தாள். அவள் ஒரு ஹோட்டலில் வெளிப்புறத்தில் காத்திருந்து, அவர் வெளியே வந்தபோது, அவள் தனது காரை இயக்கி அவர் மீது ஏற்றினாள். அவர் இறந்துபோனார். அவள் பழிவாங்கிவிட்டாள். அந்தப் பழிவாங்குதல் தனக்கு என்ன மகிழ்வைத் தரும் என்று அவள் கற்பனை செய்தாள்? அநீதியை மனதில் பேணுபவர்களாக அநேகர் இரவு வேளையில் தங்கள் படுக்கையில் கிடக்கின்றனர். அவர்கள் அதைப் பற்றி என்ன செய்யலாம் என்று கற்பனை செய்கின்றனர், எப்படி பழிவாங்குவது என்று நினைக்கின்றனர். இப்படிப்பட்ட வட்டாரத்தில் உள்ள மனங்கள் தேவனுடையை இராஜ்யத்தில் இருந்து தொலைவில் விலக்கப்பட்டு இருக்கின்றன.

ஒரு நபர், குற்றப்படுத்தும் வார்த்தையை, அவமானத்தை, சுவையற்ற குறிப்பு ஒன்றை, கூறப்படாதது போன்று பக்கமாகச் சரிய அனுமதிக்கக் கூடியவராக இருக்கும்போது, அது ஆசீர்வதிக்கப்பட்ட நிலையாக உள்ளது. ஒரு நபர், தமக்கு இழைக்கப்பட்ட நிந்தைக்குப் பதிலாக ஆசீர்வாதத்தைத் திருப்பிக்கொடுக்கக் கூடும்போது, அது அவருக்கு ஒரு வெகுமதியாக உள்ளது. நமது விரோதியைத் தீர்த்துக்கட்ட இயேசு செயல்விளைவு மிக்க

வழியொன்றைப் போதிக்கிறார். அவரை நண்பராக்கிக் கொள்ளுங்கள்.

*மூன்றாவது, உங்கள் நாவைக் கட்டுப்படுத்துங்கள்,* பேதுரு, 1 பேதுரு 3:10, 11 வசனங்களை எழுதும்போது, அந்த அப்போஸ்தலர் சங்கீதம் 34:12, 13 வசனங்களை நினைவூட்டினார்: "நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்? உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்." இயேசு, "மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்" என்று கூறினார் (மத்தேயு 12:36, 37). தாங்கள் நாவைக் கட்டுப்படுத்தத் தவறுகிறவர்களிடம் இருந்து தேவனுடைய இராஜ்யம் தப்பிச்சென்றுவிடும்.

*தொகுப்புரை.* உலகத்தின் துயரம் மற்றும் வேதனை மத்தியில், வாழ வழியை அறிந்த மக்களை கண்டறிய முடியும். அவர்களின் குடும்பங்கள், அவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதை, அவர்களைக் குறித்து மற்றவர்கள் பேசுவது, அவர்கள் அணிந்துள்ள புன்னகை - இவையாவும், வாழ்வின் சமாதானத்திற்கும் சந்தோஷத்திற்கும் சாட்சிகளாக உள்ளன. கிறிஸ்துவின் வாழ்வில் பங்களித்த மூன்று முக்கியமான விஷயங்களைப் பேதுரு இங்கு அளித்தார். அவை. (1) இரக்கமுள்ளவர்களாக இருக்க நினையுங்கள், (2) தீமைக்கு நன்மை செய்யுங்கள் மற்றும் (3) நாவைக் காவல் செய்யுங்கள்.

## பதில் பரிகாரம் (3:18)

பதிலாக சிலவற்றைச் செய்தல் என்பது இன்னொருவரின் அனுபவங்களின் மூலமாக அதைச் செய்தலாக உள்ளது. இயேசு தாம் செய்திராத பாவங்களுக்காகச் சிலுவையில் பாடுபட்டார் என்பது கிறிஸ்தவத்தின் மிகவும் அடிப்படையான உபதேசங்களில் ஒன்றாக உள்ளது. இயேசுவைப் பற்றி யோவான், "அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை" என்று கூறினார் (1 யோவான் 3:5). இயேசு பாவமற்றவராக இருந்ததால், நாம் செய்துள்ள பாவங்களுக்காக நமக்குப் பதிலாக அவர் பாடுபட முடிந்தது. அவ்வாறு நமது பாவங்களுக்கான கிரயம் செலுத்தப்பட்டது. பாவத்திற்கு எதிரான தேவனுடைய கோபமும், நியாயத்திற்கான அவரது விதியும் சிலுவையில் திருப்தி செய்யப்பட்டது. நாம் விரோதிகளாக இருந்தபோதிலும், மன்னிக்கப்பட்டவர்களாக அவரது பிரசன்னத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளோம். இயேசுவினால் நமக்குக் தரப்பட்டுள்ள இந்த வாழ்வில் நிகழ்காலத்தில் நாம் பங்கடைகிறோம், மற்றும் கர்த்தர் தமது முழுமகிமையில் திரும்பி வருவார் என்பது நமது நம்பிக்கையாக உள்ளது. அப்போது தேவனுடைய ஆசீர்வாதங்களின் பரிபூரணம் யாவும் பங்கேற்கும்படி அவரது மக்களுக்குரியதாக இருக்கும்.

---

**குறிப்புகள்:**

[1]Origen *Contra Celsum* 3.55. [2]"அலங்கரிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள

*kosmos* என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் அடிக்கடி எதிர்மறை அர்த்தம் தரும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது "உலகப்பிரகாரமான" அல்லது அதுபோன்ற அர்த்தம் கொண்டுள்ளது. இவ்வசனத்தில் அது அப்படிப்பட்ட கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை. கிரேக்கர்கள், தாங்கள் வாழ்ந்த உலகமானது அழகானது என்றும் நன்கு விகிதமுள்ள அளவில் உள்ளது என்றும் நினைத்தனர். இவ்வாறாக இவ்வார்த்தை, அழகுநிறைந்த மற்றும் நன்கு அலங்கரிக்கப்பட்ட எந்த விஷயத்திற்கும் ஒரு குறிப்பு பெயராயிற்று. [3]J. Ramsey Michaels, *1 Peter,* Word Biblical Commentary, vol. 49 (Waco, Tex.: Word Books, 1988), 159; Plutarch *Moralia* 141E. [4]Josephus *Antiquities* 4.8.15. [5]Josephus *Against Apion* 2.25. [6]NASB வேதாகமம் இந்தக் கிரேக்கச் சொற்றொடரின் கருத்துணர்வை நன்கு படம்பிடிக்கிறது. அதிக இலக்கியத்துவமாகக் கண்ணோக்கினால், இவ்வார்த்தைகள் "பெண் என்ற பாத்திரம் மிகவும் பலவீனமானது" என்றே கூருவதாக உள்ளன. "மனைவியானவள்" என்று தமிழ் வேதாகமத்திலும் "பெண்" என்று ஆங்கில வேதாகமத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள *(gunaikeios* என்ற) கிரேக்க வார்த்தை, புதிய ஏற்பாடு முழுவதிலும் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே காணக்கிடைக்கிறது. "பாத்திரம்" *(skeuos)* என்ற வார்த்தை பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு வகையான பொருளைக் குறிக்கிறது, சிலவேளைகளில் ஒரு ஜாடியை அல்லது கலனைக் குறிக்கிறது. இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளபடி, 1 தெசலோனிக்கேயர் 4:5ல் செய்கிறபடியே, பெண்ணின் இயல்பான உடலைக் குறிக்கிறது. [7]Ignatius *Philadelphians* 1. [8](கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட) இளைய பிளீனிக்கு எழுதிய ***கடிதங்களில்,*** கூச்சப்படாத சுபாவத்துடன் ரோம மனிதர்கள் தங்கள் சுய மகிமையைத் தேடிய நிலையைப் பற்றி விவரிக்கும் குறிப்புகளை ஏற்படுத்தினார். தமது நண்பரான மேக்ஸிமஸ் என்பவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் அவர், தலா மூன்று தினேரியங்களுக்கு (நயமான கூலி) கூலிக்கு அமர்த்தப்பட்ட இரு அடிமைகள் பார்வையாளர்கள் மத்தியில் அமர்ந்து ஒரு குறிப்பிட்ட பேச்சாளர் பேசியபோது கைதட்டியதைக் குறிப்பிட்டார். என்ன கூறப்பட்டது என்பதைப் பற்றிய கருத்து எதுவும் அந்த அடிமைகளுக்குத் தெரியவில்லை மற்றும் "அவர்களின் பாராட்டுதலை பற்றிய காலமானது, குறிப்பு எதுவும் காட்டப்படவில்லை என்றால் வீணானதாக இருக்கும்" என்றும் கூறினார். (Pliny the Younger *Letters* 2.14.) [9]Ernest Best, *1 Peter*, The New Century Bible Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1971), 130; *The Community Rule* (1QS) 1.4. [10]Carroll Stuhlmueller, Dianne Bergant, et al., eds. *The Collegeville Pastoral Dictionary of Biblical Theology* (Collegeville, Minn.: Liturgical Press, 1996), 714.

[11]J. N. D. Kelly, *A Commentary on the Epistles of Peter and of Jude,* Black's New Testament Commentaries (London: Adam & Charles Black, 1969), 141. [12]"மனச்சாட்சியுடமை" என்ற கருத்தில் இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டிருத்தலுக்கு 2:19ன் மீதான விளக்கங்களைக் காணவும். [13]3:16ல் (வெட்கப்படும்) "படிக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *hina* என்ற வார்த்தையானது சிலவேளைகளில் விளைவை விளக்கப்படுத்துகிறது. பின்வரும் புத்தகத்தில் இதைக் காணவும்: Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 477. [14]Best, 134. [15]இந்த விளக்கத்திற்கான விஷயம் Michaels, 191-92 என்ற புத்தகத்தில் நன்கு உரைக்கப்பட்டுள்ளது. [16]Sirach 41:12 (REB). [17]பரலோகத்தில் கிறிஸ்துவின் பலி என்றென்றைக்கும் நடைபெறுவதாக, அதாவது திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்போது இயேசு உண்மையிலேயே பாடநுபவிக்கிறார்

என்ற கருத்தை ரோமன் கத்தோலிக்க இறையியல் பற்றிக்கொண்டுள்ளது. பேதுருவின் நிருபம் மற்றும் எபிரெயருக்கு எழுதிய நிருபம் ஆகியவை இந்த உபதேசத்தை ஒயப்பண்ணுகின்றன. See "Eucharist" in The *Oxford Dictionary of the Christian Church,* 2d ed., ed. F. L. Cross and E. A. Livingstone (Oxford: Oxford University Press, 1974), 475–77. [18]பாதாள உலகத்திற்கு இயேசு இறங்கிச் சென்றது பற்றி, மெக்குல்லோக் அவர்கள், "குறைந்த பட்சம் இரண்டாம் நூற்றாண்டில் இருந்து, பாதாளத்திற்கு இறங்குதல், மரணம் மற்றும் பாதாளத்தை ஜெயித்தல், மரித்தோருக்குப் பிரசங்கித்தல் மற்றும் ஆத்துமாக்களை விடுவித்தல் ஆகியவை உள்ளடக்கிய நம்பிக்கையைக் காட்டிலும், மிகவும் நன்கு அறியப்பட்டதும் பிரபலமானதுமான நம்பிக்கை வேறு எதுவும் இல்லை" என்று எழுதினார். (J. A. MacCulloch, *The Harrowing of Hell: A Comparative Study of an Early Christian Doctrine* [Edinburgh: T. & T. Clark, 1930], 45.) [19]*En hoi* என்ற சொற்றொடர் மற்ற வழிகளிலும் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. மேலே பட்டியல் இடப்பட்டுள்ள மாற்றுக்கருத்துகள் மிகப்பலத்த ஆதரவைக் கொண்டுள்ளன. இங்கு உள்ள இலக்கணரீதியான பிரச்சனைகளை விவாதிக்க இது இடமல்ல. ஆர்வம் உள்ளவர்கள் *Michaels,* 205 என்ற புத்தகத்தில் காணலாம். [20]D. A. கர்ஸன். "Reflections on the Book *I Just Want to be a Christian* by Dr. Rubel Shelly." இந்த உரைத்தாளை www.mun.ca/rels/restmov/texts/rmeyes/carson.html என்ற வலைத்தளத்திலும் காணமுடியும் கர்ஸன் அவர்கள், "அதேவேளையில் இது [அமெரிக்க மீளக்கட்டுவித்தல் இயக்கம்] ஞானஸ்நானம் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை மேம்படுத்திற்று, இந்தக் கண்ணோட்டம், அமெரிக்க மீளக்கட்டுவித்தல் இயக்கத்தினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட சபைக்குழுமங்களின் வட்டாரத்திற்குப் புறம்பே ஏறக்குறைய வேறு எந்தக் குழுமத்தினாலும் தழுவப்படவில்லை" என்று எழுதினார். ஒருவர் ஞானஸ்நானம் பெறும்போது தேவன் செயல்பட்டு கீழ்ப்படியும் விசுவாசியின் பாவங்களைப் புறம்பே நீக்கிப்போடுகிறார் என்ற கோட்பாட்டை அமெரிக்க மீளக்கட்டுவித்தல் இயக்கம் கொண்டிருந்ததாக கர்ஸன் புரிந்துகொண்டிருந்தார் என்பதே இங்கு யூகிக்கப்பட்ட கண்ணோட்டமாக உள்ளது. உண்மையில் இந்தக் கண்ணோட்டம், சபை வரலாற்றின் பழங்காலம் தொடங்கி தற்காலம் வரையிலும் மற்றும் பலதரப்பட்ட கிறிஸ்தவப்பாரம்பரியங்களாலும் பதிவு செய்யப்பட்டதாகும்.

[21]எவரெட் ஃபெர்கூஸன் அவர்கள், பாவமன்னிப்புக்கென்றே ஞானஸ்நானம் உள்ளது என்ற புரிந்துகொள்ளுதல் உள்ள காலகட்டத்தைக் காண்பிக்கும் சபையினுடைய பரவலான பதிவேடுகளை இரண்டாம் நூற்றாண்டுப் புத்தகங்களில் இருந்து எடுத்துச் சேர்த்துள்ளார். இது புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலகட்டத்திற்கு முன்பே நிலவிய உபதேசமாகும். அவர், "ஞானஸ்நானம் பற்றி இரண்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் கூறப்பட்ட உரைகளின் வலிவும் ஒன்றிப்பும், சபையின் தொடக்ககாலத்தில் இருந்தே ஞானஸ்நானத்திற்கும் பாவமன்னிப்பிற்கும் இடையில் நேரடியான உறவு இருந்தது என்று காண்பிக்கின்றன" என்று எழுதினார். (Everett Ferguson, *Early Christians Speak* [Austin, Tex.: Sweet Publishing Co., 1971], 38.) [22]Fred Gealy, "The First and Second Epistles to Timothy and the Epistle to Titus, Introduction and Exegesis," in *The Interpreter's Bible,* ed. George A. Buttrick (New York: Abingdon Press, 1955), 11:453. [23]Edward Gordon Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text, with Introduction, Notes, and Essays,* Thornapple Commentaries, 2d ed. (London: Macmillian & Co., 1947; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1981), 83. [24]"சான்று காண்பித்தல்" என்பதன் மூலம் ஒருவர் அர்த்தப்படுத்துவது

*என்ன என்பது பிரச்சனைக்குரியதாக உள்ளது. ஐக்கிய வேதாகம சங்கத்தார்களால் வெளியிடப்பட்டுள்ள கிரேக்க மொழி புதிய ஏற்பாட்டில் மிகப்பழைய பதிப்புகளில், பிற்சேர்க்கை ஒன்று "மேற்கோள்களின் அகரவரிசை" என்பதாக உள்ளது. சான்று காண்பித்தல் என்பது மேற்கோள் காட்டுதல் என்பதற்குச் சமமானதாக நாம் கருதினால், சங்கீதங்களின் புத்தகத்தில் இருந்துதான் பெரும்பான்மையும் சான்றுகாண்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய வேதாகம சங்கத்தாரின் மிகச்சமீபத்தி ய பதிப்பு ஒன்றில், "மேற்கோள்களின் அகரவரிசை" என்பதற்குப் பதிலியாக "ம றைவான கருத்துக்கள் மற்றும் வாய்மொழி வார்த்தைகளின் இணைகருத்துக்கள்" என்ற பிற்சேர்க்கையைக் கொண்டுள்ளது. விரிவான வகைப்பாட்டைப் பயன்படுத்தினால். சங்கீதங்களின் புத்தகத்தைக் காட்டிலும் அதிகம் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட ம ற்ற பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களும் உள்ளன.*